# யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டதாரிப்பிரிவு
# 1947 - 1974

JAFFNA COLLEGE
1823 CEYLON 1872

வண.ஜி.நடராஜா

# யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டதாரிப்பிரிவு
# (1947 - 1974)

## வண.ஜி.நடராஜா

யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.

**Title** : Undergraduate Department
1947-1974

**Author** : Rev.G.Nadarajah, M.A, Dip in Ed.,

B.D

**Address** : Jaffna College
Vaddukoddai
Sri Lanka.

**Edition** : February 2004

**Printer** : Bastian Press,
Chundikuli,
Jaffna.

**Copies Available at :**

Rev.G. Nadarajah,
College Flats,
Vaddukoddai.

**தென்னிந்திய திருச்சபை - யாழ்ப்பாணப்பேராயம் பேராயர் எஸ்.ஜெபநேசன் அவர்கள் வழங்கிய**

# அணிந்துரை

## பேராயர் எஸ்.ஜெபநேசன்

1947ம் ஆண்டு தொடக்கம் 1974ம் ஆண்டு வரை வட்டுக்கோட்டையில் இயங்கி வந்த யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப்பிரிவினைப் பற்றி வண.G.நடராஜா அவர்கள் இந்த நூலை எழுதியுள்ளார்.வட்டுக்கோட்டையில் மிக நீண்ட காலமாக உயர் கல்வி முயற்சிகள் நடைபெற்றன. வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு பெயர்களுடன் அவை இயங்கி வந்தன. 1816ம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்த அமெரிக்க மிஷனரிமார், **"கல்வியே எல்லாவிதமான முன்னேற்றங்களுக்கும் ஒரே வழி"** என்ற திடமான நம்பிக்கையுடன் தமது பணியை ஆரம்பித்தார்கள். அத்துடன் கல்விப்பரம்பல் கிறிஸ்தவ சமய வளர்ச்சிக்கு சாதகமாக அமையும் என்றும் நினைத்தார்கள்.

அமெரிக்க மிஷனின் மூத்த முதல்வரான கலாநிதி டானியல் பூவர் 1823ம் ஆண்டிலேயே யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழக கல்லூரி அமைக்கப்பட வேண்டும் என்று விரும்பினார். ஆனால் ஆரம்பத்திலிருந்தே பலவிதமான பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. பிரிட்டிஷ் அரசினரின் எதிர்ப்பு, பொஸ்டனில் இருந்த தாய்ச்சபையின் ஆதரவின்மை, பேராசிரியர்கள் பற்றாக்குறை எல்லாவற்றையும் அவர் சமாளிக்க வேண்டியதாயிற்று. எனினும் அவர் சோர்ந்து போகவில்லை. 1823ம் ஆண்டு வெளியிட்ட கல்லூரித் திட்டத்தில் இக் கல்லூரிக்கு ஒரு தலைவரும் மூன்று அமெரிக்கப் பேராசிரியர்களும் ஒரு சுதேச சமஸ்கிருதப் பேராசிரியரும் ஒரு சுதேச தமிழ் பேராசிரியரும் இருப்பார்கள் என்று எழுதினார். ஆனால் அமெரிக்கப் பேராசிரியர்கள் வருவதற்கு பிரிட்டிஷ் அரசு தடை விதித்தது.

1833ம் ஆண்டு இந்தத் தடை நீங்கும்வரை டானியல் பூவர் அவர்களே கல்லூரித் தலைவராகவும் கணிதப் பேராசிரியராகவும் விஞ்ஞானப் பேராசிரியராகவும் கிறிஸ்தவத்தின் பேராசிரியராகவும் விஞ்ஞானப் போசிரியராகவும் பணியாற்றினார்.

R. Rajapakse என்னும் அறிஞர் தாம் எழுதிய Christian Missions, Theosophy and Trade" A.History of American Relations with Ceylon 1815 - 1915" என்ற ஆய்வுக்கட்டுரையில் 1823ம் ஆண்டிலேயே அமெரிக்க மிஷனரிமார் யாழ்ப்பாண மக்களுக்கு ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்கல்வி ஆகியவற்றை கொண்ட ஒரு சம்பூரணமான கல்வித்திட்டத்தை வழங்கிவிட்டனர் என்று குறிப்பிட்டார்.

1823ம் ஆண்டு உதயமான வட்டுக்கோட்டை செமினரி 1855ம் ஆண்டு வரை நடைபெற்றது. வட்டுக்கோட்டை செமினரியை மூடுவதற்கு வந்த ரூபஸ் அன்டர்சனைக் காணாமலேயே நான் மரித்து விடுவது நல்லது என்று பூவர் எழுதினார். 1855ம் ஆண்டு ரூபஸ் அன்டர்சன் பம்பாய்க்கு வந்து விட்டார் என்று அறிந்தவுடன் டானியல் பூவரும் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

1872ம் ஆண்டு வட்டுக்கோட்டை செமினரி இயங்கிய இடத்தில் யாழ்ப்பாணக்கல்லூரி உதயமானது. வட்டுக்கோட்டை செமினரியின் கடைசி அதிபரே யாழ்ப்பாணக்கல்லூரியின் முதல் அதிபரானார். 1872ம் ஆண்டிற்குப் பின்னர் பல்வேறு விதமான உயர்கல்வி முயற்சிகள் இங்கு நடைபெற்றன. முதலில் கல்கத்தா பல்கலைக் கழகத்திற்கும் பின்னர் சென்னை பல்கலைக்கழகத்திற்கும் யாழ்பாணக்கல்லூரி இணைப்புப்பெற்றது. பின்னர் வெவ்வேறு பிரச்சினைகளினால் உயர்கல்வி முயற்சிக்கு தடங்கல் ஏற்பட்டிருந்தது. 1947ம் ஆண்டு மீண்டும் பட்டதாரிப்பிரிவு ஆரம்பமாகியது. இது இலண்டன் பல்கலைக்கழகப் பரீட்சைக்கு மாணவர்களைப் பயிற்றுவிக்கும் முயற்சி. அமெரிக்காவில் இருந்து வந்த வண.S.K. பங்கர் பட்டதாரிப்பிரிவின் தலைவரானார்.

1974ம் ஆண்டு பட்டதாரிப்பிரிவு மூடப்பட்டாலும் 1960ம் ஆண்டிலே இன்னொரு பிரச்சினை தோன்றிவிட்டது. இலண்டன் பல்கலைக்கழகப் பரீட்சைகள் இலங்கையிலேயே நிறுத்தப்பட்டன. பேராதனையிலிருந்த இலங்கைப் பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களை தயார் செய்யும் நிலை உருவானது. இப்பணியை யாழ்ப்பாணத்திலிருந்த தனியார்நிறுவனங்களும் செய்யத் தொடங்கின. 1974ம் ஆண்டு அரசினர் சுவீகரிப்பின் காரணமாக யாழ்ப்பாணக் கல்லூரியின் இயக்குனர் சபை அதனை மூடியது.

பட்டதாரிப்பிரிவின் வரலாற்றை யான முழுமுற்றாகப் பார்த்தவன். பட்டதாரிப்பிரிவு ஆரம்பமான பொழுது எனக்கு வயது ஏழு. அது மூடப்பட்டபொழுது எனக்கு வயது 34. அங்கு கற்பித்த அமெரிக்க அறிஞர்களுடனும் இந்திய அறிஞர்களுடனும் சுதேச அறிஞர்களுடனும் நான் நன்கு பழகியிருக்கிறேன். நான் 1988ம் ஆண்டு யாழ்ப்பாணக்கல்லூரியில் அதிபரானபோது பட்டதாரிப்பிரிவை மீண்டும் ஆரம்பிப்பதற்கு மிகுந்த ஆவலாயிருந்தேன். அப்பொழுது யாழ் பல்கலைக்கழக துணைவேந்தராக இருந்த பேராசிரியர்.அ.துரைராஜா அவர்களும் வெளிவாரிப் பட்டப்படிப்பின் பீடாதிபதியாக இருந்த பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை அவர்களும் எனக்கு மிகுந்த உற்சாகமளித்தனர்.

பட்டப்படிப்பு யாழ்ப்பாணக்கல்லூரியில் நடைபெற வேண்டும் என்பதனை அக்கல்லூரி வரலாற்றை அறிந்தவர்கள் எல்லோருமே ஏற்றுக்கொள்வார்கள். வண.G.நடராஜா அவர்களுடைய இந்த நூல் உயர கல்வி முயற்சிக்கு உந்துதல் அளிக்கும் என்பது எனது நம்பிக்கை.யாழ்ப்பாணக்கல்லூரியிலுள்ள பாசத்தினாலும், உயர் கல்வியில் உள்ள நாட்டத்தினாலும் வண.G.நடராஜா இந்த நூலை எழுதியுள்ளார்.

டாக்டர் டானியல் பூவர் என்ற புனிதனின் இலட்சியக் கனவு பொய்யாய், பழங்கதையாய், கனவாய் மெல்லப் போகாமல் தடுப்பது நம் ஒவ்வொருவரினதும் கடைமையாகும்.

பேராயர். எஸ். ஜெபநேசன்
தென்னிந்திய திருச்சபை

# அணிந்துரை


## நோயல் விமலேந்திரன்

(B.Sc.Dip.in.Edu, M.A(Comp Ed) Lond, Cer.Ecu, Studies (Swiss) Cert, COUN(AHC)

அதிபர் யாழ்ப்பாணக்கல்லூரி

வட்டுக்கோட்டை


19ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே யாழ்ப்பாணத்தில் மேலைத்தேய கல்வி மணம் வீசஉருவாகிய ஒரு அமைப்பே வட்டுக்கோட்டை செமினரியாகும். அமெரிக்க கிறிஸ்தவ மிஷனரிமாரால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வியக்கம் அறியாமை என்ற இருளில் தட்டுத்தடுமாறி வாழ்ந்த மக்களுக்கு அறிவு என்ற ஒளி உலகிற்கு அழைத்துச் செல்லும் பயணத்தை ஆரம்பித்தது. ஒளியூட்டிக் கொண்டே அந்தப் பயணம் இன்றும் தொடருகின்றது. அந்தக் கற்களும் முட்களும் நிறைந்த கரடு முரடான பாதையில் கல்விஒளி என்ற இலக்கை நோக்கிய பயணம் எவ்வாறு இருந்தது என்ற கதையினை அழகாக வரலாற்று ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு வணக்கத்துக்குரிய தி.ஜி.நடராஜா அவர்கள் இந்த நூலில் வடித்துள்ளார்கள் ஒரு வகையில் இந்நூல் யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரிப்பிரிவின் வரலாற்று நூலே.

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரிப்பிரிவின் தோற்றம், அந்தப்பிரிவு உருவாகும் வேளையில் யாழ்ப்பாணச் சமூகம் இருந்த நிலை, அந்த சமூகத்தினிடையே தோன்றிய இந்நிலையம் கல்விசார் துறைகளில் கண்ட வளர்ச்சி தென்னிலங்கை மக்களுக்கு கிடையாத ஒரு வரப்பிரசாதம் வடபுல மக்களுக்கு கிடைத்தமை உயர்

கல்வியைத் தொடர்வதில் மக்கள்காட்டிய உற்சாகம், அவ்வப்போது ஏற்பட்ட நெளிவுகள் சுழிவுகள் போன்ற பல அம்சங்களையும் இந் நூல் தன்னகத்தே கொண்டுள்ளது. உண்மையில் யாழ்ப்பாண சமூகம் படித்த சமூகம் என்ற உயர் நிலையில் வைத்து எண்ணப்படுவதற்கு இது போன்ற கல்வி நிறுவனங்களே காரணம் ஆகும். தென்னிலங்கை மக்கள் யாழ்ப்பாண மக்கள் மீது எரிச்சல் கொள்வதற்கு பிற்காலத்தில் ஏற்பட்ட பல பிரச்சினைகளுக்கும் கூட இக்கல்வித்துறையின் முன்னேற்றமே பின்புலமாக இருந்தது எனப் பலர் கூறுவர்.

இந்நூலிலே ஏறத்தாழ இரு நூற்றாண்டு கால வரலாறு காணப்படுகிறது. கல்வி சார்நிறுவனம் ஒன்றின் வரலாற்று ஆய்வாக வெளிவரும் இந்நூல் ஒரு புதிய தடத்தினைப் பதிக்கின்றது. அறிவொளி வீசும் இவ் ஆராய்ச்சிநூல் உண்மை நிகழ்ச்சிகளை அவற்றின் சரியான தோற்றங்களிலே வெளிப்படுத்தி நிற்கின்றது. சவால்கள் நிறைந்த சமூகம் முழுவதும் வேர்விட்டுத் தளைத்தெழுந்த இந்த நிறுவனத்தின் வரலாறும் அதே சமூகத்திற்கு பயனளித்த தன்மையையும் நூலாசிரியர் முடிந்தளவிற்கு தெளிவாகக் காட்டியுள்ளார். காலத்தின் பதிவுகள் அடுத்த சந்ததிக்கு நிச்சயமாகத் தேவை. தம்முன்னோர் கடந்து வந்த பாதையை எதிர்கால சமூகம் அறிய இந்நூல் உதவுகின்றது. கல்வித்துறை சார்ந்த ஆய்வாளர்களுக்கு பயனுள்ள தகவல்களையும் விளக்கப் படங்களையும் இந்நூல் கொண்டுள்ளமை சிறந்த அம்சமாக சாதாரண மக்களும், மாணவர்களும், ஆசிரியர்களும் படிக்கத்துணை நிற்கும் நூலாகவும் இது அமைந்திருக்கின்றது. வண.ஜி.நடராஜா தனது ஆற்றலாலும் கல்வித்துறையில் அவர் கொண்டுள்ள ஆர்வத்தாலும் பல நுண்ணிய விடயங்களை ஆழமாக சிந்தித்து தம்மை செழுமைப்படுத்தி நூலை வளப்படுத்தியிருப்பதை ஆங்காங்கே அவதானிக்க முடிகின்றது.

நோயல் எ. விமலேந்திரன்
அதிபர்,யாழ்ப்பாணக்கல்லூரி
வட்டுக்கோட்டை.

# முன்னுரை

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு விதமான உயர்கல்விப் பிரிவுகள் அமைந்திருந்தன. 1823ம் ஆண்டு முதல் 1974ம் ஆண்டு வரை ஏதோ ஒரு வகையிலான உயர்கல்விப் பிரிவுகள் யாழ்ப்பாணக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்று வந்தன. இதிலே இறுதியாக இயங்கிய உயர்கல்விப் பீடந்தான் பட்டதாரிப்பிரிவாகும். இது 1944-1974ம் ஆண்டு வரை இயங்கி வந்தது. இதன் தலைவராக வண.எஸ்.கே பங்கர் அவர்களும் கலாநிதி லூதர் ஜெயசிங்கம் அவர்களும் பணியாற்றியிருக்கின்றனர். சிறிது கால இடைவெளியின் பின்னர் மீண்டும் 1990ம் ஆண்டு முதல் இன்று வரையும் இயங்கி வருகின்றது. இப்பட்டதாரிப்பிரிவு முதலில் இலண்டன் பல்கலைக்கழக பரீட்சைகளுக்கும், பின்னர் பேராதனைப்பல்கலைக்கழகப் பரீட்சைகளுக்கும் மாணவர்களைத் தயார் செய்தது. இப்பட்டதாரிப்பிரிவினால் பல இலண்டன் பட்டதாரிகளும் இலங்கைப் பட்டதாரிகளும் உருவாக்கப்பட்டனர். தற்பொழுது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டப்பரீட்சைகளுக்கும் மாணவர்களைத் தயார்படுத்தி பட்டதாரிகளை உருவாக்குகின்றது. பல உயர்ந்த ஆய்வுரைகளும் சஞ்சிகைகளும் வெளியிடப்பட்டன. ஒரு சிறந்த நூல்நிலையம் இயங்கி வந்தது. எனவே இதனுடைய கல்விப்பணி பற்றி ஆராய்வது மிகுந்த பயனைக் கொடுக்கும் என எண்ணினேன்.

பட்டப்பின் படிப்பு கல்வி தகைமை சான்றிதழ் பயிற்சி நெறிக்காக "யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டதாரிப் பிரிவு கல்விக்கு ஆற்றிய சேவை" என்ற தலைப்பில் நான்கு அத்தியாயங்களை மட்டும் ஆய்வுக்காக சமர்ப்பித்திருந்தேன். ஆனால் இந்நூலில் மேலும் இரண்டு அத்தியாயங்களை சேர்த்து ஆறு அத்தியாயங்களாக இந்நூலை உருவாக்கி உள்ளேன்.

இந்த ஆய்வினை நிகழ்த்தியதற்கு எனக்கு துணை நின்றோர்க்கு நன்றி செலுத்துவது என் கடமையாகும். முதற்கண் இந்த ஆய்வை மேற்கொள்வதற்கு எனக்கு வாய்ப்பளித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற் புலத்துக்கும், எனது ஆய்வைத் தொடர இசைவு நல்கிய கல்வியியற் புலத்தலைவர் பேராசிரியர் வ.ஆறுமுகம் அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக.

ஆய்வினைத் தொடரும் போது இத்தலைப்பினைத் தெளிவாக வரையறுத்துத் தந்தும், ஆய்வினைத் தொடங்கிய பின் அதில் ஆர்வத்தோடு ஈடுபடச்செய்து ஆய்வில் அவ்வப்போது ஏற்பட்ட ஐயப்பாடுகளை நீக்கியும் வழிகாட்டியாக இருந்து என்னை ஆற்றுப்படுத்தியதோடு நூலுருவில் வருவதற்கு வேண்டிய புகைப்படங்களை தெரிவுசெய்து தந்தவர் பேராயர் அதி.வண.கலாநிதி எஸ்.ஜெபநேசன் அவர்களே. அன்னாருக்கு என் உள்ளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூலை வெளியிடுவதற்கு உற்சாகப்படுத்தியும் அணிந்துரை வழங்கியும் உதவிய கல்லூரி அதிபர் திரு.N.A.விமலேந்திரன் அவர்களுக்கும் நன்றி உரித்தாகுக.ஆய்வை மேற்கொள்ளும் நோக்குடன் நேரில் சென்று விசாரித்தபோது பல மணித்தியாலங்கள் பொறுமையாக இருந்து பெறுமதிமிக்க குறிப்புக்களையும், தகவல்களையும், சஞ்சிகைகளையும் தந்துதவிய திரு.N.S.பாலசிங்கம், அமரர் திரு.ஆர்.பாலசுப்பிரமணிய ஐயர் திரு.V.செல்வரட்ணம், திரு.Aகுமாரவேல் ஆகியோருக்கு நன்றிகள் உரித்தாகுக.

இவ்வாய்வுரைக்கு வேண்டிய நூல்களையும் சஞ்சிகைகள், பத்தரிகைகள், புகைப்படங்கள் ஆகியவற்றைத் தந்துதவிய யாழ்ப்பாணக்கல்லூரி முன்னைநாள் நூலகர் திரு.R.கனகரட்ணம் தற்போதைய நூலகர் செல்வி.S.P.குலசிங்கம் ஆகியோருக்கும் கையெழுத்துப் பிரதிகளை வாசித்து உரிய அபிப்பிராயங்களை தெரிவித்து உதவிய திரு. Kசதாசிவம், திரு. N.S.செல்வராஜா ஆகிய ஆசிரியர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் கடமைப்பாடும் உண்டு

இறுதியாக அழகுற அச்சடித்து நூல்வடிவம் கொடுத்த அச்சகத்தினருக்கும் கணணியில் பிரதியாக்கம் செய்துதந்த திரு.வில்லியம் சாந்தகுமார் அவர்கட்கும் அட்டைப் படத்தை வரைந்து உதவிய திரு.M.பார்த்தீபன் அவர்கட்கும் எனது நன்றி.

வண.ஜி.நடராஜா

# பொருளடக்கம்

1) பட்டதாரிப்பிரிவின் தோற்றமும் அதனை உருவாக்கிய சூழலும் 1-18

i) வட்டுக்கோட்டையில் உயர் கல்வி

ii) பட்டதாரிப் பிரிவின் தோற்றம்

iii) யாழ்ப்பாணக்கல்லூரிப் பொதுக் கூட்டம்

iv) வாழ்த்துரைகள்

v) பட்டதாரிப் பிரிவுக்கான விடுதி

2) கலைத்திட்டம் 19-44

i) பட்டதாரிப்பிரிவில் கற்பிக்கப்பட்ட பாடங்களும் பரீட்சைகளும்

ii) இலண்டன் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறுவதற்கான விதிமுறை

iii) யாழ்ப்பாணக் கல்லூரி வயது வந்த மாணவர்களுக்கான போதனைகள்

iv) விரிவுரையாளர்கள்

v) யாழ்ப்பாணக்கல்லூரிப் பட்டதாரிப்பிரிவின் சில பிரபல்யமான விரிவுரையாளர்கள்.

vi) யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரி பிரிவில் சித்தியடைந்த மாணவர்கள் விபரம்.

3) வெளியீடுகள் 45-46

i) பட்டதாரிப்பிரிவில் உருவாக்கப்பட்ட நூல்களும் சஞ்சிகைகளும்.
ii) வட இளம் கலைஞன்
iii) இலக்கிய கட்டுரைகள்
iv) விஞ்ஞானக் கட்டுரைகள்
v) சமூக, அரசியல் கட்டுரைகள்
vi) உதயதாரகை
vii) யாழ்ப்பாணக்கல்லூரி மிஷலனி
viii) இளஞாயிறு
ix) பட்டதாரி பிரிவு மாணவர் ஒன்றியம்
x) விஞ்ஞான சங்கம், சஞ்சிகை
xi) கல்லூரி வட்டார நிருபர்

4) சேவை மதிப்பீடு 67-85

i) பல்கலைக்கழகக் கல்வி
ii) நூலகம்
iii) இரு மொழித்திறமை
iv) பல பட்டதாரிகளை உருவாக்கியமை
v) பல அதிபர்களை உருவாக்கியமை
vi) பல பண்பாட்டு கலப்பு சூழலை வழங்கியமை
vii) குறைந்த செலவில் நிறைந்த வாய்ப்புக்களை பெற உதவியமை.
viii) புதிய வேலைவாய்ப்புக்களை வழங்கும் பாடநெறிகளை வழங்கியமை
ix) வறிய மாணவருக்கு வேண்டிய கல்வி வசதிகளை பெற உதவியமை.

x) ஜனநாயக மரபு வளர உதவியமை
xi) தாழ்த்தப்பட்ட சமூகத்தினரும் பயன் பெற உதவியமை
xii) சமய சகிப்புத்தன்மை வளர உதவியமை

5) பட்டதாரிப் பிரிவு மூடப்படல் **86-97**


i) அரசாங்கம் கையேற்பு
ii) அரசாங்க கொள்கை விளக்கம்
iii) கையேற்ப்பு தொடர்பாக சிலரின் கருத்துக்கள்
iv) ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவைவிடுத்த அறிக்கை
v) யாழ்ப்பாணக்கல்லூரி நிர்வாகத்தினரின் எதிர்ப்பு

6) பட்டதாரிப்பிரிவு 1990க்குப் பின்னர் **98-109**

i) யாழ்ப்பாணத்தில் பட்டதாரிப் பிரிவு
ii) பட்டதாரிப்பிரிவின் முதல் இயக்குனர்
iii) வங்கியியல் வகுப்புக்கள்
iv) பட்டதாரிப் பிரிவின் இரண்டாவது இயக்குனர்
v) பட்டதாரிப்பிரிவில் cima வகுப்புக்கள்
vi) விரிவுரையாளர்கள்-2003
vii) பட்டதாரிப்பிரிவின் இன்றைய சேவை
viii) பட்டதாரிப்பிரிவின் எதிர்காலம்

7) நிறைவுரை **110-112**
i) பின்னிணைப்பு **113-117**
ii) உசாத்துணை நூல்கள் **118-121**


# 1. வட்டுக்கோட்டையில் உயர்கல்வி
## செமினரியின் தோற்றமும்
## யாழ்ப்பாணக்கல்லூரியின் வளர்ச்சியும்



Rev. Dr. S.K. Bunker
First President
1947 - 1965



Dr. W.L. Jeyasingam
President
1966 - 1974



First Degree Class & Staff - 1947

*From left to right : (Staff)*

Mr. E.C.A. Navaratnarajah

Mr. L.S. Kulathungam

Dr. W.R. Holmes

Rev. Dr. S.K. Bunker (President)

Mr. K.E. Mathiyaperanam

Mr. P.T. John

Mr. K. Abraham

# வட்டுக்கோட்டையில் உயர்கல்வி

அமெரிக்க மிஷனரிமார் 1816ம் ஆண்டில் யாழ்ப்பாணத்திற் காலடி எடுத்து வைத்தனர். தெல்லிப்பளையில் இருந்த ஒல்லாந்து தேவாலயத்தையும் குரு இல்லத்தையும் தமது இருப்பிடமாகத் தேர்ந்ததன் பின்னர் தமிழ்ப் பள்ளிக் கூடங்களை அமைப்பதனையே தமது முதல் வேலையாகக் கருதினர். முதன் முதலாகத் தெல்லிப்பளையிலும், மல்லாகத்திலும் இரண்டு பள்ளிக்கூடங்கள் 30 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டன.(1) 1824ம் ஆண்டில் அவர்களின் பள்ளிகளின் தொகை 90 ஆகவும், அங்கு கற்ற மாணவர்களின் தொகை 3477 ஆகவும் உயர்ந்தன. தமிழ் பள்ளிக்கூடங்களின் துரித வளர்ச்சியையும் மாணவர்களின் ஆர்வத்தையும் கண்ணுற்ற அமெரிக்கன் மிஷனரிமார் ஒரு சம்பூரணமான கல்வித்திட்டத்தினை யாழ்ப்பாண மக்களுக்கு அளிக்க வேண்டுமென விரும்பினார்கள். இதற்கு முதற் படியாக விடுதிச்சாலைகள் கொண்ட இடைநிலைப்பள்ளிகளைத் தெல்லிப்பளையிலும், வட்டுக்கோட்டையிலும், உடுவிலிலும், பண்டத்தரிப்பிலும், மானிப்பாயிலும் அமைத்தனர்.

இத்தகைய விடுதிப் பாடசாலைகளிற் கற்ற மாணவர்களின் பேருக்கமும் திறமையும் அமெரிக்க மிஷனரிமாருக்கு உற்சாகத்தை யளித்தன. அவர்களுக்கென ஒரு உயர் கலாபீடத்தினை அமைக்க விரும்பினர். இக்காலபீடம் தோன்றுவதற்கு 1823ல் யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்த வண. பி.வி.சி.மைக்ல், வண. டானியல் பூவர், வண. மைரன் உவின்சிலோ, வண. யோன்ஸ்கடர், வண். டபிள்யூ வூட்வோட் ஆகியோர் ஒரு மனுப்பத்திரத்தைத் தயாரித்து அமெரிக்காவிலும் இந்தியாவிலுமுள்ள தமது நண்பர்களுக்கும் நலன்விரும்பிகளுக்கும் அனுப்பினார்கள். அவ்வாறு அனுப்பப்பட்ட கொள்கைப் பிரகடனத்தில் இக்கல்விக் கழகத்தின் நோக்கங்களைத் தெளிவாக விளக்கினார்கள். முதலாவது நோக்கம் ஆற்றலுள்ள சுதேசிய வாலிபர்களுக்கு ஆங்கிலத்திலே பூரணமான அறிவை வழங்குவதாகும். இரண்டாவது

நோக்கமாக அவர்கள் குறிப்பிட்டது தமிழிலக்கியத்தினை விருத்தி செய்வதாகும். இந்த நோக்கத்தை மிஷனரிமார் பின்வருமாறு விரித்துரைத்தனர்.

> "சுதேச மக்கள் மத்தியில் பெருமளவு நன்மதிப்பைப் பெறுவதற்கு அவர்களின் இலக்கியத்தை புரிந்து கொள்வது அவசியமாகும். தமிழ் மொழியானது, சமஸ்கிருதம், எபிரேயம், கிரேக்கம் போன்ற ஒரு மூலமொழி. எனவே அது விருத்தி செய்யப்படுவதற்கு எல்லாவித தகுதிகளையும் உடையதாகும்.
>
> சுதேசிய அறிஞர்களினால் எழுதப்படும் முதல் நூல்களின் நடையும் உருவத் தொடர்களும் சிறப்பாக அமையும். பிறநாட்டவரின் நூல்களும், மொழிபெயர்ப்பு நூல்களும் தள்ளிவிடப்படும்பொழுது விரும்பி வாசிக்கப்படும். எனவே விஞ்ஞானத்தினால் வளம்பெற்று ஐரோப்பிய சிந்தனைகளில் ஊரியவர் களைக் கொண்டு, அவற்றினை அழகிய சுதேச மொழிகளில் வடித்தெடுக்கக்கூடிய ஒரு எழுத்தாளர் பரம்பரையை உருவாக்கி வளர்ப்பது கல்விக்கும் கிறிஸ்தவத்திற்கும் பெருந்தொண்டாக அமையும்."2)

இந்த மகோன்னத நோக்கத்தோடுதான் வட்டுக்கோட்டை செமினரி 1823ல் உதயமானது. இக்கல்லூரி ஆரம்பத்திலிருந்தே தமிழ் உரைநடை வளர்ச்சியிலும் கலாசார வளர்ச்சியிலும் தீவிர கவனம் செலுத்தியது. இக்கல்லூரியின் முதலாவது அதிபராக கலாநிதி டானியல் பூவர் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். பட்டங்கள் வழங்குவதற்கான சாசனத்தை அன்றைய பிரிட்டிஷ் அரசு வழங்க மறுத்தமையால் மிஷனரிமார் தமது கல்வி நிறுவனத்தை செமினரி என்று அழைத்தனர். செமினரி 1855ம் ஆண்டு வரை இயங்கி வந்தது. இக்காலகட்டத்தில் இக்கால பீடம் அரிய பல நூல்களை உருவாக்கியது. இந்தியாவிலும் இலங்கையிலும் பிரகாசித்த

அறிஞர்கள் பலரை பயிற்றுவித்தது. நெவின்ஸ், கறோல் சி.வை.தாமோதரப்பிள்ளை, வைமன், ஆர்னல்ட் என்போர் இந்த வகையிற் குறிப்பிடத்தக்கவர்கள்.

1855ல் இந்த நிறுவனம் பூட்டப்பட்டதெனினும் செமினரியின் பழைய மாணவர்களும் ஏனைய கல்வி ஆர்வலர்களும், செமினரியைப் போன்ற ஒரு கல்வி நிறுவனத்தை மீண்டும் மிஷனரிமார் நடாத்தவேண்டுமெனக் குரல் எழுப்பினர். அவர்களின் முயற்சியின் பயனாக 1872ல் வட்டுக்கோட்டையைச் செமினரி இயங்கிய வளாகத்தில் யாழ்ப்பாணக்கல்லூரி எனும் பெயருடன் கல்வி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

வட்டுக்கோட்டை, செமினரியில் தமிழிலும் ஆங்கிலத்திலும் பாடங்கள் போதிக்கப்பட்டன. தமிழிலக்கனமும், இலக்கியமும் இந்து வான சாஸ்திரமும், மிகுந்த ஆர்வத்துடன் பயிலப்பட்டன. ஆரம்பத்திலிருந்தே கந்தபுராணம், நைடதம், திருக்குறள் என்பன பாடவிதானத்திற் சேர்க்கப்பட்டிருந்தன.

வட்டுக்கோட்டை செமினரியின் மாணவர்களைப்பற்றி குல சபாநாதன் பின்வருமாறு எழுதியுள்ளார்.

> "இக்கல்லூரியில் கற்றவர்கள், ஆங்கிலத்திலும் தமிழிலும் பாண்டித்தியம் பெற்றனர். சிலர் சமஸ் கிருதமும் கற்றனர். இதனால் இருமொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவர்களாய்த் திகழ்ந்தனர். தனித் தமிழ்ப்பண்டிதர்கள் இவர்களை வெருட்டியுருட்டி விடமுடியாது. ஆங்கிலேயர் இவர்களை ஏமாற்றி விடமுடியாது." (3)

## பட்டதாரி பிரிவின் தோற்றம்


செமினரியின் கடைசி அதிபராக பணியாற்றிய ஈ.பி.ஹேஸ்டிங்ஸ் யாழ்ப்பாணகல்லூரியின் முதலாவது அதிபரானார். அதற்கு முன்னரே 1830ம் ஆண்டு செமினரியினால் பட்டம்

அளிப்பதற்கான அங்கீகாரம் (Charter) தருமாறு கேட்கப்பட்டது. இதன்பின் பலமுறை விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டன. ஆனால் இக்காலத்தைய பிரிட்டிஷ் அரசாங்கம் அனுமதி வழங்கவில்லை. கொழும்பில் ஒரு பல்கலைக்கழகத்தை ஆரம்பிக்க அரசாங்கம் திட்டம் வகுத்து 1940ல் கொழும்பில் ஒரு பல்கழைக்கழகம் முதன்முதலாக ஆரம்பித்தது. இதுவரை காலம் செமினரியும், கல்லூரியும் உயர்கல்வியை வழங்கி தமது சொந்த சான்றிதழ்களை தொடர்ந்து வழங்கி வந்தது. (4) யாழ்ப்பாணக் கல்லூரி சிறிது காலம் கல்கத்தா பல்கலைக்கழகத்துடனும் பின்னர் சென்னை பல்கலைக்கழகத்துடனும் இணைக்கப்பட்டிருந்தது. 1910ம் ஆண்டில் கல்கத்தா பல்கலைக்கழகத்தினுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது. ஆனால் 1922வரை தொடர்ந்தும் உயர்கல்வி வழங்கப்பட்டு வந்தது.(4) அப்பொழுது இலண்டன் இடைநிலை கலை விஞ்ஞான வகுப்புக்கள் ஆரம்பமாகின. அவை அல்லது அதற்கு சமமான வகுப்புக்கள் தொடர்ந்தும் யாழ்ப்பாணக்கல்லூரியில் நடைபெற்று வந்தன.


இலண்டன் பல்கலைக்கழகத்துக்கான B.A., B.Sc. பொதுப்பட்ட வகுப்புக்களுக்கு மாணவரை தயார்செய்யும் பட்டதாரி பிரிவு 1947ல் யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆரம்பமானது.

1947 ஜுலை மாதம் 17ம் திகதி தொடக்கமாக யாழ்ப்பாணக்கல்லூரியில் விசேஷ கொண்டாட்டம் ஆரம்பித்தது. இக் கொண்டாட்டம் இரு பெரும் விழா என வர்ணிக்கப்பட்டது. பிரசித்தி பெற்ற வட்டுகோட்டைச் செமினரி ஸ்தாபனமாகி அவ்வாண்டு 125ம் ஆண்டு நிறைவு விழாவாகும். இரண்டாவதாக யாழ்ப்பாணக்கல்லூரி அவ்வாண்டு 75ம் வருட ஜுபிலி ஆண்டாகும். இவ்விரு கொண்டாட்டங்களையும் சேர்த்து யாழ்ப்பாணக்கல்லூரி ஜுலை மாதம் 17ம் திகதி தொடக்கம் 21ம் திகதி வரை கொண்டாடியது. (5)

இக்கொண்டாட்டங்களோடு யாழ்ப்பாணக்கல்லூரி முன்பிருந்த மாதிரியாக உயர்கல்வியை மீண்டும் வழங்க ஆரம்பித்தது.



Staff & Students - 1959



Staff & Students - 1960

1947ஜுலை மாதம் தொடக்கம் யாழ்ப்பாணக்கல்லூரியில் பட்டதாரி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. (6) ஏறக்குறைய நாற்பது வருடங்களுக்கு முன்னே மேற்படி கல்கத்தா பல்கலைக்கழகத்தோடு சேர்ந்து B.A.பட்டபரீட்சைக்கு மாணவர்களை அனுப்பிக்கொண்டு வந்தது. மறுபடி சிலகாலம் Territorial பிரிவின் படி இலங்கை சென்னையோடு சேர்க்கப்பட்டதனால் யாழ்ப்பாணக்கல்லூரி சென்னை பல்கலைக்கழகத்தோடு சேர்ந்து மாணவரை உயர்தரக் கல்விக்குப் பயிற்றிவந்தது. அதன் பின் பல மாற்றங்கள் நிகழ்ந்தன.

அப்போது யாழ்ப்பாணக்கல்லூரியோடு கரிசனையுடைய எவரும், கல்லூரி கருமகத்தா சபையும், பழைய மாணவரும் மற்றுங் கல்லூரி நண்பர்கள் யாவரும் யாழ்ப்பாணக்கல்லூரியில் பட்டப்படிப்பு வகுப்புக்கள் (Degree classes) நடத்தப்பட வேண்டுமென்னும் ஆவலுடையவராக இருந்தனர். இதற்கு பல இடையூறுகள் நேர்ந்தன. எனினும் இவ்விடையூறுகள் யாவையும் அகற்றி ஜுலை மாதத்தோடு கல்லூரியில் மேல் வகுப்புக்கள் வைத்து நடத்தப்பட்டன.

உயர்தரக் கல்விக்குரிய அவா யாழ்ப்பாணத்திலே நாளொரு வண்ணமாய் அதிகரித்து வந்திருக்கிறது. இலவசக் கல்வி வாய்ப்போடு உயர்தரக்கல்வியை அவாவி நிற்கும் மாணவர் தொகை மிகவும் அதிகரித்துக் காணப்பட்டது. இலங்கை பல்கலைக்கழக ஒழுங்குப்படி 4000 மாணவரை எடுத்துக் கொண்டாலும் ஏனையோரை என்ன செய்வது? மேலும் இலங்கைப் பல்கழைக்கழகம் பேராதனைக்குப் போனபின் யாழ்ப்பாணத்திலும் ஏனைய இடங்களிலுமுள்ள தகுதி வாய்ந்தவர்களும் வறியவர்களுமான மாணவர் என்ன செய்வார்கள்? அவர்களுக்கு ஓர் இடம் வேண்டும். அதற்கு எல்லாவகையாலும் ஏற்றவோர் கழகம் யாழ்ப்பாணக்கல்லூரியே. ஆதலால் யாழ்ப்பாண உயர் கலாபீடம் (The University of Jaffna) யாழ்ப்பாணக்கல்லூரியின் ஸ்தாபனமாக வேண்டியது மகா அவசியம். இது இலங்கை பல்கழைக்கழகத்தின் ஓர் கிளையாகும். யாழ்ப்பாணக்கல்லூரி தனது முன்னைய அந்தஸ்திலிருந்து குறையாது வளர்ந்துகொண்டே வந்திருக்கிறது என்று அறிஞர்கள் குரல் எழுப்பினர்.

உயர்தரக் கல்வியை இக்கல்லூரியில் கொண்டு வர வேண்டுமென அதிக ஊக்கத்தோடும், தளரா முயற்சியோடும் உழைத்த மூன்று மகான்கள் இருந்திக்கின்றனர். இம்மூவரின் பெயர்கள் வருமாறு. கனம் ஜோன் பிக்னெல், அலன் ஆபிரகாம், ஜே.வி.செல்லையா. (7)

இவர்கள் சமயம் வாய்ந்தாலும் வாய்க்காவிட்டாலும் யாழ்ப்பாணக்கல்லூரி ஓர் உயர்தரக் கல்விக்குரிய ஸ்தானமாக வேண்டுமென உழைத்தது மாத்திரமல்ல யாழ்ப்பாணக்கல்லூரியை நல்நிலைக்கு கொண்டு வரும்படி தங்கள் வாழ்வையும் அதற்கென அர்ப்பணித்தனர். அவர்களுடைய மனோ எண்ணங்கள் பட்டதாரி பிரிவு வடிவில் தோற்றம் பெற்றது. யாழ்ப்பாணக்கல்லூரியின் 125வது வருட ஜுலை 17, 1947 தொடக்கம் ஜுலை 27 வரை நடைபெற்ற கொண்டாட்டத்தோடு, பட்டதாரி பிரிவு ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று யாழ்ப்பாணக்கல்லூரி இயக்குனர் சபை (Board of Directors) தீர்மானித்தது. இதற்கு தேவையான ஆசிரியர்கள் தெரிவு இடம்பெற்றது. போதியளவு ஆசிரியர்கள் முன்வராமையினால் யாழ்ப்பாணக்கல்லூரியில் குறிப்பிட்ட இடைநிலை பாடசாலையில் கற்பித்த குறிப்பான சில பாடங்களில் தகுதி பெற்ற(Sehorl) ஆசிரியர்களுக்கு பட்டதாரி பிரிவிலும் சில பாடவேளைகள் ஒதுக்கப்பட்டன. அவ்வேளை அதிபராக இருந்த திரு பங்கர் அவர்கள் 125வது வருட ஜுபிலி பரிசளிப்பு விழாவில் இப்பட்டதாரி பிரிவின் அமைப்பையும் செயற்பாட்டையும் பற்றி குறிப்பிட்டார். அரசாங்கத்துடன் போட்டி போடும் நோக்கம் நமக்கில்லை. நாங்கள் முயற்சிப்பது எல்லாம் விஞ்ஞானத்துறையிலும் கலைத்துறையிலும் பொதுப்பட்டதாரி திட்டத்தை இலண்டன் பல்கலைக்கழக பரீட்சைக்கு எம்மிடம் வரும் மாணவர்களிற்கு போதிப்பதற்கே ஆகும்.

1947ல் முதலாவது பட்டதாரி பிரிவின் மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் படம் ஜுபிலி மிஸலனியில் வந்துள்ளது. (8) மூன்று மாணவர்களும் 7 போதனையாளர்களும் இதில் அடங்குவர். இருவர் கனிஷ்ட B.A வகுப்பிலும், ஒருவர் கனிஷ்ட B.Sc. வகுப்பிலும் பயின்றனர். பாடங்கள் விரிவடைய மாணவர் ஆசிரியர்

தொகையிலும் அதிகரிப்பு ஏற்பட்டது.

பட்டதாரி பிரிவினை ஆரம்பிப்பதானது ஏற்கனவே இருந்து வந்த இடைநிலை பிரிவின், வகுப்புக்களின் மேல் புதிய வகுப்புக்களை மட்டும் அமைப்பது என்பது தவறான கருத்தாகும். நிர்வாக அமைப்பிலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியிருந்தது. இது ஒரு மிஷனரி கல்வி நிலையமாகும். எனவே ஒரு மிஷனரியே நிர்வாக பீடத்தின் தலைமைப் பதவியை வகிக்க வேண்டும். கல்லூரி பிரிவு விசேட கவனத்தை ஈர்த்ததினால் அவருடைய முக்கியபணி பட்டதாரி பிரிவை கவனிக்கும் பணியாகும். எனவே தலைவர் (President) என்ற பட்டம் வழங்கப்பட்டது. (9) இதற்கு முன்பு இருந்த அதிகாரிகள் பட்டதாரி வகுப்புக்கள் மட்டும் இருந்த காலங்களில் அதிபர்கள் (Principal) என அழைக்கப்பட்டனர். தற்பொழுது பட்டதாரி பிரிவும் இடைநிலைப் பிரிவும் ஒரே அமைப்பின் கீழ் இருப்பதனால் இவ்வித்தியாசம் அவசியமானதாகவிருந்தது. ஆகவே இடைநிலைப் பிரிவின் தலைவர் (Principal) என அழைக்கப்பட்டார். இவருடைய அதிகார வரம்புக்குள் அவருக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது.

1947ம் ஆண்டு மத்தியில் இயக்குனர்சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

> "கல்லூரியின் தலைமையாளர் தலைவர் (President) என அழைக்கப்படுவார். கல்லூரியின் எல்லா நிர்வாக வேலைகள சம்பந்தமாக இவர் இயக்குனர் சபைக்கு பொறுப்பாக இருப்பார். இவர் கல்லூரி பிரிவுக்கு நேரடி அதிகாரியாகவும், முழுக் கல்லூரியினதும் எல்லா காரியங்களுக்கும் மேல் அதிகாரம் உடையவராகவும் இருப்பார். தலைவரின் பொது மேற்பார்வையின் கீழ் ஒரு அதிபர் இருப்பார். இவர் இடைநிலைப் பாடசாலையின் எல்லா வேலைகளிற்கும் பொறுப்பாக இருப்பார்." (10)

யாழ்ப்பாணக்கல்லூரிப் பட்டதாரிப் பிரிவு ஆரம்பமாகிய மாதத்தில் ஜுலை 18ம் திகதி பரிசளிப்பு விழா கொண்டாட்டம் நடைபெற்றது. அந்த நாளுக்கு பிரதம பேச்சாளராக சென்.தோமஸ் கல்லூரி அதிபர் (Warden) கனன் ஆர்.எஸ்.டி.சேரம் அழைக்கப்பட்டிருந்தார். கல்லூரியின் அறிக்கை President எஸ்.கே.பங்கரினால் அளிக்கப்பட்டது. உடுவிற் பெண்கள் கல்லூரித் தலைவி திருமதி ஏ.எச்.பரமசாமியினாற் பரிசில்கள் வழங்கப்பட்டன. அதன்பின் கனன் டி.சேரம் தமது சொற்பொழிவை நடத்தினார். அவரது சொற்பொழிவிற் காணப்படும் சில முக்கிய அம்சங்களை நினைவு கூரல் சாலச்சிறந்தது.

யாழ்ப்பாணக்கல்லூரி உயர்தரக் கல்வியைக் கொடுக்க மறுபடியும் எத்தனங்கள் எடுத்துக்கொள்ளுகின்றது. உயர்தரக் கல்வியின் இலக்கு அறிவு சம்பந்தமான நேர்மைதான். அறியாத ஒரு விடயத்தை அறிந்ததென ஒருவன் பாசாங்கு செய்யக்கூடாது. கிரேக்க ஞானியாகிய சோக்கிறெற்றீஸ் தன் காலத்திற்கு மாத்திரம் அல்ல, அவர்கள் மூலமாக பின்வரும் சந்ததியாருக்கும் படிப்பித்த பெரியபாடம் அதுவே. நெடுங்காலம் கொண்டிருந்த அபிப்பிராயங்களை விட வேண்டிவரினும், சீவிய மாதிரியையும் எண்ணங்களையும் மாற்ற வேண்டியவரினும், சத்தியம் எங்கே செல்லும் படி ஒருவனை ஏவுகின்றதோ அங்கு அவன் செல்லவேண்டும்.

மனுஷர் சொல்லும் எல்லா எண்ணங்களின் படியும் கூத்தாடாமல், தாங்களே காரியங்களைப் பகுத்தறியக் கூடியவர்களாய், சுயசித்த தன்மையடைய வைர மனம்முடையாரிலேயே தேசத்தின் உறுதி நிலை தங்கியிருக்கிறது. அரசியல் சம்பந்தமாக அதிசிறந்த காலத்தில் நாம் வந்திருக்கிறோம். இக்காலத்திற்கு வைரமுடையநெஞ்சுடையோர் தேவை.

இக்கழகத்தை போன்ற ஸ்தாபனங்களுக்கு மாறாகக் பல கசப்பான வார்த்தைகளைப் பலர் பேசியிருக்கின்றனர். ஆனால் நாம் அவற்றை மறந்து விடுவோம். கசப்பை உண்டாக்க வேண்டாம்.

நல்மனதுடைய எவரும் நீவிர் செய்யும் வேலையைப்பற்றி அறிவர். எனது கல்லூரியினதும் (St.Thomas college) தலைமை உபாத்திமார் சங்கத்தினதும் வாழ்த்துதலை யான் உங்களுக்கு கூறுகின்றேன்.

உயர்தரக் கல்வியை கொடுக்க நீவிர் எடுத்து கொள்ளும் பிரயத்தனம் ஆசிபெறுவதாக என வாழ்த்துக் கூறி முடித்தார்.

**யாழ்ப்பாணக்கல்லூரி பொதுக்கூட்டம்**

யாழ்ப்பாணக்கல்லூரி பரிசளிப்பு விழாவை தொடர்ந்து, 1947 ஜூலை 21ம் திகதி மாலை 5.00மணிக்கு ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டம் ஜூபிலி சம்பந்தமான பொதுக்கூட்டமாக இருந்த போதிலும், இக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தோர், பட்டதாரிப் பிரிவின் தோற்றத்தையும் குறிப்பிட்டு வாழ்த்துக்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

மேடை மீது President வண.எஸ்.கே.பங்கர், அதிபர் கே.ஏ.செல்லையா, அமெரிக்கன் போட் பிரதிநிதியாக எம்.எச்.உறரிசன் M.H.HARISION பண்டிதர், (பெங்களூர் உயர்தர வேதசாஸ்திரக் கழகத் தலைவர்) அகில இலங்கை ஆசிரியர் ஐக்கிய சமாசத் தலைவர் திரு.அவையரத்ன, திரு.சீ.குமாரசாமி (பொதுமக்கள் பிரதிநிதி), ஜேம்ஸ் கெல்லெக் பண்டிதர் (பம்பாய் உவில்சன் கல்லூரித் தலைவர்), யாழ்ப்பாணக்கல்லூரி வட்டமேசை தலைவர் திரு.சீ.எஸ்.பொன்னுத்துரை என்போர் வந்து அமர்ந்தனர். திரு.கே.ஏ.செல்லையா வரவேற்புபசாரம் கூற President பங்கர் கல்லூரியின் தற்கால நோக்கம் முதலியவற்றைப்பற்றி பேசினார்.

யாழ்ப்பாணக்கல்லூரியின் 125வது ஆண்டுவிழா அருள்திரு.ஜே.கெலோக் (பம்பாய் வில்சன் கல்லூரி தலைவர்) விசேட பேச்சாளராக அழைக்கப்பட்டிருந்தார். அவர் தமது உரையில், யாழ்ப்பாணக்கல்லூரி இலண்டன் B.A., B.Sc. வகுப்புக்களுக்கு மாணவர்களை ஆயத்தப்படுத்துவதற்கான ஆரம்ப கூட்டத்தில் கலந்து

கொள்வதையிட்டு தாம் மகிழ்ச்சியடைவதாக கூறினார். அவர் தமது உரையில் தொடர்ந்து, கல்வியின் இலக்கையும், நோக்கத்தையும், குறிப்பிட்டு, அதற்கு கிறிஸ்தவத்தின் பங்களிப்பையும் விளக்கினார்.

யாழ்ப்பாணக்கல்லூரி போன்ற கல்வி நிறுவனம் மூன்று முக்கிய வழிகளில் தொழிற்பட முடியுமெனக் குறிப்பிட்டார்.

1. அறிவை வளர்த்தலும், இளம் ஆண்களையும் பெண்களையும் வாழ்க்கையில் ஒரு நிலையை அடைவதற்கும் ஆராய்ச்சிகள் செய்வதற்கும் உதவுதல்.

2. பண்படுத்தப்பட்ட மனிதவாழ்வுக்குள், திருப்தியும் செயலூக்கமுமுள்ள வாழ்க்கையை அடைய உதவுதல்.

3.இளைஞர்கள் தங்களை சூழவுள்ள ஆவிக்குரிய சூழ்நிலையை பிரயோசனமான முறையில் விளக்கி கொள்வதற்கும் கடவுள் உணர்வை பெறுவதற்கும், அறத்தை பேண உயர்ந்த இலக்குகளின் மேல்நாட்டம் கொள்வதற்கும் உதவுதல்.

இம்மூன்றையும் முறைப்படி செய்வதனால் ஒரு கல்வி நிறுவனம் உண்மையான கல்வி பணியில் ஈடுபட முடியுமென தமது உரையில் அருள் திரு.கெலோக் குறிப்பிட்டார். மேலும் அவர் தொடர்ந்து தமது உரையில் யாழ்ப்பாணக்கல்லூரி தன்னுடைய நீண்டகாலப் பணியில் முன்னோக்கிச் செல்லும்பொழுது உயர்கல்வியின் நிறைவான பணியைச் செய்ய முற்பட்டுள்ளது எனவும் கல்லூரியின் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் தங்களது பணியின் முக்கியத்துவத்தை உணர வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

அவர்கள் தாங்கள் புத்தி ஜீவிகள் என்பதை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இதன் மூலமாக சமுதாயத்தினுள் சமப்படுத்தப்பட்டுள்ள செயலூக்கம் நிறைந்ததும், உயிர் உள்ளதுமான தனிநபர்களை சமுதாயத்துக்குள் அனுப்பிக்

கொண்டேயிருத்தல் வேண்டும். நேரடியாகவோ, மறைமுகமாகவோ சமுதாயத்திற்கு ஒளி வீசும் மத்திய இடமாக காணப்படும் இக்கல்லூரி முன்னர் இருந்தது போலவே சமுதாயத்தாயத்திற்கு கல்வி அடிப்படையில் சேவை செய்ய சிறந்த வாய்ப்பு இருக்கிறது எனவும் குறிப்பிட்டார். (11)

**வாழ்த்துரைகள்:-**

பின்வரும் கூற்றுக்களும் வாழ்த்துரைகளும் வெவ்வேறு நிறுவனங்களிலிருந்து அவற்றின் பிரதிநிதிகளால் 21ஜுலை 1947ல் வாசிக்கப்பட்டன.

அருட் திரு.கலாநிதி எம்.எச்.ஹரிசன், பெங்களுர் இறையியல் கல்லூரி அதிபர்.

> "கல்லூரி தனது பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமெனவும் பட்டப்படிப்பு பகுதியில் கலை, விஞ்ஞான பிரிவுகளில் கல்வி வழங்க எடுக்கப்பட்ட புதிய பிரயத்தனம் வெற்றி யளிக்க வேண்டுமெனவும் வாழ்த்துகின்றேன்." திருஜு.டி.அபயரத்ன, அகில இலங்கை ஆசிரியர் சங்க தலைவர் "அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் சார்பாக வாழ்த்துரையை வழங்க வந்தேன். யாழ்ப்பாணக்கல்லூரி நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பு செய்துள்ளது என்பதை அகில இலங்கை ஆசிரியர் சங்கம் நன்கறிந்துள்ளது" திரு.சி.குமாரசுவாமி,
> "இளைப்பாறிய அரசாங்க அதிபர், வடமாகாணம் தமது வாழ்த்துரையை பொதுமக்கள் சார்பாக வழங்கினார்.

"சிரேஷ்ட பாடசாலை தராதரப் பரீட்சையில் சித்தியடை வோரின் எண்ணிக்கை வருடந் தோறும் அதிகரித்து வருகின்றது.

இதனால் உயர்கல்வி பெறவிரும்பும் அனைத்து மாணவர்களையும் பேராதனையில் உள்ள இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சேர்ப்பதற்கு இடவசதி போதாது. எனவே, யாழ்ப்பாணக்கல்லூரியில் பட்டப்பிரிவை திரும்பவும் ஆரம்பிப்பதற்காக யாழ்ப்பாண மக்கள் பெரிதும் நன்றியறிதல் உடையவர்களாக இருக்கின்றார்கள்."

அவர் தனது வாழ்த்துரையை முடிக்கும் போது யாழ்ப்பாண மக்களுக்கு மிகவும் பயனுள்ள இப்புதிய பிரயத்தனத்தில் வெற்றி பெற வேண்டுமென வாழ்த்தினார். (12)

## செய்திகள்(Messages) (13)

இந்தியா, மலாயா, அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்தும் இலங்கையின் பல பகுதியிலிருந்தும் அனுப்பப்பட்ட வாழ்த்து செய்திகள் 21 ஜுலை 1947ம் ஆண்டு வாசிக்கப்பட்டன.

எமது வாழ்த்துக்களை நண்பர்களுக்கு அறிவிக்கவும். உங்கள் புதிய திட்டத்திற்கு எமது மனமார்ந்த ஆதரவை வழங்க உறுதியளிக்கிறோம்.

சிங்கப்பூர் பழைய மாணவர்

பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்
Congratulations And Best Wishes.

Mallon

அமெரிக்கன் கொன்சுலெற்,
கொழும்பு

வாழ்த்துக்கள். பட்டப்பிரிவு வகுப்புக்களுக்கு
Greetings.Best Wishes Degree Classes.

புக்வால்டர்
மின்னி ஹரிசன்

"கிங்ஸ்வூட்;" இலிருந்து வாழ்த்துக்கள்
Greetings from Kingswood.

Nonis
Principal Kingswood, Kandy

'த மோர்னிங் ஸ்ரார்'(The Morning Star) பத்திரிகை 11.07.1947 இல் யாழ்ப்பாணக்கல்லூரியில் பட்டதாரிப்பிரிவு ஆரம்பிப்பது குறித்து பின்வரும் ஆசிரியர் குறிப்பை வழங்கியது.

யாழ்ப்பாணக்கல்லூரி இரண்டு முக்கியமான வருடாந்த கொண்டாட்டங்களை கொண்டாடுவதுடன் மாத்திரம் திருப்தியடையவில்லை. யாழ்ப்பாணக்கல்லூரி தன் முன்னோடியான பட்டிகோட்டா செமினரியின் 125வது ஆண்டு விழாவினையும் தனது 75வது ஆண்டு விழாவினையும் கொண்டாடுவதுடன் மட்டும் நின்றுவிடவில்லை. ஆனால் தனக்கும் யாழ்ப்பாணத்திற்கும் ஏன்? முழுஇலங்கைக்குமே முக்கியத்துவத்தை அடையச் செய்யக்கூடிய திட்டத்தை நடைமுறைப்படுத்த இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்துகிறது.

கல்லூரி தனது அந்தஸ்திற்கு மறுபடியும் திரும்புகிறது. திரும்ப பட்டதாரி வகுப்புக்களை தொடங்குகின்றது. இக்கல்லூரி நிர்வாகிகளின் இத்தீர்மானம் இச்சந்தர்ப்பத்தில் செய்யக்கூடிய மிகவுயர்ந்த புத்திசாலித்தனமான தீர்மானம் என்று பொதுவாக எல்லோர் மத்தியிலும் மனப்பூர்வமான வரவேற்பை பெறுகிறது. தன்நாட்டு செல்வங்களான புத்திரர்களும் புத்திரிகளும் ஓரிடத்தில் மாத்திரம் உயர்கல்வி பெறுவதோடு இலங்கை திருப்தியடைந்துவிட முடியாது.

பட்டதாரி வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கான தீர்மானத்தை பொதுவாக தமிழ் சமூகத்திற்கும் குறிப்பாக கிறிஸ்தவ சமூகத்திற்கும் கிடைத்த வரப்பிரசாதமொன்று அந்த ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

அக்காலத்தில் இலங்கையில் ஒரேயொரு பல்கலைக் கழகந்தான் இருந்தது. உயர்கல்விக்கான மாற்று கல்வி நிறுவனம் கிடைப்பது ஒரு கட்டாயத் தேவை என்பதையும் ஆசிரியர் எடுத்துக்காட்டுகின்றார். பட்டதாரி வகுப்புக்களை நடாத்துவதற்கு மேலதிக இடவசதியை செய்யக்கூடிய தாபனம் செலவு குறைந்ததாகவும், ஒரு சமய அல்லது ஒழுக்கப்பின்னணியில் கல்வி

வசதியை அளிக்கக்கூடியதாகவும் கல்வி ஸ்தாபனம் விளங்கும்.

காலப்போக்கில் யாழ்ப்பாணக்கல்லூரி ஒரு பல்கலைக்கழகமாக வளர்ச்சியடையலாம் அல்லது ஆகக்குறைந்தது ஒரு புது பல்கலைக்கழகத்திற்கு, கருவாக அமையலாம் என்ற நம்பிக்கையோடு ஆசிரியர் தலையங்கம் முடிவடைகிறது.

1974ல் யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரி பிரிவு அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டது, அங்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப்பிரிவு ஸ்தாபிக்கப்பட்டதன் மூலமாக இக்கனவு நனவாகியது. இவ்விஞ்ஞானபீடமானது, வசதிகள் கூடிய புதிதாக அமைக்கப்பட்ட திருநெல்வேலிக்கு கொண்டு செல்லப்பட்டபோது அங்கு கலை, விஞ்ஞானப்பீடங்கள் அடங்கிய பூரணமான பல்கலைக்கழகம் உருவாகியது.

## பட்டதாரிப் பிரிவுக்கான விடுதி

பட்டதாரி வகுப்புக்கள் யாழ்ப்பாணக்கல்லூரியில் ஆரம்பமான வுடனேயே, பட்டதாரிகளுக்கான ஒரு விடுதியை கட்டவேண்டுமென கல்லூரி நிர்வாகிகள் விரும்பினர். அதை கட்டுவதற்கான அவசியமும் உணரப்பட்டது. பட்டதாரிப் பிரிவுக்கான விடுதியை அமைக்கும் வேலைகள் தொடங்கின. பட்டதாரிப் பிரிவு விடுதி வேலைகள் செப்.1949ம் ஆண்டு முற்றுப்பெற்றன. மாணவர்கள் விடுதி வசதி பிரச்சனை காரணமாக அதனை திறந்து வைக்கும் வைபவம் வரை காத்திராமல், அப்போது தலைவராக இருந்த பங்கர், பிஷப் எஸ்.குலேந்திரன் அவர்களை அழைத்து பிரதிஷ்டை செய்யுமாறு கேட்டுக்கொண்டார். இவ்வைபவம் செப் 12ம் திகதி திங்கட்கிழமை 1949ல் நடைபெற்றது. இவ்வைபவத்துடன் மாணவர்கள் தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டனர். (14)

இவ்விடுதி இரண்டு மாடிக் கட்டிடத்தைக் கொண்டது. கீழ்ப்பகுதியில் மாணவர்கள் தங்கியிருந்தனர். மேற் பகுதியில் பேராசிரியர் W.R.ஹோர்ம்ஸ் அவர்களது குடும்பமும் திரு.எஸ்.பி.அப்பாசாமி

அவர்களது குடும்பமும் தங்கியிருந்தன.

ஆனால் மேற்படி விடுதி முறைப்படி பெப்.25 1950ம் ஆண்டில் தான் அப்போது இலங்கையின் (கவணர் ஜெனரல்) தேசாதிபதியாக இருந்த திரு.சோல்பெரி பிரபு (Lord Soulbury) அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. (15)

யாழ்ப்பாணக்கல்லூரிக்கு இலங்கை தேசாதிபதி வந்ததும் கல்லூரியின் தலைவர் வண.எஸ்.கே.பங்கர் தம்பதிகள் அவருக்கு தேநீர் விருந்தளித்து கௌரவித்தனர். இத்தேநீர் விருந்தில் தேசாதிபதியின் மகள் செல்வி ஜோன் ராம்ஸ்போத்தம், அவருடைய பிரத்தியேக செயலாளர், வடமாகாணத்தின் அரசாங்க அதிபர் திரு.பி.ஜே.ஹட்சன் ஆகியோர் கலந்து கொண்டனர். தேநீர் விருந்துக்குப்பின் பட்டதாரி விடுதிக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். சிறு பெண் பிள்ளைகள் நடனமாடி பூக்களை தூவிய வண்ணம் வரவேற்றனர். பட்டதாரி விடுதியின் முன் திடலில் தலைவர் வண.எஸ்.கே.பங்கர், இலங்கை தேசாதிபதியை வரவேற்றார்.

வண.எஸ்.கே.பங்கர் தமது உரையில் கல்லூரியின் அதிகாரிகள் பட்டப்படிப்பு வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கு ஏதுவாக இருந்த காரணங்களைப்பற்றி கூறும்பொழுது, ஒரு சிறிய கிறீஸ்தவக்கல்லூரி, பெரிய பல்கலைக்கழகங்களில் காணமுடியாத அம்சமாகிய, ஆசிரியர், மாணவரது நெருக்கமான தொடர்பை எம்மால் வழங்கமுடியுமென நம்புகின்றோம் எனவும் இதன் மூலமாக இந்நாட்டின் வளர்ச்சிக்கு முக்கிய சேவையாற்ற முடியுமெனவும் நம்புவதாகக் குறிப்பிட்டார்.

இலங்கை தேசாதிபதி விடையளிக்கும்பொழுது, கல்வி சம்பந்தமான ஒரு நிறுவனத்தை திறப்பது தமக்கு எப்பொழுதும் விசேடமான திருப்தியை தருகின்றது எனக்குறிப்பிட்டார். (16)

இதன் மூலம் இப்பிரதேசத்தில் நீண்ட காலமாக வேரூன்றி இருந்த குரு, சிஸ்ய கல்வி அடிப்படையைப் பேணும் அதே வேளையில் மாறிவருகின்ற உலக தேவைகளுக்கு ஏற்ப கல்வி

வளர்ச்சியை உருவாக்கவும் முடியும். இலங்கையின் வடபகுதியில் இது அமைந்திருக்கின்ற போதும் இலங்கை முழுவதற்குமான ஒரு கல்வித்தேடலுக்கு வழிகாட்டியாக இப்பிரிவு அமையும். ஆற்றலுள்ள இப்பிரதேச மக்களின் நுண் மாண் நுழை புலனுக்கு எமது பட்டதாரிப்பிரிவு ஒரு கலங்கரை விளக்கமாக அமையும் எனக் கருதலாம். பல்கலைக்கழக மட்டத்தில் எத்தகைய வசதிகள் உள்ளனவோ அந்தளவு வசதியை, வசதி குறைந்த இப்பிரதேசமாணவர்களுக்குவழங்கமுடியும். சமூகம் சார்ந்த உதவியை இப்பட்டதாரிப்பிரிவு மெற்கொள்ளும். அதனூடாக சமூகத்தின் விருத்திக்கு அளப்பரிய வேலையை மேற்கொள்ள முடியும்.

பதிலுரை ஆற்றிய மாண்பு மிகு இலங்கைத் தேசாதிபதி கல்வி சம்பந்தமான ஒரு நிறுவனத்தைத் திறப்பது பெரும் திருப்தி அளிக்கும் ஒரு விடயமெனக் கூறிய அவர், கல்வி சாதாரண மக்களை எட்டுகின்றபோது தான் உலகம் மனித நாகரிகத்தைப் பேணும் தகுதியை அடைகின்றது எனவும் விளம்பினார். யாழ்ப்பாணக்கல்லூரி நீண்டகாலமாகக் கல்விக்கு ஆற்றிய அரும் சேவையைப் புகழ்ந்து கூறிய அவர், இப்பட்டதாரிப்பிரிவு மேலும் அதன் முன்னெடுத்துச் செல்லும்எனவும் குறிப்பிட்டார். பிரதேச ரீதியாக அமைந்த இந்த நிறுவனம் தேசிய ரீதியில் பங்களிக்கக்கூடிய சேவையை செய்வது மகத்தானது எனவும் எதிர்காலத்தில் மேலும் மேலும் இது வளர்ச்சியடைவதற்கு தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

## Notes

(01) வட்டுக்கோட்டையில் வளர்ந்த தமிழ் :எஸ்.ஜெபநேசன் Jaffna College Alumni Association Centoury Souvenir 1879-1979.

(02) American Ceylon Mission Page 36. (Dr.S.Jebanesan.)

(03) College Calander 1989 - வண.கலாநிதி.எஸ்.ஜெபநேசன் எழுதிய யாழ்ப்பாணக் கல்லூரி சுருக்க வரலாறு. பக்கம் 2

(04) Jaffna College Undergraduate Department Prospectus.1961.

(05) Jaffna College Misscellany Dec 1947-Page 47.

(06) Morning Star -July 27.

(07) Morning Star -July 27.

(08) Jaffna College Miscellany -1947.

(09) A History of Jaffna College -By Sabapathy Kulendran.

(10) Rev.J.Kelock :"Christian Contribution to Education" Jaffna College Miscellany. 1947-Page 62.

(11) Jaffna College Misscellany 1947 Page 52.

(12) Jaffna College Misscellany 1947Page 54.

(13) Lord Soulbury opens Degree Hostel -Morning Star -Feb.3, -Front Page

# 2. கலைத்திட்டம்

## பட்டதாரிப்பிரிவில் ஆரம்பிக்கப்பட்ட பாடங்களும் ஆயத்தம் செய்யப்பட்ட பரீட்சைகளும்

யாழ்ப்பாணக்கல்லூரி 1872ம் ஆண்டு ஆரம்பமானது தொடங்கி, கல்லூரியே தமது பயிற்சியின் முடிவில் மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கி வந்தது. ஈ.பி.ஷேஸ்டிங்ஸ் அவருடைய காலத்தில் நான்கு வருட கல்வி பயிற்சி ஐந்து வருடமாக மாற்றப்பட்டது. கலாநிதி சாமுவேல் ஹலனட் என்பவர் 1891ம் ஆண்டில் அதிபராக இருந்த போது யாழ்ப்பாணக்கல்லூரி கல்கத்தா பல்கலைக்கழகத்துடன் இணைப்புப் பெற்றது. இவருடைய காலத்தில் யாழ்ப்பாணக்கல்லூரி ஒரு பூரணமான பல்கலைக்கழகக் கல்லூரியாக செயற்பட்டு வந்தது. 1908ம் ஆண்டிலே ஜி.ஜி.பிரவுண் அதிபரான காலகட்டத்தில், இந்திய அரசு ஒவ்வொரு கல்லூரியும் தனக்கு மிகச் சமீபமாகவுள்ள பல்கலைக்கழகத்துடனே இணைந்து கொள்ள வேண்டுமென விதித்தது. இதனாலே யாழ்ப்பாணக் கல்லூரியும் கல்கத்தாவுடனான தனது தொடர்புகளை நீக்கிச் சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இனைந்து கொள்ள வேண்டியதாயிற்று. அக்காலப்பகுதியில் விஞ்ஞானகூடம், நூல்நிலையம் பேராசிரியர்கள் தகுதி ஆகிய தேவைகளை நிறைவேற்றுவது யாழ்ப்பாணக்கல்லூரிக்கு முடியாமலிருந்தது. எனவே பல்கலைக்கழக இணைப்பு நீக்கப்பட்டது.


இலங்கையரசு நடத்திய கேம்பிறிச் கனிஷ்ட, சிரேஷ்ட பரீட்சைக்கு மட்டுமே மாணவர்களுக்கு பயிற்சியளித்தது. 1916ம் ஆண்டு ஜோன் பிக்னல் அதிபராக நியமிக்கப்பட்டார். இக்கால கட்டத்தில் இலண்டன் பல்கலைக்கழகம் பிரித்தானிய குடியேற்ற நாடுகளிலே வெளிவாரி மாணவர்களுக்கென பட்டதாரிப் பரீட்சைகளை நடாத்த தீர்மானித்திருந்தது. இதனால் யாழ்ப்பாணக்கல்லூரி மீண்டும் Inter, B.A வகுப்புக்களை நடத்த வாய்ப்பு ஏற்பட்டது. ஜோன் பிக்னல் அவருடைய காலத்தில் யாழ்ப்பாணக்கல்லூரி ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியின் அந்தஸ்தை அடைந்தது.




Degree Women's Hostal



Degree Men's Hostal
Opened Feb. 25, 1950



Staff & Students 1965

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரிப் பிரிவு இலண்டன் B.A., B.Sc.,B.Sc.(Econ.) என மூன்று வகுப்புக்களாகப் பிரிக்கப்பட்டு, அதாவது கலை, விஞ்ஞானம், பொருளியல் எனப் பிரிக்கப்பட்டு பாடங்கள் போதிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. கலைத்துறையில் சமஸ்கிருதம், தமிழ், வரலாறு, அறிவியல், புவியியல் போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட்டன. விஞ்ஞானத்துறையில் தூயகணிதம், பிரயோககணிதம், இரசாயனம், பௌதிகவியல், தாவரவியல், புவியியல் போன்ற பாடங்கள் போதிக்கப்பட்டன. பொருளியற் துறையிற் கட்டாய பாடங்களாக பொருளியல் விதிகள், பொருளியல் வரலாறு, பிரயோகப் பொருளியல், அரசியல் வரலாறு, அரசியற் சிந்தனை என்பன போதிக்கப்பட்டன. மத்திய கால பொருளியல் வரலாறு புவியியல் (பௌதிகம் உயிரியல்), புவியியல் (Ecom&Soc) கணிதம், புள்ளிவிபரவியல் -முறைகள் என்பன துணைப்பாடங்களாகப் போதிக்கப்பட்டன. பாடவிளக்கம் பற்றி பூரண விளக்கம் பின்னிணைப்பாக சேர்க்கப்பட்டுள்ளன.

## இலண்டன் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறுவதற்கான விதிமுறைகள் பின்வருமாறு:-

Regulations of The University of London Concerning Entry To the Degree Courses:-

க.பொ.த.பரீட்சைகளின் அடிப்படையில் எவ்வாறு மாணவர்கள் பட்டதாரி வகுப்புக்களுக்கு நுழையலாம் என்பது குறித்து இவ்விதிமுறைகள் தெளிவுபடுத்துகின்றன. (1)

கீழே தரப்பட்ட 'அ' முறை அல்லது 'ஆ' முறைக்கேற்ப பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு ஒரு கல்வி பொதுத்தராதரப் பத்திரச் சான்றிதழ் குறைந்த பட்சத் தகுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

முறை 'அ' :-

பின்வரும் விதிமுறைகளுக்கு அமையப் பரீட்சார்த்தி ஐந்து பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (ஓரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டுமென்றில்லை.)

1. உயர்தர வகுப்பில் ஐந்து பாடங்களில் குறைந்தது இரண்டாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2. விதிமுறை ஐந்தில் கொடுக்கப்பட்ட அட்டவணையிலிருந்து பாடங்கள் தெரிந்தெடுக்கப்படல் வேண்டும். ஆனால் விதிமுறை 7ஐயும் 8ஐயும் மீறக்கூடாது.

## அனுமதிக்கான தகுதிகள்

கல்விப்பொதுத் தராதரப் (உயர்தர) வகுப்பில் (G.C.E.A/L) சேருவதற்கான தகுதி இரண்டு அடிப்படையில் அனுமதிக்கப்பட்டது.

(அ) கல்விப் பொதுத் தராதரப் (சாதாரணம்) (G.C.E O/L) வகுப்பில் முழு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) ஆங்கிலத்தில் நடைபெறும் பிரவேசப் பரீட்சையில் சித்தியும் அடைந்திருத்தல் வேண்டும்.

**B.A., B.Sc., B.Sc.(Econ)க்கான தகுதி:**

கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தர வகுப்பில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டுமென்பது எதிர்பார்க்கப்பட்டது. அத்துடன் S.S.C.இல் வேறொரு அங்கீகரிக்கப்பட்ட பாடத்தில் திறமைச்சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது இலண்டன் கல்விப் பொதுத்தராதரப் வகுப்பில் அப்பாடத்தில் சாதாரண சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

கல்வி பொதுத்தராதரப் பத்திர உயர்தர வகுப்பில் இரண்டு பாடங்கள் சித்தியும் கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண வகுப்பில் அங்கிகரிக்கப்பட்ட வேறு மூன்று பாடங்களில் சாதாரண சித்தியும் அடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

S.S.C.பரீட்சை

அல்லது

இலண்டன் க.பொ.த.பரீட்சையில் சாதாரண சித்திகள் பெற்றிருக்க வேண்டும்.

**முறை 'ஆ' :-**

பின்வரும் விதிக்கமைய, பரீட்சார்த்திகள் நான்கு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். (ஓரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டுமென்றில்லை)

1. உயர்தர வகுப்பில் நான்கு பாடங்களில் மூன்றிலாவது சித்தியடைந்திருக்க வேண்டும்.
2. விதிமுறை 5ல் கொடுக்கப்பட்ட அட்டவணையிலிருந்து பாடங்கள் தெரிந்தெடுக்கப்படல் வேண்டும். ஆனால் விதிமுறை 7,8 மீறப்படலாகாது.

'அ' முறை 'ஆ' முறை திட்டத்திற்கு அமைவாக, ஏற்றுக்கொள்ளப்படும் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளன (O சாதாரணம் Ordinary Level A உயர்தரம் (Advanced Level)

| | | |
|---|---|---|
| ஆங்கில மொழி | O . | (English Language) |
| ஆங்கில இலக்கியம் | O A . | (English Literature) |
| புவியியல் | O A . | (Geography) |
| வரலாறு | O A . | (History) |
| பண்டைய வரலாறு | O A . | (Ancient History) |

| | | |
|---|---|---|
| இந்திய வரலாறு | A. | (Indian History) |
| ஆங்கில பொ.வரலாறு | OA. | (Eng.Eco.History) |
| பிரித்தானிய யாப்பு | OA. | (British Constitution) |
| பொருளியல் | OA. | (Economics) |
| அளவையியல் | OA. | (Logic) |
| சமய அறிவு | OA. | (Religious Knowledge) |
| இலத்தீன் | OA. | (Latin) |
| கிரேக்கம் | OA. | (Greak) |
| பிரேஞ் | OA. | ( French) |
| ஏனைய அங்கிகரிக்கப்பட்ட மொழி | | |
| தமிழ் அல்லது சிங்களம் | OA. | |
| தூய கணிதம் | OA. | Pure Mathematics |
| பிரயோக கணிதம் | OA | (Applied Mathematics) |
| கணிதம் (தூய&பிரயோக) | OA. | Maths (Pure &Ap) |
| பௌதீகம் | OA. | (Physics) |
| இரசாயனம் | OA. | (Chemistry) |
| பொது விஞ்ஞானம் | O . | (General Seiencl) |
| தாவரவியல் | OA. | (Botany) |
| விலங்கியல் | OA. | (Zoology) |
| உயிரியல் | OA. | (Biology) |
| இசை | OA. | (Music) |
| வரைதல் | A. | (Art) (2) |

மேற்குறிப்பிட்ட பட்டியலில் குறியீடு இட்ட இடங்களுக்கு விளக்கம். அனுமதி பெறுவதற்கு புள்ளடி ( ) இடப்பட்டுள்ள பாடங்கள் இலங்கை க.பொ.த சாதாரண பரீட்சைக்கு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆங்கில மொழியும் ஆங்கில இலக்கியமும் இரு பாடங்களாக கருதப்படமாட்டாது.

6. A,B திட்டங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞான பாடங்களாவன.
பௌதிகம், இரசாசாயனம், தாவரவியல், விலங்கியல்,

உயிரியல், என்பனவாகும்.

7. A,B பாடத்திட்டங்களின் கீழ் பாடத்தை தெரிவு செய்வது கீழ்காணும் வரையறைக்குள்ளானதாக இருக்கும். கணிதம் (தூய, பிரயோகம்) சாதாரணம் அல்லது உயர்தர தூய கணிதத்தோடு சேர்த்து எண்ணப்படலாகாது. பிரயோக கணிதம் சாதாரண அல்லது உயர்தர தூய கணிதத்தோடு சேர்க்கப்படலாகாது.
8. எந்தப்பாடமாவது சாதாரணம் அல்லது உயர்தரம் இரண்டிலும் சேர்த்து எண்ணப்படலாகாது.

1948ல் பட்டதாரிப் பிரிவில் 7மாணவர்கள் கலைப்பிரிவிலும் ஒரு மாணவர் விஞ்ஞானப்பிரிவிலும் இருந்தனர். அவர்களுக்கு கற்பிப்பதற்காக பின்வரும் ஆசிரியர்கள் பாடங்களுக்கு நியமிக்கப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| பி.ரி.ஜோன் | - | பௌதிகம் |
| கே.பி.ஏபிரகாம் | - | இரசாயனம் |
| வண. W.R.சூஸ்போர்க் | - | பொருளியல் |
| Dr.W.R.ஹோம்ஸ் | - | வரலாறு |
| திரு.லொக்வூட் | - | கணிதம் |
| திரு.எஸ்.பி.அப்பாசாமி | - | ஆங்கிலம் |

திரு.எஸ்.பி.அப்பாசாமி அவ்வருட மத்தியில் ஆங்கிலம் கற்பிப்பதற்காக நியமிக்கப்பட்டார். இவர் பெயர் பெற்ற இந்திய கிறிஸ்தவக் குடும்பத்திலிருந்து வந்தவர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் பல பரிசில்களைப் பெற்று ஹார்வட் பல்கலைக்கழகத்தில் M.A பட்டம் பெற்றவர். திரு.எஸ்.ஜே.டி.ஐசக் விலங்கியல் கற்பிப்பதற்காக நியமிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணக்கல்லூரியுடன் இணைக்கப்பட்ட பல பாடசாலைகள் பட்டதாரிப்பிரிவுக்கு மாணவரே அனுப்பும் இடம் (Feeder school) சிறார்களை வழங்கும் பாடசாலை எனக் கருதப்பட்டபடியினால் கல்லூரியின் ஆதரவு இதற்கு தேவைப்பட்டது.

ஆனால் கல்லூரி பொருளாதார நெருக்கடி காரணமாக 1947ம் ஆண்டிலே புதிதாக அமைக்கப்பட்ட தென்னிந்திய திருச்சபையின் அத்தியட்சாதீனத்திற்கு இப் பாடசாலைகள் கையளிக்கப்பட்டன.

யாழ்ப்பாணக்கல்லூரியில் இடைநிலை பட்டதாரி பிரிவுகள் பக்கம் பக்கமாக இருந்தமையினால் அவை ஒன்றுக்கொன்று இருபக்க நன்மையாக கருதப்பட்டது. இடைநிலை கல்லூரியில் சிறந்த கல்வித்தகைமை பெற்ற ஆசிரியர்களே பட்டதாரிபிரிவு நிலைத்தமைக்குகாரணமானவர்களாவர். திரு.எம்.டி.பாலசுப்பிரமணியம் அவர்கள் இடைநிலைக் கல்லூரியில் சமஸ்கிருதம் கற்பிப்பதற்கு நியமிக்கப்பட்டிருந்தாலும் பட்டதாரிப் பிரிவிக்கு மாற்றப்பட்டார். இவரது வேலைக்கானத் தகுதியில் நிகரற்றவராகக் காணப்பட்டார். எல்லாத் தென்னிந்திய பல்கலைக்கழகத்திலும் தனது பிரிவில் (Field) இவர் முதலாவதாக வந்தார். இலண்டன இடைநிலைத்தேர்வில் (Intermediate) தொன்மைமொழி (Classic Lang.) கட்டாய பாடமாக இருந்தது. இலத்தீன் மொழியிலும் சமஸ்கிருதமே மிகவும் விரும்பப்பட்டதனால் இவர் சமஸ்கிருதத்தை போதித்தார்.

இக்காலத்தில் பல ஆசிரியர்களும், இடைநிலைப் பள்ளியிலிருந்து பட்டதாரிப் பிரிவில் கல்வி கற்பித்தாலும் இது ஒரு வழிபாதையென்று கருதலாகாது. Dr.ஹோம்ஸ், Rev.சூஸ்போர்க் ஆகியோர் இடைநிலைப்பள்ளியிலும் பாடங்களைப் போதித்தனர்.

மேலும் பட்டதாரிப் பிரிவு இடைநிலைப் பாடசாலையுடன் ஒரே வளாகத்தினுள் இருந்ததனால் இடைநிலைப் பாடசாலைக்கு பெரும்மதிப்பை கொடுத்தது.

ஆரம்ப இடைநிலைப் பாடசாலை இரண்டிலும் சேர்த்து 755 மாணவர்களும் 301 மாணவிகளும் கல்வி கற்றனர். இந்த மாணவர்கள் தொகையில் 185 மாணவர்கள் விடுதியில் தங்கிப் படித்தனர். இவ்விடுதி மாணவர்கள் கல்லூரியின் முதுகெலும்பாக கருதப்பட்டனர்.

1946ம் ஆண்டில் 6 மாணவர்கள் கலைமானிப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தயாராக இருந்தனர். அதற்கு அடுத்த வருடம் 1947ல் மூன்று மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்ற தயாராக இருந்ததாகத் தெரிகிறது. முதலாவது வருடம் அல்லது இடைநிலைப்பரீட்சையில் மாணவர்கள் தொகை சற்று கூடுதலாக காணப்பட்டது. இடைநிலை கலை வகுப்பில் 14 மாணவர்களும் இடைநிலை விஞ்ஞான வகுப்பில் 21 மாணவர்களும் இருந்தனர். அவ்வருடத்தில் கனிஷ்ட, இடைநிலை வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டதாக தெரிகிறது. இது தற்காலத்தில் இலங்கை பல்கலைக்கழகத்திலுள்ள பொதுக்கலைக் தெரிவு, பொது விஞ்ஞானத் தெரிவு வகுப்புக்கு சமமானதாகும்.

இலத்தின் பாடம் கலை மாணவர்களுக்கு பெரும் தடையாக பல்லாண்டுகள் இருந்தமையினால் சமஸ்கிருதம் அதன் இடத்தைப் பிடித்தது. சமஸ்கிருதமும் பல மாணவர்களுக்கு இலகுவானதாக இருக்கவில்லை. எனினும் தமிழுடன் தொடர்புடையது என்ற நோக்கில் இலகுவானதாக இருந்தது.

ஏற்கனவே இருந்து வந்த கலை, விஞ்ஞானம் என்ற பிரிவுகளுடன் புதிய பிரிவாக பொருளியல் என்ற இடைநிலை வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வகுப்பில் 5 மாணவர்கள் இருந்தனர். பொருளியலை கல்வியின் பிறிதொரு கிளையாக அமைத்தது. கல்வித்துறையில் ஒரு படியாக கருதப்படுகிறது. அல்பிரட் மார்சல் என்பவரின் முயற்சியினால் பிரித்தானிய பல்கலைக்கழகங்களில் கடந்த நூற்றாண்டின் இறுதிக்காலங்களிலேயே பொருளியல் ஒரு பாடமாக அங்கீகரிக்கப்பட்டது. மேலும் இப்பாடம் பிரபல்யமானதினால் இப்பாடத்திற்கு மாணவர்களைக் கண்டு பிடிப்பது மிகவும் இலகுவானதாக இருந்தது.

யாழ்ப்பாணக்கல்லூரியில் இலண்டன் B.A,B.Sc. வகுப்புகளுக்கு வகுப்புக்கள் நடைபெற இருப்பதைக் குறித்து Morning Star பத்திரிகையின் பின்வரும் விளம்பரம் வெளிவந்தது தெரியவந்தது.

# JAFFNA COLLEGE

Classes preparing for the London B.A. and B.Sc. General Examination in 1955 will be formed at Jaffna College on Sept.7th, 1953. Instruction is given in the following

Subjects:-

Physics,Chemistry, Pure&Applied, Maths Geography, English,History,Tamil, Sanskrit,Economics&Ethics.

All enquires and application for admission should be addressed to the president, Jaffna college,Vaddukoddai.

S.K.Bunker.
President

-Morning Star.Aug. 7,1953

இலங்கைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைக்கான வகுப்புக்கள் யாழ்ப்பாணக் கல்லூரியில் 1961ம் ஆண்டிலிருந்து செயற்படத்தொடங்கின. 1968ம் ஆண்டில் இரண்டு பல்கலைகழககங்களுக்கான (London&Ceylon) பட்டதாரி வகுப்புக்கள் ஆரம்பமானதிலிருந்து விஞ்ஞானப்பிரிவில் 94 பேரும் கலைப்பிரிவில் 124 பேருமாக 218 பேர் பட்டதாரிகள் ஆகினார்கள்.

யாழ்ப்பாணக்கல்லூரியின் பட்டதாரிப்பிரிவில் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பொதுத் கலைக் தகுதி காண்பரீட்சைக்குரிய போதனா வகுப்புக்களில் கீழ்காணும் தகுதியுள்ளோர் அனுமதிக்கப்பட்டதாக தெரிகிறது.

**(அ)** இலங்கைப் பல்கலைக்கழகத்தின் சம்பந்தப்பட்ட பாடத்துறையினரால் விதிமுறை செய்யப்பட்ட பிரகாரம் க.பொ.த.ப.(சா.த)தகுதிகள் உடையோராயும்,

**(ஆ)** உயர்தரப் பாடசாலை தராதரப்பத்திரம் பரீட்சையில் சித்தியெய்தியவர்களாக அல்லது

**(இ)** உயர்தரப் பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் நுண்சித்திபெற்று 1964ம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த.ப.(உ.த) பரீட்சையில் அப்பாடத்தில் சித்தியெய்தியவர்களாக அல்லது

(ஈ) க.பொ.த.ப.(உயர்தரம்) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியெய்தியோராகவும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு:-**

1. கலைப்பிரிவு மாணவருக்குத் தேவையான க.பொ.த (சாதாரணம்) பகுதிகள் பின்வருமாறு கணிக்கப்பட்டது.

ஒரே முறையில் 3 விசேட சித்திகளுட்பட 6 பாடங்களில் அல்லது 3 விசேட சித்திகளுட்பட 5 பாடங்களில் சித்தியெய்தி அடுத்த ஆறாவது பாடத்தில் உயர்தரப் பரீட்சைக்கு முன்னர் சித்தியெய்தியவராக இருத்தல் வேண்டும். மூன்று விசேட

சித்திகளுட்பட ஆறு அல்லது ஐந்து பாடங்களில் உயர்தரப் பரீட்சை நடைபெறுவதற்கு ஒருவருடத்திற்கு முன்னரேயே சித்தியெய்திருத்தல் வேண்டும்.

கட்டாய பாடங்கள் பின்வருமாறு விதிக்கப்பட்டிருந்தது.

1. தமிழ்மொழி, கணிதம் அல்லது வர்த்தக கணிதம் அல்லது ஆரம்பகேத்திர கணிதம் அல்லது தூயகேத்திர கணிதம்.
2. ஒரு விஞ்ஞானப்பாடம், புவியியல், உடல்நலவியலும் உடற்றொழிலியலும், மனையியல் ஆகிய பாடங்கள் வழமையான விஞ்ஞானப்பாடங்களுடன் மேலதிக விஞ்ஞானப் பாடங்களாக ஏற்றுக்கொள்ளப்படும்.

கேத்திர கணிதம் ஏதாவது ஒன்றில் கிடைக்கும் சித்தி இரண்டாம் மூன்றாம் கட்டாயப்பாடத் தேவையைப் பூர்த்தி செய்யும். கட்டாய பாடங்களில் விசேட சித்தி பெற்றிருக்க வேண்டும். என்ற நியதியிருக்கவில்லை.

மேலும் வயது வந்தோரைப் பொறுத்தவரையில் க.பொ.த.ப. (சாதாரண தரம்) தகுதிகள் தேவையாக கருதப்படவில்லை. அவர்கள் 25 வயதடைந்தவராய் இருத்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

பாடங்களைப் பொறுத்த வரையில் கீழ் காணும் பாடங்களில் மூன்றினைத் தெரிந்தெடுக்குமாறு பணிக்கப்பட்டது.

1. சமஸ்கிருதம்
2. தமிழ்
3. இந்திய வரலாறு
4. புவியியல்
5. பொருளாதாரம்

## யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரி மாணவர் பகுதி

### வயது வந்த மாணவருக்கான போதனைகள்:-

இலங்கைப் பல்கலைக்கழகம், கல்விப் பகுதியினரின் பயிற்றப்பட்ட ஆசிரியப்பத்திரமுடையோர் ஆங்கிலம் அல்லது தமிழ் வெளிவாரிமாணவர்களாக பொதுக்கலை தகுதிகாண் பரீட்சைக்குப் அல்லது பொது விஞ்ஞான பரீட்சைக்குப் பதிவு செய்து கொள்வதற்கு அனுமதி வழங்கியதைக் தொடர்ந்து 1965ம் ஆண்டு மே மாதம் வயதுவந்த மாணவருக்கான போதனைகளை யாழ்ப்பாணக்கல்லூரிப் பட்டதாரிப்பிரிவு ஆரம்பித்தது.

குறிப்பாக குடாநாட்டிலும், அயலிலுள்ள தீவுகளிலும் கடமையாற்றும் ஆசிரியர்களை இலங்கைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டதாரிப் பரீட்சைக்கு கலை, விஞ்ஞானம் ஆகிய இரண்டிலும் தோற்றுவிப்பதற்கென இவ் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டதாக தெரிகிறது. பொதுக்கலை தகுதிகாண் (G.A.Q) பரீட்சைக்கான போதனைகள் தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும், பொது விஞ்ஞான தகுதிகாண்(G.A.Q) பரீட்சைக்கான போதனை ஆங்கிலத்திலும் நடாத்தப்பட்டது.

பொதுக்கலை தகுதிகாண் (G.A.Q) பரீட்சையைப் பொருத்தவரையில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுடன் இலங்கைப் பல்கலைக்கழகத்தினரால் அளிக்கப்பட்ட பின்வரும் டிப்ளோமா அல்லது பத்திரங்களையுடையாரும் வெளிவாரி மாணவராக பதிவு செய்து கொள்வதற்கு தகுதியுடையோராக கருதப்பட்டனர்.

1. தமிழ் டிப்ளோமா -1949 - 1951 அதற்குப்பின்னும்
2. தமிழ் பத்திரம் - 1952, 1953 இல் வழங்கப்பட்டது.

பொதுக்கலை தகுதிகாண் (G.A.Q) பாடங்களில் மூன்று தெரிவுசெய்யப்படல் வேண்டுமென விதிக்கப்பட்டிருந்தது. பாடங்கள் பின்வருமாறு:

சமஸ்கிருதம், தமிழ், பொருளியல், புவியியல், இந்திய வரலாறு

பொது விஞ்ஞானத்தகுதிகாண் (G.S.Q) பாடங்கள் இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டிருந்தது.

பிரிவு 1. கணிதம், பௌதிகம், இரசாயனம்

பிரிவு 2. தாவரவியல், விலங்கியல், இரசாயனம்

ஆங்கில மொழிமூலம் மாத்திரம் மேற்படி பாடங்கள் போதிக்கப்பட்டன.

## இலங்கைப் பல்கலைக்கழக கலைமானி விஞ்ஞானமானி பரீட்சைகள்
## B.A.,B.Sc. Examination

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரி மாணவர் பகுதியில் இலங்கைப் பல்கலைக்கழக (கலைமானி, விஞ்ஞானமானி) வெளிவாரிப்பரீட்சைக்குரிய போதனாவகுப்புக்களில் கீழ்காணும் தகுதியுள்ளோர் அனுமதிக்கப்பட்டனர்.

## B.A.,B.Sc. தகுதித் தேர்வு General (Ceylon)

(அ) பொதுக்கலைத்தகுதி (G.A.Q) தேர்வில் சித்திபெற்றவர்கள்

அல்லது

(ஆ) இலண்டன் கலைமானிப் பரீட்சைக்குப் பதிவு செய்து இலங்கைப்பல்கலைக்கழகச் சலுகைபெற்று அப்பதிவினை மாற்றிக் கொன்டவர்கள்.

அல்லது

(இ) இலங்கைப் பல்கலைக்கழகத்தினால் மதிக்கப்பட்ட வேறொரு பல்கலைக்கழகத்தின் பட்டம் பெற்றதனால் பொதுக்கலைக் தகுதிகாண் (G.A.Q) தேர்வுக்குத் தோற்றாது பல்கலைக்கழக சலுகை பெற்றவர்கள்.

### கற்பிக்கப்பட்ட பாடங்கள்.

பின் வருவனவற்றிலிருந்து மூன்று பாடங்கள் தெரிந்தெடுக்கப்படவேண்டுமென விதிக்கப்பட்டது.

கலை: தமிழ், சங்கீதம், வரலாறு (இந்தியா), பொருளியல், புவியியல், ஆங்கிலம், தூயகணிதம், பிரயோககணிதம்,

விஞ்ஞானம்: தூயகணிதம், பிரயோககணிதம், பௌதிகவியல், இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல்

## B.A. சிறப்பு (Special Ceylon)

G.A.Q. பரீட்சையில் சித்தியடைந்து, சிறப்புப் பட்டப் பரீட்சைக்கு முதன்மைப்பாடமாகத் தெரிவுசெய்ய வேண்டியதாகக் பல்கலைக்கழகமும் முடிவுசெய்த பாடத்தில், விசேஷ திறமை காட்டியவர்கட்கு அனுமதி வழங்கப்பட்டது.

முதன்மைப்பாடங்கள்: புவியியல், பொருளியல் (வங்கியும் நாணயமும்)

### விரிவுரையாளர்கள்

தலைவர்: The Rev.S.K பங்கர் B.A.(Operlin) B.D.(Union) B.Litt(Oxen)

பிரதித்தலைவர்: திரு.ஈ.சீ.லொக்வூட். M.A., (Brown)

பதிவாளர்: திரு.ஜே.எச்.அரியரட்ணம் B.A. (Ceylon)

திரு.கே.பாலசுப்பிரமணியம் M.Sc. (கல்கத்தா)

திரு.எம்.டி.பாலசுப்பிரமணியம் M.D .(அண்ணாமலை)

திரு.கே.ஏ.ஜோர்ச் M.A. (சென்னை)

கலாநிதி.W.R.ஹோம்ஸ்

M.A.,Ph.D.(இல்லிநோஸ்)

செல்வி.M.M.ஜேசுதாசன் B.A.Hons. (இலங்கை)

கலாநிதி.W.L.ஜெயசிங்கம்B.Sc.Hons(இலண்டன்)M.A.,Ph.D.(Clerk)

திரு.தோமஸ் ஜோன் M.A., Acns. (சென்னை)

திரு.எஸ். கதிர்காமர் B.A. (இலங்கை)
திரு.எஸ்.கந்தையாB.Sc.Hons (இலங்கை)A.R.I.C.
திரு.வீ.ஹோசி M.A(Econ) (சென்னை)
கலாநிதி.எஸ் கிருஸ்ணசாமி B.Sc.Hons.(இலங்கை) M.Sc.(கல்கத்தா) Ph.D.
திரு.டிஸ்.மகேந்திரன் B.A.(Hons) (இலங்கை)
திரு.சீ மனோகரன் BA (இலங்கை)
திரு.ஈமுத்துத்தம்பி M.A.Econ. (சென்னை)
திருமதி.ஜீ.பஞ்சலிங்கம் B.Sc.(இலங்கை)
திரு.சீ.எப்.ஜே.ரிச்சாட்ட்ஸ் B.A.Hons (இலங்கை)
திரு.ஜே.சத்தியதாஸ் B.Sc.(இலண்டன்) Merit Certificate (Indian Satatistical Institute)
திருமதி.சேதுகாவல் B.Sc.(இலண்டன்)
திரு.ஜே.பி.செல்லையா B.Sc.Hons (இலங்கை)
திரு.W.B.செல்வநாயகம் B.Sc.Econ (இலண்டன்)
திருமதி.எல்.ரீ.செல்வராஜா B.Sc.Hons (இலங்கை)
செல்வி.ரீ.சிதம்பரநாதன் B.A.Hons (இலங்கை)
திரு.வீ.சிவசாமி B.A.(இலங்கை)

## பகுதிநேர விரிவுரையாளர்கள்
## (Part Time Lectures)

திரு.எஸ்.வி.பாலசிங்கம் M.A.(இலண்டன்)
வித்துவான் ஆர்.பாலசுப்பிரமணியம் B.A (இலங்கை)
திரு.ஈ.ஏ.செம்பியன் B.A. (இலங்கை) Post Graduate Certificate in the Teaching of English as Foreigh Language (London)
திரு.கே.செல்வராஜன் B.A (இலண்டன்)
செல்வி.எம்.எஸ்.எலாயஸ் B.A. (இலண்டன்)
திரு.எஸ்.ரி.ஜீவரட்ணம் B.Sc. (இலண்டன்) Sc.Dip.(G.T.C)
திரு.எல்.எஸ்.குலதுங்கம் B.A (இலண்டன்)

திரு.கே.ஈ.மதியாபரணம் B.A. (இலண்டன்) M.A.(அண்ணாமலை)
திரு.ஆர்.எஸ்.தம்பையா M.A. (சென்னை) M.Sc (இல்லிநோஸ்)
திரு.எல்.எஸ்.வில்லியம் B.Sc. (கல்கத்தா) Dip.Ed. (இலங்கை)

## Other Officers

Librarin நூலகர்: திரு.கே.செல்லையா Dip.Lib.Sc.(சென்னை)
Bursar பொருளாளர் ஜே.சின்னப்பா

## யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரிபிரிவின் சில பிரபல்யமான விரிவுரையாளர்கள்

### Dr.W.றொபோட் ஹோம்ஸ் (5)

Dr.W.றொபோட் ஹோம்ஸ் அவர்களும் அவரது பரியாரும் அமெரிக்காவிலிருந்து அக்டோபர் மாதம் 26ம் திகதி 1947ம் ஆண்டு அவர்களது இரு பிள்ளைகளுடன் வட்டுக்கோட்டை வந்து சேர்ந்தனர். Dr.W.ஹோம்ஸ் அவர்கள் பட்டதாரிப் பிரிவில் வரலாற்று பேராசிரியராக பொறுப்பேற்று இருந்ததாக தெரிகிறது. இவரும் இவரது பாரியாரும் இல்லிநோயிசிலுள்ள வீற்றன் கல்லூரியில் பட்டம் பெற்றவர்கள். (Wheaten College in Illinois) Ph.D.பட்டம் பெற்ற பின் இல்லிநோயிசிலிலுள்ள பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த North Park அவரது கலாநிதி பட்டம் வரலாற்றுத் துறையில் அமைந்தது. சிறிது காலம் சிக்காக்கோ இறையியல் செமினரியில் B.D. கற்றவர்.

### வண.W.R.சூ.ஸ்பாக்

1948ம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டதாரிப்பிரிவில் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த வண.WR.சூஸ்பாக் என்பவரை சேர்த்துக்கொண்டதன்மூலம் பட்டதாரிப்பிரிவின் விரிவுரையாளர்கள் தொகை அதிகரித்தது இவர் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த பிரேசிலேன் நாட்டு பல்கலைக்கழகத்து பட்டதாரி ஆவார்.

பின்னர் யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டதாரிப்பிரிவின் இலண்டன் பல்கலைக்கழகத்து பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு பொருளியல் கற்பிப்பதற்காகச் சேர்ந்து கொண்டார். பிரசிலேன் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றமையாலும், தொழிற்றுறையில் நடைமுறை அனுபவம் பெற்றிருந்தமையாலும் இவருடைய சேவை மிகப் பயனுள்ளதாக இருந்தது.

## திரு.எஸ்.பி.அப்பாசாமி

திரு.எஸ்.பி.அப்பாசாமி அவர்கள் யாழ்ப்பாணக்கல்லூரியின் பட்டதாரிப்பிரிவில் ஆங்கிலப் பேராசிரியராக அக்டோபர் மாதம் 1948ம் ஆண்டு சேர்ந்தார். இவர் உயர்ந்த பட்டம் பெற்றவராக இருந்தார். இவர் தனது மாணவப்பிராயத்தில் அதியுயர் மீத்திறன் உடைய மாணவராக விளங்கினார். தாம்பரத்திலுள்ள சென்னை கிறிஸ்தவக்கல்லூரியில் சேர்ந்து B.A.(ஆங்கிலம்) M.A.(ஆங்கிலம்) பட்டம் பெற்றவர். இரண்டு பட்டமேற்படிப்புக்களிலும் முதல் வகுப்பில் முதல் மாணவராக வந்து சென்னைப் பல்கலைக்கழகத்தில் சாதனையை நிலைநாட்டினார். இவர் யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரி பிரிவுக்கு வருமுன் கிறிஸ்தவ கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராக கடமையாற்றினார்.

## யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரி பிரிவில் சித்தியடைந்த மாணவர் விபரம்

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரி பிரிவில் கல்வி பயின்று இலண்டன் பல்கலைக்கழக B.A., B.Sc,B.A.Economics பட்டப்பரீட்சைக்கு 1947-1974ம் ஆண்டுவரை தோற்றி நூற்றுக்கணக்கான மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள். அவர்களின் விபரம் பின்வருமாறு:

இலண்டன் பல்கலைக்கழகத்து B.A.பட்டப்பரீட்சைக்கு 1947ம

ஆண்டு தோற்றிய இரு மாணவர்களில் திரு.என்.ஆர்.பாலசிங்கம் இரண்டாவது வகுப்பில் சித்தியடைந்தார். 1948ம் ஆண்டு வெளிவாரி மாணவர்களாக யாழ்ப்பாணக்கல்லூரி பழைய மாணவர்கள் பலர் இலண்டன் பல்கலைக்கழகப் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர். அவர்களில் செல்வி.எஸ்.மாணிக்கவாசகர், திரு.டி.பி. தம்பு ஆகியோர் பரீட்சையில் இரண்டாவது பிரிவிலும் திருவாளர்கள் எம்.சிவசிதம்பரநாதன், ஜே.பி.தம்பிரட்ணம் என்.பெரியராவு ஆகியோர் மூன்றாவது பிரிவிலும் சித்தியடைந்தனர்.

1949ம் ஆண்டு வெளிவாரி மாணவர்களாக திருவாளர்கள் கே.ஜி.சுகிர்தரட்ணசிங்கம், எம்.தோமஸ், எஸ்.குணரட்னம், எஸ்.கந்தசாமி ஆகியோர் B.Sc. (Engineering Honours Part) பரீட்சையில் சித்தியடைந்தனர்.

திருவாளர்கள் எம்.மகாதேவன், பி.ஆறுமுகசாமி, வி.ஜி.சம்பந்தன் ஆகியோர் 1949ம் ஆண்டு B.A. பரீட்சையில் மூன்றாவது வகுப்பில் சித்தியடைந்தனர்.

1950ம் ஆண்டில் பட்டதாரிப்பிரிவு மாணவர்களான திரு.கே.செல்வராஜன், திரு.கிறேஸ், கே.மேதா், திருமதி.மகேஸ்வரி கனகரட்ணம் ஆகியோர் B.A. பரீட்சையில் சித்தியடைந்தனர்.

1951ம் ஆண்டு திரு.ஆர்.சச்சிதானந்தன், செல்வி.இராஜேஸ்வரி ஜேசுதாசன், திரு.ஏ.தேவராஜன் ஆகியோர் B.A. பரீட்சையிலும், திரு.கே.நாகலிங்கம், செல்வி.விஜயலட்சுமி இராசையா ஆகியோர் B.Sc. பரீட்சையிலும் சித்தியடைந்தனர்.

1952ம் ஆண்டு செல்வி.மேரி.எலயாஸ், செல்வி. அன்னலக்சுமி, சின்னத்தம்பி, திருவாளர்கள் என்.வேலுப்பிள்ளை, வி.எம்.ஜே.சதுர்குலசிங்க, சி.ரி.கிறிஸ்டியன் ஆகியோர் B.A. பரீட்சையில் இரண்டாவது வகுப்பிலும், திருவாளர்கள் ரி.வைத்தியநாதன், எஸ்.கந்தசாமி, எஸ்.கணேசலிங்கம், கே.நடராஜா ஆகியோர் B.Sc. பரீட்சையிலும் சித்தியடைந்தனர்.

1954ம் ஆண்டு B.A. பரீட்சையில் செல்வி.ஆர்.சோமசுந்தரம், திருவாளர்கள் டீ.ரி.வோட்ஸ்வேத், ஈ.பி.ஆர்.லோரன்ஸ் ஆகியோர் இரண்டாவது வகுப்பிலும் செல்வி.எஸ்.பொன்னுத்துரை, திருவாளர்கள் ரி.ஜோன்,ஆர்.நாகராஜா ஆகியோர் B.Sc. பரீட்சையிலும் சித்தியடைந்தனர்.

1956ம் ஆண்டில் திருவாளர்கள் எம்.இராமநாதன், திரு.ஏ.எஸ்.இராமச்சந்திரசர்மா, செல்விகள்.ஜே.ஜி.மாணிக்கவாசகர், எம்.கந்தவனம், பி.நல்லதம்பி ஆகியோர் B.A. பரீட்சையிலும் செல்வி.ரி.க.கந்தையா, திருவாளர்கள் என்.குகராஜா, சிசில் வில்வராஜன் ஆகியோர் B.Sc. பரீட்சையிலும் சித்தியடைந்தனர். .

1957ம்ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்ற இலண்டன் பல்கலைக்கழகப் பரீட்சையில் திருவாளர்கள் என்.நமசிவாயம், கே.சிவபதி, கே.கே.சிவசுப்பிரமணியம், செல்வி.தேவநேசன் கந்தையா ஆகியோர் பி.எஸ்.சி. பரீட்சையிலும், செல்வி.செல்வராணி சற்குணன் B.A பரீட்சையில் இரண்டாம் வகுப்பிலும் சித்தியடைந்தனர். B.A. பரீட்சையில் சித்தியடைந்த ஏனையோர் விபரம் பின்வருமாறு: செல்விகள் இரட்னேஸ்வரி கந்தையா, மனோன்மணி நைல்ஸ், புஸ்பனசெல்வி செல்வத்துரை, தேவதயாளம் கந்தையா, விமலராணி ஐயாரு, திருவாளர்கள் எஸ்.நமசிவாயகம், என்.கணேஸ்வரன், ஈ.ஏ.ஜெயசீலன், எஸ்.அமிர்தலிங்கம், சீ.ஆர்.குணசேகர ஆகியோர் ஆவர்.

1958ம் ஆண்டு ஜூன்மாதப் பரீட்சையில் திருவாளர்கள் சத்தியதாஸ் ஜேகப், எஸ்.சிதம்பரநாதன், எஸ்.சங்கரலிங்கம், எஸ்.தங்கரட்ணம், செல்விகள் எஸ்.சரஸ்வதி, எஸ்.தங்கரட்ணம் ஆகியோர் B.Sc. பரீட்சையிலும், திரு.சி.வி.கமலநாதன், செல்வி.எஸ்.நித்தியலக்சுமி ஆகியோர் B.A. பரீட்சையிலும் சித்தியடைந்தனர். B.A. பரீட்சையில் தோற்றியோர் இருவரும் இரண்டாம் வகுப்பில் சித்தியடைந்தனர்.

1959ம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்ற பரீட்சையில் B.Sc. பரீட்சையில் திரு.ஏ.ஜே.ஆசீர்வாதம், திரு.சிவசுப்பிரமணியம் ஆகியோர் இரண்டாவது வகுப்பில் சித்தியடைந்திருந்தனர். திருவாளர்கள் சி.எஸ்.எட்வேட், ஏ.ஜி.இரட்ணம், கே.ஆறுமுகம், பி.ருத்திரராஜா, எஸ்.தனபாலசிங்கம், எஸ்.கே.ராஜசிங்கம், ஏ.கருணாகரன், செல்வி.பி.அன்னலட்சுமி ஆகியோரும் சித்தியடைந்தனர். B.A. பரீட்சையில் திரு.ஈ.மகேஸ்வரன், செல்விகள்.ஜிசுந்தவனதி, ஏ.சரோஜினி, ஏ.கனகேஸ்வரி, வி.சரோஜினி, எஸ்.இந்திராதேவி, எஸ்.விஜயலக்சுமி ஆகியோர் சித்தியடைந்தனர். இவர்களில் ஏ.சரோஜினி, ஜி.சுந்தவனதி, ஈ.மகேஸ்வரன் ஆகியோர் இரண்டாம் வகுப்பில் சித்தியடைந்தனர்.

1960ம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்ற B.A. பரீட்சையில் செல்விகள் சுபத்திராதேவி தேவசகாயம், சகுந்தலா சிவகுருநாதன், செல்வராணி சிதம்பரப்பிள்ளை, திருவாளர்கள் கே.குருசாமி, எஸ்.கே.சிவசுந்தரம் ஆகியோர் சித்தியடைந்தனர்.

அதே ஆண்டில் நடைபெற்ற B.Sc. பரீட்சையில் திருவாளர்கள் நவரட்னராஜா,W..விஜயராஜா, ரி.குணசீலம், பி.கந்தையா, பி.மனோகரன், ஆர்.மதியாபரணன், எஸ்.நல்லநாதன், எஸ்.பொன்னுத்துரை எஸ்.கே.சந்திரசேகரம், எம்.சிவஞானரட்ணம், ஏ.சிதம்பரபிள்ளை, கனகரட்ணம் W.D.குலதுங்கம், செல்விகள் தேவமலர் சோமசுந்தரம், திவீனஅரசசிங்கம், மகேஸ்வரிதேவி கனகரட்ணம், சிவகாமசுந்தரி நாகசுந்தரம் ஆகியோர் சித்தியடைந்தனர். இவர்களில் என்.கனகரட்ணம் மாத்திரம் இரண்டாம் வகுப்பில் சித்தியடைந்தார்.

1961ம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்ற B.A. பரீட்சையில் செல்வி.விமலேஸ்வரி ஜேசுதாசன் (2ndClass Lower Divi) இரண்டாவது வகுப்பு கீழ் பிரிவில் சித்தியடைந்தார். திருவாளர்கள் எஸ்.எஸ்.அருளம்பளம், எஸ்.சிவதாசன் செல்விகள்.சித்ரா கதிர்காமர், விமலாதேவி செல்வபூரணம் செல்லையா ஆகியோரும்

சித்தியடைந்தனர். செல்வி.கமலா கனகரட்ணம் B.Sc. பரீட்சையில் (2nd Class Honours Lower Divi) சித்தியடைந்தார். இவருடன் செல்விகள் நீலாம்பிகை கணபதிப்பிள்ளை, ஏ.பி.சியாம்பளாப்பிட்டிய ஆகியோரும் சித்தியடைந்தனர்.

1966ம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்ற B.Sc. பகுதி 1 பரீட்சையில் திருவாளர்கள் பி.பாலசுப்பிரமணியம், எஸ்.கதிர்காமநாதன், ஜி.மயில்வாகனம், எஸ்.மார்க்கண்டேயர், பி.சதானந்தன், ரி.சத்யமூர்த்தி, எச்.எம்.ஜி.செல்வரட்ணம், கே.விஜயஞாயகம், செல்விகள்.செல்வநாயகி கந்தையா, சீதாலட்சுமி முத்துதம்பி, மனோரஞ்சிதம் சின்னத்தம்பி, கமலாதேவி சிவசம்போ, சறோஜினி சோமசுந்தரம், யோகேஸ்வரி ஸ்டோரர், சந்தானலெட்சுமி தம்பிநாயகம், மீனலோசனி தில்லையம்பலம் ஆகியோர் சித்தியடைந்தனர்.

1962ம் ஆண்டு நடைபெற்ற B.Sc. பகுதி 1 பரீட்சையில் திருவாளர்கள் ஏ.செல்வராஜா, ஏ.இராஜகோபால், எஸ்.என்.விநாயகமூர்த்தி செல்விகள். பி.ரி.சோமசுந்தரம், ஜி.சின்னத்தம்பி ஆகியோரும் B.Sc. பொருளியல் பகுதி 1 பரீட்சையில் செல்வி கே.எஸ்.பரமேஸ்வரி என்பவரும் சித்தியடைந்தனர். அதே ஆண்டில் திருவாளர்கள் ஏ.யோகானந்தன், வி.சிவபாதசுந்தரம் செல்விகள் இராஜேஸ்வரி அப்பாத்துரை, ஜெயமணி ரிச்சாட்ஸ், யோகேஸ்வரி கந்தசாமி ஆகியோர் B.A. பரீட்சையில் சித்தியடைந்திருந்தனர். இவர்களில் ஏ.யோகானந்தன் என்பவர் இரண்டாவது வகுப்பில் கீழ் பிரிவில் சித்தியடைந்திருந்தார்.

1966ம் ஆண்டு B.A பரீட்சையில் செல்விகள் மங்கையக்கரசி பரம்சோதி இரட்ணமலர் பெரியதம்பி, கௌரி தில்லையம்பலம், திருவாளர்கள் ஜி.இராஜநாயகம், எஸ்.சரவணமுத்து, தம்பித்துரை, செல்வி.ஞானசோதி தம்பிதுரை, செல்வி.சுசிலா தாமோதரம், செல்வி.சகுந்தலா சின்னத்தம்பி, செல்வி.பத்மசோதி ஆகியோர் சித்தியடைந்தனர்.

அதே ஆண்டில் B.Sc. பரீட்சையில் திருவாளர்கள் ஏ.பாலகிருஷ்ணன் எஸ்.எந்.விநாயகமூர்த்தி, ஜே.ஜி.வீரசிங்கம், ரி.விக்னேஸ்வரா, தம்பிநாயகம் செல்விகள் சந்தனலெட்சுமி சுபசிங்கர், சோமவதி வெங்கடேஸ்வரன், லலிதா ஆகியோர் சித்தியடைந்தனர். இவர்களில் தம்பிநாயகம், செல்வி சந்தனலெட்சுமி என்பவர்கள் இரண்டாம் வகுப்பில் கீழ் பிரிவில் சித்தியடைந்தார்கள்.

1967ம் ஆண்டு நடைபெற்ற B.A. பரீட்சையில் திரு.எஸ்.கருணாநந்த, சின்னையா, செல்விகள் நகுலேஸ்வரி சின்னக்குட்டி, செல்லம்மா மயில்வாகனம், அனுசியாதேவி சுப்பிரமணியம், ஞானபூங்கோதை தனபாலசிங்கம், அருந்ததி ஆகியோர் சித்தியடைந்தனர். இவர்களில் தனபாலசிங்கம், செல்வி அருந்ததி ஆகியோர் இரண்டாம் வகுப்பில் சித்தியடைந்தார்கள். திரு.என்.செல்வராஜா B.Sc. பரீட்சையில் சித்தியடைந்தார்.

1968ம் ஆண்டு நடைபெற்ற B.A. பரீட்சையில் திருவாளர்கள் ரி.இராமநாதன், எஸ்.தேவாரோக்கியம், குமாரசுவாமி, செல்வி. சகுந்தலாதேவி வீரசிங்கம், செல்வி.பி.ராகவன் ஆகியோர் சித்தியடைந்தார்கள். இவர்களில் வீரசிங்கம், செல்வி பி.ராகவன் இரண்டாம் வகுப்பில் கீழ் பிரிவில் சித்தியடைந்தார்கள். திரு.எஸ்.சாம்பசிவம் B.Sc. பரீட்சையில் சித்தியடைந்தார்.

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரி பிரிவில் கல்விபயின்று இலங்கை பேராதெனிய பல்கலைக்கழக B.A, B.Sc, B.A.Special (Economics) B.A.Special (Geography பட்டப்பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த மாணவர்கள் பின்வருமாறு:

1967ம் ஆண்டு இலங்கைப் பேராதனை பல்கலைக்கழக B.Sc. பரீட்சையில் செல்வி.சி.ஜெயராணி, செல்வி.கே.கோமலம் ஆகியோர் சித்தியடைந்தனர். திரு.கே.ஜெயராஜசிங்கம், திரு.எஸ்.திருஞானசம்பந்தகுருக்கள் ஆகியோர் B.A. பரீட்சையில் சித்தியடைந்தனர். செல்வி.ஏ.விமலேசினி, திரு.கே.பாலகிருஷ்னன

ஆகியோர் B.A. பரீட்சையில் புவியியல் துறையில் சிறப்புப்பட்டம் பெற்றனர்.

1968ம் ஆண்டு B.A பரீட்சையில் திரு.எஸ்.இந்திரராஜா, செல்வி.ஆர்.ஜெயதேவி, திரு.எஸ்.இரட்ணராஜா, செல்வி.எஸ்.நவமணி ஆகியோர் சித்தியடைந்தனர்.

1969ம் ஆண்டு B.A. பரீட்சையில் திரு.எஸ்.சந்திரபோஸ், செல்வி.கே.திரேசா, திரு.ஜே.ஜெசுதாசன், செல்வி.எம்.விசாலாட்சி, செல்வி.பி.நடராஜா, திரு.பி.பீற்றர், திரு.வி.பொன்னம்பலம், திரு.எம்.எஸ்.எ.ரஹீம், செல்வி.செல்வநாயகம், திரு.எஸ்.தம்பிராஜா, மேரிவிக்டோரின் Rev.Sister. ஆகியோர் சித்தியடைந்தனர். B.A. பொருளியல் சிறபபுத்துறையில் (Spc.Econ.) திருவாளர்கள் எ.குமாரவடிவேல், ஏ.ஜே.ஜி.இராஜகுலேந்திரன் ஆகியோர் சித்தியடைந்தனர்.

**B.A.General (Ceylon) 1970**

1970ம் ஆண்டு B.A. (பொது) பரீட்சையில் ஆசிர்வாதம் எஸ்.எ.செல்லையா, செல்வி.கலாவதி, பெர்ணாண்டே, W.E.D.கனகரட்ணம், செல்வி.சுகுணாதேவி, கதிர்வேலு எஸ்.கேயோன் எம்.ஏ.மகாதேவா எம்.முதலிதம்பி ஏ.நடராஜா, செல்வி.சந்தானதேவி, நமசிவாயம், செல்வி.திலகவதி, பொன்னுத்துரை, கே.இராமலிங்கம், செல்வி.மகேஸ்வரி, இராஜரட்ணம், செல்வி.இராஜலட்சுமி, இராமனுஜம், செல்வி.அருணா, இரட்ணசபாபதி, செல்வி.கமலாதேவி, சதாசிவம், ஏ.சேதுபதி, செல்வி.கமலா, சின்னப்பு, செல்வி.பொன்திருமல், தம்பித்துரை, செல்வி.கனகசுந்தரி, தில்லை சிற்றம்பலம், கே.திருஞானம், செல்வி.ரட்னேஸ்வரி, திருவிலகன், செல்வி.சித்ராணி, துரைராஜா, செல்வி.லலிதா, வீரக்கோண், செல்வி.பத்மநாயகி ஆகியோர் சித்தியடைந்தனர். B.A.Special Economics சிறப்புப் பொருளியல் துறையில் சங்கரப்பிள்ளை, செல்வி.சிவனேசமலர் என்பவரும் B.A. Special Geography சிறப்பு புவியியல் துறையில் குமாரசுவாமி, செல்வி.பாலகுமாரி என்பவரும் சித்தியடைந்தனர்.

1971ம் ஆண்டு B.A பரீட்சையில்

செல்வி கொளரி ஆனந்த நாயகம், திரு.P.கோபாலன், திரு.T.ஜெகதீசன், செல்வி ஜோஸ்பின் ஜோசப், திரு.்.குலவீரசிங்கம், செல்வி சிவகுலநாயகி மாணிக்கவாசகம், திரு.ஞ.நவகடாட்சம், திரு.N.புவனேந்திரன், செல்வி.லில்லியன்.J.புவிராஜசிங்க, திரு.யு.ரகுமதுல்லா, செல்வி அமிர்தாம்பிகை இராமநாதன், செல்வி சரஸ்வதி சின்னத்துரை, திரு.வி.தங்கராஜா, செல்வி சிவசோதி வல்லிபுரம் ஆகியோர் சித்தியடைந்தனர்.

1972 இல் நடைபெற்ற B.Sc பரீட்சையில் திரு.C.ராஜேஸ்வரன் சித்தியடைந்தார். மேலும் அதே ஆண்டில் நடைபெற்ற **B.A** பரீட்சையில் செல்வி சரோஜாதேவி ஆறுமுகம், திரு.வீ.பகவான், திரு.மு.பாலசிங்கம், செல்வி கனகேஸ்வரி கனகசபை, திரு.M.L.M.இக்பால்,திரு.ஆ.பாக்கியநாதன், திரு.S.பரமேஸ்வரநாதன்,செல்வி கற்புக்கரசி சீனியர், செல்வி ரஜினி சண்முகநாதன், செல்வி கமலேஸ்வரி சின்னத்துரை, செல்வி செல்வராணி சிங்கராஜா, செல்வி சந்திரதேவி சுப்பிரமணியம், செல்வி உ. சுப்பிரமணியம், செல்வி தர்மபதி தர்மலிங்கம் ஆகியோர் சித்தியடைந்தனர்.

## Notes

(1) Prospectus of the Undergraduate Department. 1960-1961

**(2)** Prospectus of the undergraduate Department.

**(3)** Morning Star. Aug.7, 1953.

**(4)** Morning Star.. A New Professor for Jaffna College. Oct.31,1947.

**(5)** Morning Star-Jan. 23,1948.

# 3.வெளியீடுகள்

# பட்டதாரிப் பிரிவில் உருவாக்கப்பட்ட நூல்களும் சஞ்சிகைகளும்

வட்டுக்கோட்டை செமினரி 1823ல் ஆரம்பமாகிய காலத்திலிருந்தே தமிழ் உரைநடை வளர்ச்சியிலும் கலாசார வளர்ச்சியிலும் தீவிர கவனம் செலுத்தியது. இக்காலப் பகுதியில் தான் தமிழ்ப் பேராசிரியராக நீர்கொழும்பைச் சேர்ந்த காபிரியேல் திசேரா என்பவர் நியமிக்கப்பட்டார். வட்டுக்கோட்டை செமினரியிலும், பின்னர் ஸ்தாபிக்கப்பட்ட யாழ்ப்பாணக்கல்லூரியிலும் அதிபர்களாகவிருந்த டானியல்புவர், எச்.ஆர்.ஹொய்சிங்டன், சாமுவேல் ஹவுலண்ட் ஆகியோர் தமிழிலும், இந்துசமயத்திலும் பாண்டித்தியம் பெற்று விளங்கினர். டானியல்புவர் இந்து வானசாஸ்திரத்திலும், தமிழிலக்கிய மரபிலும் அதிக ஆர்வம் கொண்டிருந்தார். தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் மாணவர்களின் பிரயோகத்திற்கென "பாலபோதங்கள்" எழுதினார். இவருடைய பேருக்கத்தினால் தமிழிலக்கிய நூல்கள் விஞ்ஞான ஆய்வு முறைகளைக் கொண்டு கற்பிக்கப்பட்டன.

டானியல் புவரைத் தொடர்ந்து எச்.ஆர்.ஹொய்சிங்டன், எம்.ஏ., டி.டி. அவர்கள் செமினரியின் தலைவரானார். அவர் அமெரிக்காவில் இருக்கும்பொழுது லத்தீன், கிரேக்கம், எபிரேயம் ஆகிய மொழிகளில் நல்ல பயிற்சி பெற்றிருந்தார். எனவே யாழ்ப்பாணம் வந்தவுடன் தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளையும் ஐயந் திரிபறக் கற்றறிந்தார்.

இந்து வானசாஸ்திரத்தில்அதிக ஈடுபாடு கொண்டு அதனைச் சரிவர கற்பதில் அதிக நேரத்தைச் செலவிட்டார். தமது ஆராய்ச்சிகளைப் பயன்படுத்தி 'இந்து வானசாஸ்திரம்' என்னும் ஒரு அரிய நூலை ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதி வெளியிட்டார். இந்த நூல் கல்கத்தா பல்கலைக்கழகத்தினால் முதுமானி கணித பரீட்சைக்கு ஒரு பாடநூலாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சைவசமயத்தை ஆர்வத்துடன் கற்ற கலாநிதி.ஹொய்சிங்டன் தத்துவக்கட்டளை, சிவஞானபோதம், சிவப்பிரகாசம் ஆகிய சாஸ்திரநூல்களில் தேர்ச்சியடைந்தார். இம்மூன்று நூல்களையும் ஆதாரமாக் கொண்டு சைவசித்தாந்தம் பற்றிய ஒரு நூலை ஆங்கிலத்தில் 1854ல் எழுதினார். சாஸ்திர நூல்களிலுள்ள செய்யுள்களுக்கு கலாநிதி.ஹொய்சிங்டன் அளித்திருக்கும் உரை அவருடைய ஆராய்ச்சித்திறனுக்கும் ஆற்றலுக்கும் சான்று பகருகின்றது.

வட்டுக்கோட்டை செமினரியில் கற்ற மாணவர்களாகிய சி.டபிள்யு.தாமோதரப்பிள்ளை, ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை, நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை, வைமன் கதிரவேற்பிள்ளை, எவேட்ஸ் கணகசபை ஆகியோர் தமிழ் இலக்கியத்தையும், இலக்கணத்தையும் சிறப்புறக் கற்றுத் தமிழ்மொழிக்குப் பல வழிகளிலும் தொண்டாற்றினார்கள்.

1857ம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகம் முதன்முதலாக கலைமாணிப்பரீட்சை நட்திதிய போது அதிலே சித்தியடைந்தவர்களில் இருவர் பழைய மாணவர்களாகிய சி.டபிள்யு.தாமோதரப்பிள்ளையும் அவருடைய ஆசிரியர் கரோல் விசுவநாதப்பிள்ளையுமேயாவார்.

செமினரியின் பண்ணியினால் தமிழ்மொழி உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றது. தமிழ் உரைநடை விருத்தியடைந்தது. தமிழிலக்கியக் கருத்துக்களையும் சைவசமயக் கருத்துக்களையும் பரப்புவதற்குரிய கருவியாக இருந்த தமிழ், உலகிய விஞ்ஞானம், தத்துவம், வானஸ்சாஸ்திரம் என்பவற்றின் மொழியாகவும் வளர்ச்சியடைந்தது. வட்டுக்கோட்டை செமினரி மாணவர்கள் சீரழிந்த நிலையிலிருந்து தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை அச்சு வாகனம் ஏற்றிப் புத்துயிர் அளித்தனர்.மாணவர்களின் தனி நாயகனாக விளங்கிய ச.டபிள்யு.தாமோதரப்பிள்ளை , தொல்காப்பியம், வீரசோழியம், கலித்தொகை, நீதிநெறிவிளக்கம், சூளாமனி என்னும

நூல்களைப் பதிப்பித்தார்.

செமினாரியில் அவருடைய ஆசிரியராக விளங்கிய கறோல் விசுவநாதப்பிள்ளை சுப்பிரதீபம் என்னும் சமய நூலையும் வீசகணிதம் என்னும் மொழிபெயர்ப்பு நூலையும் எழுதினார். எவேட்ஸ் கனகசபைப்பிள்ளை சிறந்த கவிஞராக விளங்கித் திருவாக்குப் புராணம் சுவிசேஷ காண்டம் என்பதனோடு அநேக கீறிஸ்தவ கீர்த்தனைகளையும் யாத்தனர்.

வைமன் கதிரவேற்பிள்ளை சங்க அகராதியை எழுதி முடித்தார். லிட்டாரி மிறர் என்னும் ஆங்கில சஞ்சிகையும் இலங்காபிமானி என்ற தமிழப்பத்திரிகையும் ஆரம்பித்த அதனைச் சிலகாலம் நடாத்தி வந்தார். நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை தமிழிலே முதன்முதலாக எழுதப்பட்ட நியாய இலக்கணத்தின் ஆசிரியர்.

செமினரி மறைந்து யாழ்ப்பாணக்கல்லூரி முகிழ்த்த பொழுது (1872) அதன் முதலாவது தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர் நவாலியைச் சேர்ந்த ஆர்ணல்ட் சதாசிவப்பிள்ளையாவார். இவர் உரையிலும் செய்யுளிலும் பலரக நூல்களை எழுதித் தமிழை வளப்படுத்தினார். மெய்வேதசரணம், திருச்சதகம், நன்னெறிக்கொத்து, நானவென்பா, இல்லறநொண்டி, சாதாரண இதிகாசம், வானசாஸ்திரம், வெள்ளையந்தாதி, பஞ்சரத்தினமாலை, சுகமரனஅபேட்வம் என்பன அவர் எழுதிய நூல்களிற் சிறந்தவை. அவர் எழுதிய பாவலர் சரித்திர தீபம் தமிழிலக்கிய வரலாற்று ஆய்வில் முக்கியமான இடம் வகிக்கின்றது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய திரு.அலென் ஆபிரகாம் அவர்கள் வானசாஸ்திரத்திலும் கணக்கியலிலும் நிபுணராக திகழ்ந்தார். இவர் பக்திச்சுவை நனி சொட்டும் பலரக கீறிஸ்தவப் பாடல்களைப் பாடினார். இவரைத் தொடர்ந்து யாழ்ப்பாணக் கல்லூரியின் தமிழ்த்துறையை அலங்கரித்த திரு.ஜே.சி.அமரசிங்கம், திரு.கே.ஈ.மதியாபரணம், திரு.ஆர்.பாலசுப்பிரமணியஐயர் போன்றோரும் தமது

கட்டுரைகளினாலும் பேச்சுக்களிலும் தமிழை வளர்த்தனர்.

1947-74ம் ஆண்டுக்குமிடையில் யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரி மாணவர்களினால் வெளியிடப்பட்ட சஞ்சிகைகள்

## வட இளம் கலைஞன் (Northern Undergrad)

மாணவர்களை இலண்டன் பல்கலைக்கழகத்து இறுதி கலைமாணி விஞ்ஞானமாணி பரீட்சைகளுக்கு தயார் செய்த காரணத்தினால் "பட்டதாரி" வகுப்புக்கள் "(DegreeClasses) என்று அழைக்கப்படும் வகுப்புக்கள் 1947இல் ஆரம்பிக்கப்பட்டன. இடைநிலை, கலை, விஞ்ஞான பரீட்சைகளுக்கு மாணவர்களை தயார் செய்யும் வகுப்புக்கள் பட்டதாரி வகுப்புக்கள் ஆரம்பிக்க முன்னமே இருந்து வந்தன. 1950ம் வருட முற்பகுதியில் பட்டவகுப்பு மாணவர்களால் "வட இளம் கலைஞன் "(Northern Undorgrad) என்ற சஞ்சிகை ஆரம்பிக்கப்பட்டது. 1950ம் வருட இடை, இறுதி காலப் பகுதிகளில் இச் சஞ்சிகை உயர்தரத்தை அடைந்ததாகத் தெரிகிறது. அத்துடன் இச்சஞ்சிகை ஒழுங்காக வருடத்திற்கு மூன்று தடவைகள் ஓகஸ்ட், டிசம்பர், மார்ச் ஆகிய மாதங்களில் வெளியிடப்பட்து. 1960ம் ஆண்டுகளின் முற்பகுதியில் இது தடைப்பட்டதாகத் தெரிகிறது. 1969ம் ஆண்டில் கல்லூரி வளாக நிருபர் (The Campus Reporter) என்ற பெயரில் புதிய பிரசுரமாக வெளியிடப்பட்டது.

ஒரு உயர் தராதரத்தை அடைந்த "வட இளம் கலைஞன்" என்ற சஞ்சிகை சடுதியாக நிறுத்தப்பட்டதற்கு என்ன காரணம்? 1961ம் ஆண்டு பாடசாலை சுவீகரிக்கும் சட்டத்தின் கீழ் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை சுவீகரிக்கும் நிலை உருவானது. பாடசாலைகளை சுவீகரிக்கும் சட்டம் அமுலுக்கு வந்ததன் பின்னர் மூன்று நான்கு வருடங்களில் கட்டாயமாகவும் முறையாகவும் பாடசாலைகள் சுவீகரிக்கப்பட்டு வந்தன. ஒரு சில பாடசாலைகளே கட்டணம் அறவிடாத தனியார் பாடசாலைகளாக இருக்க விரும்பின. வடக்கில் யாழ்ப்பாணக்கல்லூரிப் போன்ற மிகச் சிறிய எண்ணிக்கையிலான பாடசாலைகளே தொடர்ந்தும் கட்டணம

# THE NORTHERN UNDERGRAD

THE MAGAZINE OF THE UNDERGRADUATES' UNION,
JAFFNA COLLEGE VADDUKODDAI, CEYLON.

EDITORIAL

NATAL, NOEL, CHRISTMAS

A RECIPE

THE PAST, PRESENT AND THE FUTURE

DE GAULLE, THE MAN

OVER - POPULATION

I CAME, I SAW, I UNDERSTOOD

SIGNIFICANCE OF BRETTONWOODS' FINANCIAL INSTITUTIONS

WILL MAN OUTGROW THE EARTH

DREAMS AND THE MIND

CANADA — EXCERPTS FROM THE CANADIAN HIGH COMMISSIONER'S DINNER SPEECH

THE VEDDAS OF KANDEGANWELA

I COULDN'T HELP IT

OUR SCIENCE EXHIBITION

CAMPUS CAUSERIE

VOL. IV. NO. 2. DECEMBER, 1958.

அறவிடாத தனியார் பாடசாலைகளாக இருக்க விரும்பின. பாடசாலைகளை சுவீகரிப்பதற்காக கொடுக்கப்பட்ட காரணங்கள் தனியார் பாடசாலைகளின் உரிமையாளர்களினதும், அதிகாரிகளினதும் மனதில் பயத்தையும் சந்தேகங்களையும் தோற்றுவித்தன.

மேலும் 1958 இல் ஆரம்பமான இனக்கலவரம் தமிழ், சிங்கள சமுதாயங்களுக்கிடையில் கசப்புணர்வை தோற்றுவித்தது. 1961ம் ஆண்டு பதவிக்கு வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தமிழருக்கு குறைந்தபட்ச உரிமைகளைக் கூட வழங்குவதற்கு மறுப்பு தெரிவித்ததுடன், இலங்கையை ஒரு சிங்கள பௌத்த நாடாக ஆக்குவதற்கு எண்ணமுடையதாக இருந்தது. தமிழரசுக் கட்சியினால் ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரகத்தை வலோக்காரத்தினால் முறியடித்தது.

இவ்வாறு, இலங்கையின் அரசியலில் காணப்பட்ட குழப்பமான சூழ்நிலை யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரி மாணவர்களால் சுதந்திரமாக நிர்வகிக்கப்படும் சஞ்சிகை தொடர்ந்து இயங்குவதற்கு ஏற்றதாக இருக்கவில்லை. ஏனெனில் இது ஏற்கனவே புகழ்விரும்பிகளான அரசியல்வாதிகளைப் பற்றித் துணிகரமாக விமர்சித்தது. 1961 டிசம்பர் வெளியீட்டில் "வட இளம் கலைஞன்" தனது ஆசிரியர் குறிப்பில் உதவிபெறும் பாடசாலைகளை அரசு சுவீகரிப்பது பற்றி விமர்சித்ததுடன், இனவாதத்தை தூண்டிவிடும் அரசியல்வாதிகளையும் கண்டித்தது. இவ்விதழ் வெளியீட்டை கல்லூரி அதிகாரிகள் நிறுத்த வேண்டியதாயிற்று. அது துரதிஷ்டமானதொன்றாகும்.

இவ்வாறாக "வட இளம் கலைஞன்" என்ற சஞ்சிகையில் வெளியிடப்பட்ட கருத்துக்கள் காரணமாக கல்லூரிக்கு எதிராக அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்கலாம் அல்லது பாதிக்கப்பட்ட அரசியல்வாதிகள் ஏதாவது தீங்குகளைச் செய்யலாம் எனக் கல்லூரி அதிகாரிகள் கருதினார்கள்.

என்ன காரணமாக இருந்தாலும் வெளியீடு 1962இல் நிறுத்தப்பட்டு 1969வரை தொடங்கப்படவில்லை. மேலே கூறிய வண்ணம் "கல்லூரி வட்டார நிருபர்" (The Campus Reporter) என்ற புதிய பெயருடன் ஆரம்பமாகியது. இச்சஞ்சிகை முன்னர் வெளியிடப்பட்ட "வட இளம் கலைஞன்" என்ற சஞ்சிகையிலும் பார்க்க சிறிய அளவினதாகவும், தரங் குறைந்ததாகவும் காணப்பட்டது. இப் புதிய வெளியீடு வட இளம் கலைஞன் அந்தஸ்தையும் அது அனுபவித்த மதிப்பையும் பெறமுடியவில்லை. ஏனெனில் 1970இல் ஆரம்ப காலத்தில் வடக்கிலும் தெற்கிலும் இருக்கும் அரசியல் வாதிகள் பட்டதாரிப் பிரிவை அரசு சுவீகரித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஒரு பகுதியாக ஆக்கவேண்டுமென வற்புறுத்தினர். 1974ம் ஆண்டு பட்டதாரிப் பிரிவு சுவீகரிக்கப்பட்டு, அத்துடன் கல்லூரிப் பிரிவின் வாழ்வுக்கு ஒரு முடிவு கொண்டு வரப்பட்டது.

வட இளம் கலைஞன் பேரும், புகழும் பெற்று சிறப்புற்று விளங்கிய காலப்பகுதியில் அச்சஞ்சிகை எத்தரத்தில் இருந்து என்பதனையும் பட்டதாரிப் பிரிவு மாணவர்களில் எத்தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதனையும் ஆராயும் பொருட்டு 1957, 1958ம் ஆண்டுகளில் வெளிவந்த சஞ்சிகைகள் ஆசிரிய தலயங்கம், கட்டுரைகள் ஆகியவற்றை ஆராய்வது மிகப் பொருத்தமானதாகும்.

இலங்கை அரசியற் சரித்திரத்தில் 1958ம் ஆண்டு "பிரிக்கும் எல்லைச் சுவரை ஏற்படுத்தியது" (Water Shed) என்ற புகழை ஏற்கின்றது. இவ்வருடத்திலேயே அரசியல் வாதிகளினால் தூண்டிவிடப்பட்ட பகையுணர்ச்சி உச்சக்கட்டத்தை அடைந்தது. இந்நிலைமை 1958ம் ஆண்டில் மிக மோசமான இனக்கலவரத்தில் முடிவடைந்தது. இவ்இனக்கலவரத்தினால் ஆயிரக்கணக்கான சிறுபான்மை இனத்தவர் பலர் உயிரிழந்தனர். பலர் தங்கள் சொத்துக்களை இழந்தனர். முதன் முதலாக இலங்கை முழுவதும் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டது. இந்நிலைமை காவல் துறையினரும் படையினரும் சிவில் நிர்வாகத்தை பொறுப்பேற்கும் நிலையைத் தோற்றுவித்தது.

# The Northern Undergrad

# வட இளம்கலைஞன்

மலர் 6. பங்குனி 1961 இதழ் 3

VOL. VI: MARCH 1961. No. 3.

சிங்கள இனவாதத்தின் கொடுமையை மாணவர்களும் பொதுமக்களும் உணர்ந்து கொள்ள சிங்கள அறிஞர்கள் கட்டுரைகளை மேற்கோள்காட்டி, தாமே தலையங்கம் தீட்டியும் இச்சஞ்சிகை பெரிதும் சேவையாற்றியுள்ளது.

1956ம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டமாக்கப்பட்டதிலிருந்து இனவாதம் தலைதூக்கத் தொடங்கியது. இது 1957 இல் அதிகரித்தது. சிற்சில வன்முறைகள் அங்காங்கே நடைபெற்றன. 1958ம் ஆண்டு மே யில் கலவரம் ஆரம்பமானது. இக்கலவரம் யூன் மாதத்தில் உச்சக்கட்டத்தை அடைந்தது. யூன் மாத மத்தியில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டு ஊரடங்குச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

பட்டதாரிகளின் இச்சஞ்சிகை இச்சூழ்நிலையை மிகத் தெளிவாக ஆராய்ந்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இக்காலப்பகுதியில் வெளிவந்த சஞ்சிகையின் ஆசிரியர் தலையங்கம், கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அனைத்தையும் பார்க்கின்ற பொழுது, முதிர்ச்சியடைந்த நிலையில் மாணவர்கள் நடுநிலையான கருத்துக்களை தெரிவித்திருப்பதையும், ஒன்றுக்கும் அஞ்சாத சுயமான சிந்தனையுடையவர்களாக இருந்திருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

1957ம் ஆண்டு மார்ச் மாதத்தில் வெளிவந்த சஞ்சிகையின் ஆசிரியத் தலையங்கத்தில் டொனமூர் ஆணைக்குழுவினால் சிபார்சு செய்யப்பட்ட சேர்.பொன்.இராமநாதன் அவர்களின் கருத்துக்களை மேற்கோள் காட்டியது.

> ‘‘கல்வியறிவு இல்லாதவர்கள் சரியான தீர்மானங்களைச் செய்வதற்கு அரசியல் அனுபவம் இல்லாதவர்களாகவும், தகுதியற்றவர்களாகவும், சரியான பிரதிநிதியைத் தெரிவு செய்யமுடியாமலும் இருக்கின்றமையால் இலங்கை சர்வசன வாக்குரி

மைக்கு இன்னும் தயாரில்லை.

சேர்பொன் இராமநாதன் அன்றைய சூழ்நிலையில் சொன்னதைச் சரியென்று உண்மையாக்கி இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர் நிலவிய அரசியல் நிலமை இதை நிருபிக்கின்றது என்பதை ஆசிரியர் தலையங்கம் குறிப்பிடுகின்றது.(1)

சர்வசன வாக்குரிமையின் பெறுமதி, அதை எவ்வாறு மக்கள் உபயோகிக்க வேண்டுமென்பதை தங்களால் இயன்றளவு விளக்கிவந்துள்ளார்.

இரு இனத்தைச் சேர்ந்த அரசியல் வாதிகள் இனவாதம் என்ற அணலை கொழுந்துவிட்டெரியச் செய்தனர். படித்த ஆண்களும், பெண்களும் இந்தச் சவாலை ஏற்றுக் கொள்ளவேண்டும். இந்தச் சவாலை ஏற்றுக்கொள்வதற்கு குறிப்பிடத்தக்க அரசியல் சம்பந்தமான கல்வியை பொது மக்களுக்கு வழங்க வேண்டுமென்ற வற்புறுத்தலுடன் ஆசிரியர் தலையங்கம் முடிவடைகின்றது.

1958 ஓகஸ்ட் மாதத்தில் வெளிவந்த ஆசிரியர் தலையங்கம், இது இலங்கையில் இனக்கலவரங்கள் உச்சநிலை அடைந்து அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்ட பின் எழுதியிருக்கலாம். இவ்வாசிரியர் தலையங்கத்தில் புதிதாக சுதந்திரம் பெற்ற இலங்கை போன்ற ஜனநாயக நாடுகளில், அடிப்படை மனித உரிமைகள் பற்றிய மதிப்பையும், முக்கியத்துவத்தையும் மக்கள் அறியாது இருக்கின்றனர் என்பதைச் சுட்டுகின்றது. கல்வியறிவின்மை, அரசியல் அனுபவமின்மை ஆகிய காரணங்களே கலவரங்களுக்கு காரணமாயிருந்தது என்பதுடன் ஆசிரியர் தலையங்கம் முடிவடைகிறது.

பத்திரிகையாசிரியர் இனவாதப் பதட்டநிலை எவ்வாறு வளர்ந்தது என்பதையும் வரைந்து காட்டுகிறார். 1956 "சிங்களம் மட்டும் சட்டம்" கொண்டு வரப்பட்டமையினால் ஏற்பட்ட 1958ம் ஆண்டு இனக்கலவரம் மற்றும் பிரிவினை வழிகள் மார்க்கங்கள

என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

1958ம் ஆண்டு டிசம்பரில் வெளியான இதழில் ஒரு சிங்கள கனவான், வோட்டர்சன் விஜயவிக்கிரம என்பவரால் இனவாத நிலையைப் பற்றிய புகழப்படக்கூடிய கட்டுரையை வெளியிட்டது. "நான் வந்தேன், நான் கண்டேன், நான் விளங்கிக் கொண்டேன்." என்பது தான் அக்கட்டுரையாகும். தமிழரின் அபிலாசைகளை அறிந்து கொள்வதற்கும் விளங்கிக் கொள்வதற்கும் உண்மையான கரிசனையை காட்டுகிறார் இக்கட்டுரை ஆசிரியர். இவர் இனக்கலவரத்துக்கு "பௌத்தம் மட்டும், சிங்களம் மட்டும்" என்று மக்களை தவறிழைக்கச் செய்த சிங்கள அரசியல் வாதிகளே காரணமென்று சாடினார். அக்காலத்திலிருந்து சிங்கள அரசியல் வாதிகள் மத்தியிலிருந்து திரு.விஜயவிக்கிரம செல்வாக்கு அற்றவராகக் காணப்பட்டார். ஆனால் தற்பொழுது பொறுப்புள்ள பலரும் இவரின் கருத்துக்களை ஆதரிக்கின்றனர்.

1958 கலகத்தின் போது இச்சஞ்சிகைகள் தமிழ் மக்கள் மனதில் ஒரு சமநிலை நிலவ எழுத்துக்கள் மூலம் முயன்று வந்துள்ளன.


வட இளம் கலைஞன் என்ற சஞ்சிகை ஒரு உயர் தராதரத்தை 1950ம் ஆண்டுகளில் அடைந்தது என்பதை உறுதிப்படுத்த, சில சஞ்சிகைகளில் வெளியான சில கட்டுரைகளை ஆராய்வது மிகப் பொருத்தமாக இருக்கும். இக்கட்டுரைகள் யாவும் இலக்கிய, விஞ்ஞான, சமூக, அரசியல் ஆகிய நிலைகளில் வைத்து பட்டியலிடப்பட்டு ஆராயப்படுகின்றது.

1. **இலக்கியக் கட்டுரைகள் (Literary Articles)**

Some thoughts on Poetry -Maureen de silva (2)
Milton and T.S.Eliot -E.Maheswaran (3)
Wit. of John Donne -Sudavanthy Gunanayagam (4)
TamilLiterature and Rhetoric -C.V.Kamalanathan (5)
Selections from the "kururtokai" -C.V.Kamalanathan (6)



Staff & Students - 1964



Hostelers

வள்ளுவர் காட்டும் அறம் -கே.ஆர்.சொக்கலிங்கம் (7)

2. விஞ்ஞானக் கட்டுரைகள்

1. Two articles on Typhoid Fever (8)
2. The History of Nuclear Energy -K.Rajasingham (9)
3. Boy or Girl K.S.Nallanathan (10)
4. Radio -Active isotopes Its Marvels and Hazards - A.T.Sundramoorthy (11)
5. The struggle of Mankind with Nuclear Explosions - J.G.Veerasingham (12)
6. ஒளியின் இயல்பு . க.இரத்தினவடிவேல் (13)

3. சமூக, அரசியல் கட்டுரைகள் **(Social &Political Articles)**

1. Caste Discrimination in Churches -Jeevan Sivanaiah (14)
2. The Forth Estate -Sock (15)
3. Ceylon -Whither Domocracy? -S.Thamoth arampillai (16)
4. A Society in Transition -Peggy Person (17)
5. Thwards an International Order -S.Sivathasan (18)
6. Crisis in the U.N.O -M.Kadirgamayhamby (19)

பொதுவாக மாணவர் மத்தியிலும், பொதுமக்கள் மத்தியிலும் விஞ்ஞான, இலக்கிய, சமூக கருத்துக்கள் பரவுவதற்கு இச்சஞ்சிகை சிறந்த முறையில் சேவையாற்றியுள்ளன. விஞ்ஞானக் கருத்துக்களும் இலக்கியக் கருத்துக்களும் பொதுவாக சமூகத்தின் அங்கத்தவர் ஒவ்வொருவரும், அச்சமூகம் முன்னேறவும் இனம் முன்னேறி வளரவும் ஏற்ற முறையில் கடைப்பிடிக்க வேண்டிய கடமைகளை இச்சஞ்சிகைகள் காலத்துக்குக் காலம் எடுத்துக்கூறி வந்துள்ளன.

வட இளம் கலைஞன் டிசம்பர் 1958ம் ஆண்டு இதழில் கனடிய உயர் ஸ்தானிகர் திரு.நிக்காவெல் அவர்கள் பட்டதாரிப் பிரிவு சங்கத்தின் வருடாந்த இரவு விருந்தின் போது ஆற்றிய உரையை வெளியிட்டது. திரு.நிக்காவெல் அவர்கள் தமது உரையில

பொறுமையும், புரிந்துணர்வும் கொண்ட ஒரு ஜனநாயக சமூதாயத்தில் ஒவ்வொரு இனமும் மற்றவர்களது உரிமைகளை மதித்துப் பழகுதல் வேண்டும். இதனால் பல்லின சமூதாயம் சமூகமாகவும், திறமையாகவும் செயற்பட முடியுமென்பதை தனது உரையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தொடர்ந்து தனது உரையில், கனடாவின் பிரஞ்சு மொழியை பேசும் மக்கள் தங்களது சொந்த மொழிக்கும், கலாச்சாரத்திற்கும் உரிமையுடையவர்கள் என்பதை நிலைநாட்டினர் எனவும் ஆங்கில மொழி பேசுபவர்கள் அதனை மதிக்கின்றனர் எனவும் குறிப்பிட்டார்.

கனடாவிலுள்ள சமஸ்டி முறையின் கீழ் எவ்வாறு, இரண்டு வேறுபட்ட மொழிகளையும், கலாச்சாரத்தையும், சமயங்களையுமுடைய இனங்கள் ஒற்றுமையாக இருக்க முடியுமென்பதையும் பகுப்பாந்து காட்டினார்.

இலங்கையின் சரித்திரத்தில் 1958ம் ஆண்டு ஒரு முக்கியமான ஆண்டாகும். அது ஒரு விசேஷித்த காரியத்தை சரித்திர ஆண்டாக இல்லாமல், சரித்திரத்தில் கறைபடிந்த ஆண்டாகக் கருதத்தக்கது. இந்த ஆண்டிலேதான் இனக்கலவரம் தலைவிரித்தாடியது. இவ்வேளையில் பட்டதாரிப் பிரிவு வெளியிட்ட சஞ்சிகையான வட இளம் கலைஞனின் கனடிய உயர்ஸ்தானிகரின் உரை இடம் பெற்றது, மிகப் பெரிய பொருத்தமாக அமைந்தது.

பட்டதாரி மாணவர் சங்கத்தின் தரமிக்க சஞ்சிகையாக "வட இளங் கலைஞன்" பல்லாண்டு துலங்கியிருக்கிறது. ஆரம்பத்தில் ஆங்கில மொழியில் மாத்திரம் வெளிவந்த இச்சஞ்சிகை பின்னர் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இரு பிரிவுகளைக் கொண்டதாக வெளிவந்திருக்கிறது. கட்டுரைகள், கவிதைகள், கதைகள், விமர்சனங்கள், செய்திகள், பொதுப்பிரச்சினைகள் போன்றவற்றை தாங்கி வெளிவந்திருக்கிறது. வஜடம் மூன்று முறை மலர வேண்டுமென்ற நோக்குடன் இச்சஞ்சிகை தரமிக்க

சஞ்சிகையாக வெளிவந்திருக்கிறது.

"வட இளங் கலைஞன்" விடயங்களை பக்திபூர்வமாக நோக்கவும், மாணவர் சமூகத்தின் உள்ளத்தை ஊக்குவிக்கவும் ஒரு கருவியாக விளங்கியிருக்கின்றது. சிந்தனையைத் தூண்ட, சிந்திக்கும் தன்மையை வளர்க்க, பிரச்சினைகளை துல்லியமாக அணுக, கருத்துப் போட்டியில் பங்குபற்றும் நுன்முறையைப் போதிக்க, பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்க இச்சஞ்சிகை பட்டதாரி மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பமாக விளங்கியிருக்கின்றது.

பட்டதாரிப் பிரிவில் வடம் இளம் கலைஞன் என்ற சஞ்சிகையை விட, சில பத்திரிகைகளும் நெருங்கிய உறவினைக் கொண்டிருந்தன.

**உதயதாரகை**

பின்வரும் பத்திரிகைகளே பட்டதாரிப் பிரிவுடன் நெருங்கிய உறவினைக் கொண்டிருந்ததனைக் காணக்கூடியதாக இருக்கிறது. "உதயதாரகை" தமிழ் பத்திரிகை வரலாற்றில் உலகிலேயே இரண்டாவதாகவும் இலங்கையிலே முதலாவதாகவும் "உதயதாரகை" எனும் தமிழ்ப் பத்திரிகை 1841ம் ஆண்டிலே ஆரம்பமானது. இலங்கையில் "உதயதாரகை" யின் தோற்றத்திற்கு முன்னர் ஆங்கில மொழிப் பத்திரிகைகள் பல வெளியிடப்பட்டு வந்தன. "உதயதாரகை" அமெரிக்க மிஷனரிமாரால் நடத்தப்பட்டு யாழ்ப்பாணக்கல்லூரியோடு நெருங்கிய தொடர்புடையதாக விளங்கியது.

தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்ட இப்பத்திரிகைக்கு ஹென்றி மார்ட்டின் என்னும் ஆங்கில ஆசிரியரும், செத்பெய்சன் என்னும் தமிழாசிரியரும் ஆங்கில தமிழ் பத்திராதிபர்களாக நியமிக்கப்பட்டனர். இவர்கள் இருவரும் வட்டுக்கோட்டை செமினரியின் ஆசிரியர்களே என்பது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணக்கல்லூரி ஆசிரியர்களே

# Jaffna College Miscellany

9

DECEMBER, 1947.

இப்பத்திரிகைக்கு தொடர்ச்சியாக எழுதிவந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வட்டுக்கோட்டை செமினரியின் இன்னொரு முக்கியமான சஞ்சிகை யாழ்ப்பாணக்கல்லூரி மிஷலனியாகும். இது 1879ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை வெளியிடப்பட்டு வருகின்றது. இவ் மிஷலனிக்கு பட்டதாரிப் பிரிவில் கல்வி பயின்ற மாணவர்களும், ஆசிரியர்களும் குறிப்பிடத்தக்களவு கட்டுரைகளை தொடர்ச்சியாக எழுதி வந்தார்கள். இதனை ஆராயும் பொருட்டு 1950, 1951ம் 1959, 1971ம் ஆண்டுகளில் வெளிவந்த மிஷலனிகளே ஆராய்வது மிகப் பொருததமானதாக இருக்கும்.

1950ம் ஆண்டு டிசம்பரில் வெளியான மிஷலனியில் பட்டதாரிப் பிரிவு மாணவர்களின் கட்டுரைகள் சிலவற்றை தாங்கி வந்தன. சிரேஷ்ட B.A. வகுப்பு மாணவரான பாலாம்பிகை ஆறுமுகம் என்பவரின் "Wardsworth Nature Mystio" என்ற கட்டுரையும், கனிஸ்ட B.A. வகுப்பின் மாணவரான அன்னலெக்சுமி சின்னத்தம்பியின் ஒரு சிறு கதையும், அதே பிரிவைச் சேர்ந்த ஜோஸ்பிபின் மாணிக்கவாசகரின் "Night Watches of Badulla" என்ற கவிதையும், சிரேஸ்ட B.A. வகுப்பைச் சேர்ந்த ராஜேஸ்வரி யேசுதாசனின் "Jane Austen;s Clergy" என்ற கட்டுரையும் வெளியானது.

1951ம் ஆண்டு டிசம்பரில் வெளியான மிஷலனியில் கனிஸ்ட B.A. வகுப்பைச் சேர்ந்த திரு.எஸ்.இராஜசிங்கத்தின் "இரபீந்தரநாத் தாகூர்" (Rabindranath Tagore) என்ற கட்டுரையையும், சிரேஸ்ட B.A. வகுப்பைச் சேர்ந்த அன்னலட்சுமி சின்னத்தம்பியின் "Hyperion" என்ற கட்டுரையையும் சிரேஸ்ட B.Sc. வகுப்பைச் சேர்ந்த சிங்களவரான ஜெயநந்த ரட்னாயகரின் "Gold Key" என்ற கட்டுரையையும் வெளியிட்டதை சிறப்பாகக் குறிப்பிடலாம்.

1959ம் ஆண்டு டிசம்பரில் வெளியான மிஷலனி சிரேஸ்ட

B.Sc.(Econ) வகுப்பைச் சேர்ந்த ஏ.நாகலிங்கம் என்பவரின் 'United Ceylon" என்ற கட்டுரையை வெளியிட்டது. 1971 மிஷலனியில் ஆர்.திலகரத்தின் (B.Com) "உலகம் எதிர் நோக்குவதும் தீர்க்க வேண்டுவதும்" என்ற கட்டுரையை, எம்.எல்.எம்.இக்பால் B.A., இறுதி வருட மாணவரின் "கோளங்கள் பற்றிக் குர் ஆன்" என்ற கட்டுரையும் வெளியானது. இதே ஆண்டில் பட்டதாரிப் பிரிவைச் சேர்ந்த சி.இராஜேந்திரனின் "நேர்கோடுகள்" என்ற சிறுகதையை வெளியிட்டது. கலைக்கொத்து நடாத்திய சிறுகதைப் போட்டியில் இச்சிறுகதை பரிசு பெற்றது குறிப்பிடத்தக்து.

## இளஞாயிறு (Young Idea)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியின் இன்னொரு முக்கியமான சஞ்சிகை இளஞாயிறாகும். இச்சஞ்சிகை 1936ம் ஆண்டு ஆரம்பமானது. இப்பத்திரிகை மாணவர்களுக்காக நடாத்தப்பட்டு வந்தது. இது வருடத்தில் மூன்று இதழ்கள் அச்சடிக்கப்பட்டு வந்தன. இதில் அரைப்பங்கு ஆங்கிலமாகவும் அரைப்பங்கு தமிழாகவும் இருந்து வந்தது. இச்சஞ்சிகை மாணவர்களுடைய எழுத்தார்வத்தை வளர்க்க பல வழிகளிலும் துணை புரிந்தது. மாணவர்கள் கவிதை, கட்டுரை, கதை என்பனவற்றை எழுதினார்கள். ஆசிரியர்களைப்பற்றியும் கட்டுரை எழுதினார்கள். கட்டுரைகளில் சில ஆழமான விடயங்களும் வெளிவந்தன என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இச்சஞ்சிகையின் முதலாவது ஆங்கிலப் பத்திராதிபராக திரு.சி.ஏ.ஞானசேகரம் விளங்கினார். தமிழ்ப் பத்திராதிபராக முதலாவது ஆசிரியராக கே.எஸ்.இலட்சுமணஜயர் விளங்கினார். இச்சஞ்சிகை 1961ம் ஆண்டு தனது 25வது வருடத்தைப் பூர்த்தி செய்து ஒரு சிறப்பிதழை வெளியிட்டது. இன்று இச்சஞ்சிகை தொடர்ந்தும் வெளியிடப்பட்டு வருகிறது. என்பது குறிப்பிடத்தக்கதாகும். இச்சஞ்சிகையின் ஆசிரியர்கள் பலர் பட்டதாரிப் பிரிவு மாணவர்களாக இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1947ம் ஆண்டுக்கும் 1974ம்

# THE young idea

# இளஞாயிறு

A STUDENT PAPER OF JAFFNA COLLEGE
FOR PRIVATE & INTERNAL CIRCULATION ONLY

Vol. XXIX | FRIDAY, APRIL 9, 1965. | No. 1.

பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| ஆசிரியத் தலையங்கம் ... ... | 1 |
| ஆசிரியர் குறிப்புகள் ... ... | 2 |
| உறையாத தமிர் ... ... ... | 3 |
| கைத்தொழிற் பொருட்காட்சி | 4 |
| சமயோசித விவேகம் ... ... | 4 |
| நாம் வசிக்கும் பூமி ... ... | 5 |
| "அன்பு வென்றது" ... ... | 6 |
| தமிழ் கண்ட பாரதி ... ... | 7 |
| நான்கு கண்கள் — நாலாயிரம் பாவங்கள் ... | 9 |

இ. விஜயரத்தினம்
பத்திராதிபர்

| | Page |
|---|---|
| Editorial ... ... ... ... ... | 10 |
| Editor's Notes ... ... ... ... | 10 |
| Analysis of the season ... | 11 |
| How an Oyster Makes a Pearl | 13 |
| The Power of the Press ... | 14 |
| Ideas — Here they are ... | 15 |
| Freedom Movements of the Tamils ... | 16 |
| The value of Games ... ... | 17 |
| What a Life! ... ... ... ... | 18 |

MISS. C. D. KULATHUNGAM,
*Editor.*

ஆண்டுக்குமிடைப்பட்ட காலப்பகுதியில் பல பட்டதாரி மாணவர்கள் விடயதானம் செய்துள்ளார்கள். சஞ்சிகைக்கு ஏற்ற கனமான பிரிவினரே என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## பட்டதாரிப்பிரிவு மாணவர் ஒன்றியம்

பட்டதாரிப்பிரிவு இயங்கத் தொடங்கிய 1947ம் ஆண்டைத்தொடர்ந்து, கல்வி கற்கும் பட்டதாரி மாணவர்களுக்குகென பட்டதாரி மாணவர் ஒன்றியம் அமைக்கப்பட்டது. மாணவர்கள் தமது கற்கை நெறியை முடித்து வெளியேறுகின்றது முழுநிறைவான மனிதனாக சமூகத்தோடு இணைவது அவசியம் ஆகும். கற்கை நெறிகளில் மட்டுமல்லாது வேறு விடயங்களிலும் அவனுக்குப் பயிற்சி தேவை. இதற்கு ஏற்ற வகையிலேயே 1950ம் ஆண்டுகளின் இறுதியில்பட்டதாரி மாணவர் ஒன்றியம் நிறுவப்பட்டது. இதற்கு என தனியாப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. அந்த யாப்பின் கீழ் மாணவர் அமைப்பு செயற்பட்டது. இலங்கைப்பல்கலைக்கழகங்களில் மாணவர் ஒன்றியம் இருப்பது போன்ற அதே வழிமுறைகளில், அதற்கு சமமான தன்மை பெறக்கூடிய வகையில் இம்மாணவர் ஒன்றிய ஏற்பாடுகள் அமைந்தன.

மாணவர் ஒன்றியத்திற்கான தலைவர், செயலாளர், பொருளாளர் பதவிகளுக்கு நியமனப்பத்திரங்கள் யாப்பு விதிகளுக்கமைவாக தாக்கல் செய்யப்பட வேண்டும். நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட ஒரு மாத காலத்தினுள் பதவிகளின் தெரிவிற்காக தேர்தல் நடைபெறும். யாப்பு விதிகளுக்கு அமைவற்ற முறையில் தாக்கல் செய்யப்படும் நியமனப்பத்திரங்கள் மன்றப் போஷகரால் நிராகரிக்கப்படும்.சிரேஸ்ட விரிவுரையாளர்களே போஷகராக நியமிக்கப்படுவது வழக்கமாகும். தேர்தல் இரகசியவாக்களிப்பு மூலமே நடத்தப்பட்டது. தேர்தலுக்காக நாகரீகமான முறையில் பிரச்சாரம் செய்வதற்கு மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். தேர்தல் நடாத்தப்பட்ட பின்பு தேர்தல் அதிகாரியாக கடமையாற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் தேர்தல்

முடிவுகளை அறிவிப்பார். தேர்தலில் முறைகேடுகள் இடம்பெற்றன எனக்கருதும் எந்த மாணவனும் மேன்முறையீடு செய்யலாம்.

அத்தகைய மேன்முறையீடு தேர்தல் முடிவடைந்த நேரத்தில் இருந்து 72 மணித்தியாலங்களுள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்தகைய முறையீடுகளில் ஒன்று கிடைக்கப்பெற்றால் கல்லூரித் தலைவர் அதனை விசாரணை செய்ய விரிவுரையாளர் அடங்கிய குழு ஒன்றை நியமனம் செய்வார். அங்கு விசாரணை செய்து அறிக்கையைத் தலைவரிடம் சமர்ப்பிக்கும் முறையீடு நியாயமானது எனவிசாரணைக்குழு கருதினால் குறித்த தெரிவு ரத்துச்செய்யப்பட்டு புதியதேர்தல் நடைபெறும். அத்தகைய சம்பவம் ஒன்று 1967 ஆம் நடைபெற்றதாக அறியக்கிடக்கின்றது. தெரிவு செய்யப்பட்ட தலைவர் அகற்றப்பட்டு புதிய தேர்தல் நடைபெற்றது. இத்தகைய நடைமுறைகள் மாணவர்களுக்கு ஜனநாயக நடைமுறைகள் பற்றிய சிறந்த பயிற்சியை வழங்கின. எதிர்காலத்தில் சிறந்த தலைமைத்துவப் பண்புகள் வளர்ச்சியடையவும், இத்தகைய நடைமுறைகள் பெருமளவிற்கு உதவின.

மாணவர் ஒன்றியம் ஒவ்வொரு கிழமையும் கூடும், பெரும்பாலும் மாலை 5 மணியின் பின்பே கூட்டம் நடைபெறும், சிலசந்தர்ப்பங்களில் இம்மாணவர் ஒன்றியக் கூட்டங்கள் இரவு 9 மணிவரை நடைபெற்றதுமுண்டு. அவசியமான நேரங்களிலும், பிரச்சினைகள் முடிவின்றி இழுபடும் நேரங்களிலும் கூட்டத்தை வழிநடத்த ஆலோசனை கூறுவதற்கு மன்றப் போ'கர் காத்துக்கொண்டிருப்பார். கல்லூரியில் இருந்து வெளியேறும் பொழுது முழு நிறைவான மனிதனாக வெளியேறுவதற்கு இந்தப்பட்டதாரி மாணவர் ஒன்றியம் ஒரு பயிற்சிக்கழமாக அமைந்தது. வாராந்தக்கூட்டங்கில் இலங்கையின் தலைசிறந்த பல்துறை சார்ந்த நிபுணர்கள் பிரபலம் வாய்ந்த சட்ட அறிஞர்கள் அரசியல்வாதிகள் அழைக்கப்படுவாகள். அப்போது நாடு எதிர்கொண்ட பிரச்சினைகள், சர்வதேசப்பிரச்சினைகள், அரசியல் நடைமுறைகள் தொடர்பாக அவர்கள் கருத்துரை வழங்குவார்கள். இந்த வகையில் தலைசிறந்த சட்ட அறிஞர்களாகவும், அரசியல்வாதிகளாக இருந்தவர்களுமான

ஜஜீ.ஜீ.பொன்னம்பலம். எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அ.அமிர்தலிங்கம் ஆகியோர் பட்டதாரி மாணவர் ஒன்றியத்தில் கருத்துரை வழங்கி இருக்கிறார்கள். கருத்துரை முடிந்ததும் மாணவர்கள் சராமரியான கேள்விக்கணைகளை அவர்கள் மீது எய்வர். அவர்களும் களைக்காது தந்திரமாக பதிலளித்த பல சந்தர்ப்பங்கள் இடம் பெற்றன. இதனூடாக குறிப்பிட்ட ஒவ்வொரு விடயத்திலும், கற்கை நெறிக்குப் புறம்பாக மாணவா தமது அறவினைப் பெருக்கிக்கொள்ள பல சந்தர்ப்பங்கள் இந்த மாணவர் ஒன்றியத்தினால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. இந்தப் பயிற்சி பட்டதாரிப்பீவில் கற்ற அனைத்து மாணவர்களும் தெளிவான அறிவோடு கல்லூரியை விட்டு வெளியேற உதவியது. பிரச்சினைகளை எதிர் கொள்வதற்கான வலுவை இது வழங்கியது. யாழ்ப்பாணக்கல்லூரி மாணவன் நான் என்று நெஞ்சை நிமிர்த்தி கூறும் துணிவை அவனுக்கு ஏற்படுத்தியமைக்கு இது போன்ற விடயங்களே காரணமாக இருந்தன. இதற்கு ஏற்ற அனைத்து ஒத்துழைப்பையும் கல்லூரி நிர்வாகம் வழங்கியது மட்டுமன்றி கடைமையாக அதனை வைத்துக் கொண்டமையே நிர்வாகத்திலும் சிறந்த பண்பாக இருந்தது. பேச்சுப் பயிற்சி விவாதப்பயிற்சி போன்றவை இந்த மன்றத்தில் விரிவுரையாளர்களினால் வழங்கப்பட்டன. தற்போது யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை தலைவராக இருக்கும் பேராசிரியர் அ.சண்முகதாசன் அவர்கள் 60களின் பிற்பகுதியில் இங்கு விரிவுரையாளராக கடமையாற்றிய காலத்தில் இத்தகைய பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்கினார். அவர் சிறிது காலம் மன்றக் காப்பாளராகவும் பணியாற்றினார். இந்தப்பட்டதாரி மன்றத்தோடு இணைந்த ஒரு மன்றமாக "கலைக் கொத்து" என்றொரு அமைப்பும்

பேராசரியர் அ.சண்முகதாஸன் போன்ற பல்கலைவடிவங்களில் அவரினால் பயிற்சி வழங்கப்பட்டது. பல நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. பண்டைய தமிழ் கலைவடிவங்கள் பற்றிய போதனை மட்டு மன்றி நாடகம், கூத்து "போடு புள்ளடி", "கல்லுக்குள் ஈரம்", "யார் குற்றவாளி" போன்ற மாணவர் ஆக்க நாடகங்கள் வட்டுக்கோட்டையில் பிரபல்யம் பெற்றன.மாணவர்களின் சொந்த முயற்சியினால் பேராசிரியர் அ. சண்முகதாசின் வழிகாட்டலின் கீழ் நாடகங்கள் மேடையேறின. யாழ்ப்பாண கல்லூரிப்பட்டதாரிப்பிரிவின் மாணவர் ஒன்றிய விவாதக்குழு இலங்கைப்பல்கலைக்கழக தமிழ்ச்சங்க மாணவர் விவாதக்குழுவுடன் விவாதப்போட்டிகளிலும் பங்கு பற்றியது. பட்டதாரி மாணவர் ஒன்றியம், அறிவும் ஆற்றலும் ஆழுமையும் கொண்டவர்களாக மாணவர்களை உருவாக்குவதில் பெரும்பங்கு வகித்தது.. கல்லூரி நிர்வாகத்தின் சிறந்த வழிகாட்டலும் ஒழுங்கமைப்பு கட்டுப்பாடுகளும் மாணவர் ஒன்றியத்திற்கு சிறந்த வரப்பிரசாதமாக அமைந்தது.

## விஞ்ஞான சங்கம்

பட்டதாரி பிரிவு மாணவர்களுக்கென பட்டதாரி விஞ்ஞான சங்கம் அமைக்கப்பட்டது. மாணவர்கள் மத்தியில் விஞ்ஞான அறிவை வளர்ப்பதற்கு இச்சங்கம் மாணவர்களுக்கு பெரிதும் உதவி புரிந்தது. விவாதங்கள் கருத்தரங்குகள்,படக்காட்சி(Film Show) போன்ற அம்சங்கள் இடம் பெற்றன. பிரசித்தி பெற்ற வைத்தியர்கள் விரிவுரையாளர்கள் பல்வேறு தலைப்புக்களில் உரையாற்றினார்கள். திரு.ஞ.கந்தையா இச்சங்கத்தின் போ'கராக இருந்து ஆலோசனைகளை வழங்கி வழி நடத்தினார்.

பின்வரும் கருத்தரங்குகள் இம்மன்றில் சிறப்பாக இடம் பெற்றுள்ளன.

**1.** Dr. (Mrs) S. Thurairajasingam, Radiologist, civil Hospital Jaffna

addressed us on "Radiology". This lecture was illustrated by the exhibition on X-ray negatives.

2. Mr.V.Arunasalam Ph.D, Research Professor, Princeton, University, U.S.A addressed on :-
   **(i)** "Plasmo Physics"
   **(ii)** "Graduate studies in U.S.A

3. Dr.K.D.Arudpragasam, Lecturer in Zoology, University of Ceylon on "Parasitism" This lecture was illustrated by a slide show

4. Dr.R.Pararajasegaramn F.R.C.S(ENG) F.R.C.S(Ed) M.R.C.P(Ed). D.O(Lond) Ophthaimic surgeon, delivered a lecture on "Medical Aspects of the Human Eye"

5. Dr.N.T.Sampanthan F.R.C.S(Edin) F.R.F.P.S(Glas) Deputy Medical office Co-operative Hospital Moolai spoke on "Snakes Bits and Remedy".

## விஞ்ஞான சஞ்சிகை

பட்டதாரி பிரிவு மாணவர்களால் "விஞ்ஞான சஞ்சிகை" என்ற பெயரில் 1964 இல் முதலாவது இதழ் வெளியிடப்பட்டது. இச்சஞ்சிகையின் சில கட்டுரைகள் தமது துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களின் சிந்தனைகளாகும் இச் சஞ்சிகையில் முன்னணி கலாநிதிகள் விரிவுரையாளர்கள் பட்டதாரி மாணவர்கள் கட்டுரைகள் எழுதினார்கள். இக்கட்டுரைகளில் சில ஆழமான விடயங்களும் வெளிவந்தன என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இச்சஞ்சிகையின் சில கட்டுரைகள் தமது துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களின் சிந்தனைகளாகும்.

இவ்விஞ்ஞான சஞ்சிகையில் வெளிவந்த சில விஞ்ஞான கட்டுரைகள் பின்வருமாறு.

1.MAN, MICROBES AND DISEASE Dr.N.PARAMAGNANAM

# The Science Journal

JOURNAL OF THE
UNDERGRADUATES'
SCIENCE
ASSOCIATION

1965 – 1966

Dept. of Bacteriology, Faculty of Medicine University of Ceylon.

2. THE MAN BEHIND THE MASK Dr.V.VENKATESWARAN
Dept. of Anaesthesiology G.G.H, Galle

3. SOME ASPECTS OF INHERITANCE IN PLANTS
S.KANDIAH B.Sc(Hons)(Cey) Research Assistant, Tea Re search Institute

4. BLOOD TRANSFUSION Dr.LUCIAN JAYASURIYA, M.O, Blood Bank, General Hospital Galle.

5. KIDNEYS THE BODY'S MASTER CHEMISTS SHIVA

## கல்லூரி வட்டார நிருபர் (The Campus Reporter)

பட்டதாரி மாணவர் சங்கத்தின் தரமிக்க சஞ்சிகையாக "வட இளங் கலைஞன்" பல்லாண்டு துலங்கியது. 1961 தொடக்கம் 8 வருட காலம் சங்கம் ஒரு சஞ்சிகையேனும் பிரசுரியாதிருந்தது ஒரு பெரும் குறைபாடாகும். இக்குறையை நீக்குவதற்கு பட்டதாரி மாணவ மன்றத்தின் அனுசரணையோடு "கல்லூரி வட்டார நிருபர்" 1969ம் ஆண்டு உதயமாயிற்று. இது தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு பிரிவுகளைக் கொண்டு விளங்கியது. கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விமர்சனங்கள், செய்திகள், பொதுப் பிரச்சினைகள் பற்றிய சிந்தனைகள் போன்றவற்றைத் தாங்கி வெளியிடப்பட்டது. விடயங்களைப் புத்தி பூர்வமாக நோக்கவும் மாணவர் சமூகத்தின் உள்ளத்தை ஊக்குவிக்கவும் 'நிருபர்' ஒரு கருவியாக விளங்கியது. சிந்தனையைத் தூண்ட, சிந்திக்கும் தன்மையை வளர்க்க, பிரச்சினைகளை துல்லியமாக அணுக, கருத்துப் போட்டியில் பங்குபற்றும் நன் முறையைப் போதிக்க, பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்க இச்சஞ்சிகை மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பத்தை வழங்கியது.

# கல்லூரி வட்டார நிருபர்

THE

# CAMPUS REPORTER

நிருபர் 3 உலா 5
Volume 3 No. 5

யாழ்ப்பாணக் கல்லூரி ப. மா. ச. வெளியீடு
Published by the Jaffna College Undergraduate Union

## Notes

(1) It is true that the level-headed progressive forces of our opuntry seem almost helpless in their struggle with the unruly, uninformed mob, but herein is a challenge to every educated man and woman. a considerable part of education, therefore, should be the training to holdby face the challenge. The task that lies ahead is no doubt hard and tedious but the fruit of our toil will be something for which posterity will be proud a responsible, educated, non-communal electorate.


(1) The Northern Undergrad -March 1957 -Editorial Page 1.
(2) The Northern Undergrad - March 1958 - Page 7.
(3) The Northern Undergrad - March 1958 - Page 22.
(4) The Northern Undergrad - March 1958 - Page 48.
(5) The Northern Undergrad - Aug 1958 - Page 23.
(6) The Northern Undergrad - March 1957 - Page 26.
(7) The Northern Undergrad - Dec 1959 - Page 42.
(8) March 1957, Page 8 and 12.
(9) March 1957, Page 35.
(10) August 1958, Page 31.
(11) August 1958, Page 35.
(12) December 1961, Page 16.
(13) December 1961, Page 23.
(14) March 1962 - Page 40.
(15) March 1962 - Page 34.
(16) March 1962 - Page 37.
(17) March 1957 - Page 19.
(18) Dec 1959 - Page 18.
(19) Dec 1961 - Page 4.

# 4. சேவை மதிப்பீடு

# சேவை மதிப்பீடு

வட்டுக்கோட்டையில் வெவ்வேறு காலப்பகுதியில் வெவ்வேறு விதமான உயர்கல்வி நிலையங்கள் அமையப் பெற்று கல்வி வளர்ச்சிக்கு சேவையிருக்கின்றன. ஒன்றரை நூற்றாண்டுக்கு மேலான காலப்பகுதியில் யாழ்ப்பாணக்கல்லூரி, இலங்கை கல்வி வளர்ச்சிக்கு சேவையாற்றியிருக்கின்றது. உயர்கல்வியைப் பொறுத்தமட்டில், செமினரி உயர்கல்வியை வழங்கி தமது சொந்த சான்றிதழ்களை வழங்கி வந்திருக்கின்றது. உயர்கல்வி வழங்குவதற்காக சிறிதுகாலம் கல்கத்தா பல்கலைக்கழகத்துடனும் பின்னர் சென்னைப் பல்கலைக்கழகத்துடனும் இணைக்கப்பட்டு உயர்கல்வி வழங்கி வந்ததாகத் தெரிகிறது. யாழ்ப்பாணக்கல்லூரியில் இலண்டன் இடைநிலை, கலை, விஞ்ஞான அல்லது அதற்கு சமமான வகுப்புக்கள் தொடர்ந்து நடாத்தி, கல்வி வளர்ச்சிக்கு பெருந் தொண்டாற்றியிருக்கிறது.

உயர்தரக் கல்விக்குரிய அவா யாழ்ப்பாணத்திலே நாளொரு வண்ணமாய் அதிகரித்து வந்திருக்கின்றது. அந்த அவாவை பூர்த்தி செய்யும் முகமாக யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரி பிரிவு 1947ம் ஆண்டு ஆரம்பமாகி தனது சேவையை தொடர்ந்து வழங்கியது. இப்பட்டதாரிப் பிரிவு பல இலண்டன் பட்டதாரிகளையும் இலங்கைப் பட்டதாரிகளையும் உருவாக்கி இலங்கையின் கல்வி வரலாற்றில் அரிய பல சேவைகளை ஆற்றி இருக்கின்றமையை மறக்க முடியாது.

### பல்கலைக்கழகக்கல்வி

யாழ்ப்பாணக்கல்லூரியில் பட்டதாரிப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு B.A., B.Sc. பொதுப்பட்ட வகுப்புகளுக்கு மாணவரை தயார் செய்யும் நிலை உருவானமையினால், பட்டதாரிப் பிரிவு ஒரு பல்கலைக்கழகம் வழங்கும் கல்வியை வழங்கத் தொடங்கியது. பல வருடங்களாய் யாழ்ப்பாணத்தில் உயர்கல்வியை அவாவி நிற்கும் மாணவர் தொகை அதிகரித்துக் காணபப்பட்டது. இலங்கைப் பல்கலைக்கழகம் ஒரு

குறிப்பிட்ட தொகை மாணவர்களைத் தான் எடுத்துக் கொண்டது. மேலும் இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனைக்கு மாற்றப்பட்டமையினால் யாழ்ப்பாணத்திலுள்ள தகுதி வாய்ந்தவர்களும், வறிய மாணவர்களும் பல இன்னல்களுக்கு உள்ளானார்கள். யாழ்ப்பாணக்கல்லூரி நிர்வாகிகளால் பட்டதாரிப் பிரிவு உருவாக்க எடுத்த தீர்மானம் இவர்களுக்கு வரப்பிரசாதமாயிற்று

பல்கலைக்கழக மாதிரியிலான கல்வியை வழங்குவதற்கு யாழ்ப்பாணக்கல்லூரியில் அனைத்து வசதிகளும் காணப்பட்டன. விரிவுரையாளர்கள் பட்டியலைப் பார்க்கின்ற போது பல திறமை வாய்ந்த விரிவுரையாளர்கள் பணியாற்றியிருக்கின்றமையை அறியலாம். யாழ்ப்பாணக்கல்லூரியின் சூழலைப் பார்க்கின்ற போது, பல்கலைக்கழகக் கல்வியை வழங்குவதற்கான அனைத்து அம்சங்களும் காணப்பட்டன. கட்டிட வசதிகள், நூல் நிலைய வசதிகள், ஆய்வுகூட வசதிகள், ஆண்களுக்குரிய விடுதி வசதிகள், பெண்களுக்குரிய விடுதி வசதிகள் அனைத்தும் நிரம்பப்பெற்று பட்டதாரிப் பிரிவு ஒரு சம்பூரண பல்கலைக்கழக கல்வியை வழங்கியிருக்கின்றது. மேலும் வெளியிலிருந்து ஆய்வு நடத்த வந்தவர்களுக்கு ஆய்வு வசதிகள் நிரம்பப் பெற்று பல நூல்கள் வெளிவர உறுதுணையாக விளங்கியது.

1823ம் ஆண்டிலே அமெரிக்க மிஷனரிமார் வட்டுக் கோட்டையில் அமைந்த நிறுவனம் ஆசியாவிலே மேனாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கீடான ஒரே கலாபீடமாக நிலவியது. இவ்வாறு அமையப் பெற்ற நிறுவனம் 1855ம் ஆண்டு வரை ஓர் பல்கலைக்கழகக் கல்லூரியாக நிலவிவந்தது. ஆனால் 1915ம் ஆண்டிலே ஓர் ஆங்கில உயர் நிலைப்பள்ளியின் நிலையை அடைந்து விட்டது. 1947ம் ஆண்டு பட்டதாரிப் பிரிவு ஆரம்பிக்கப் பட்டமையினால் மீண்டும் யாழ்ப்பாணக்கல்லூரி ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியின் ஸ்தானத்தை அடைந்ததெனக் தெரிகிறது.

பட்டதாரிப்பிரிவு யாழ்ப்பாணத்தின் சிந்தனையில் தலைப்பீடமாக விளங்கியது. அதனாலே பொதுவிவகாரங்களைப் பற்றி யாழ்ப்பாணத்தில் ஒரு பொதுப்படையான அபிப்பிராயம்

தோன்றுவதற்கு வழிவகுத்தது இதுவே பல்கலைக்கழகம் இல்லாத கால கட்டத்தில் யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரிப் பிரிவு செய்த பெரும் சேவையாகும்

## நூலகம்

யாழ்ப்பாணக்கல்லூரியில் நல்ல நூலகம் அமைக்கப்பட்டமை. அது ஆற்றிய சேவைகளில் முக்கியமாக வைத்து கருதப்படத்தக்கது. யாழ்ப்பாண மாநகர சபை நூலகத்திற்கு இல்லாத பெருமை, யாழ்ப்பாணக் கல்லூரி நூலகத்திற்கு இருந்திருக்கிறது.

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவுக்கான நூலகப் பிரிவு ஏற்படுத்தப்பட்டிருந்தமையினால் நூலகம் புதிய பொறுப்பையும் நிறைவேற்ற எத்தனம் எடுத்தது. பட்டதாரி மாணவர்களின் தேவையைக் கருத்திற் கொண்டு ஆங்கிலம், வரலாறு, தமிழ், உயிரியல், புவியியல் போன்ற புத்தகங்கள் சேர்க்கப்பட்டன. யாழ்ப்பாணக்கல்லூரி நூலகத்தில் பட்டதாரிப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு இரு வருடங்களின் பின் 1949ம் ஆண்டில் ஏறக்குறைய 10,000 நூல்களும் 5000க்கு மேற்பட்ட சிறுபுத்தகங்களும் இருந்ததாகத் தெரிகிறது. பொதுமக்களும் நூலகத்தின் வளர்ச்சிக்கு உதவியாகத் தெரிகிறது. வக்கீல் சி.டீ.சிங்கரட்ணம் அவர்களின் ஞாபகார்த்தமாக ரூபா 500/-உம், பெயர் குறிப்பிட விரும்பாத ஒருவர் ரூபா 700/-ம் கொடுத்திருந்தனர். (1)

யாழ்ப்பாணக்கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவர்களின் வருடாந்த இராப்போசனம் செப்டெம்பர் 30, 1949ம் ஆண்டில் நடைபெற்றது. இவ்விருந்துக்கு பிரதம விருந்தினராக திரு.விக்டர் லூயிஸ் (Editor in chief of the Times of Ceylon) அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார். அவர் தமது உரையில், யாழ்ப்பாணக்கல்லூரி நூலகத்தைப் பற்றி சிறப்பாகக் குறிப்பிட்டுச் சொன்னதை அன்றைய உதயதாரகை பத்திரிகை குறிப்பிட்டிருந்தது.(2)

> "யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ் செய்பவர்கள் இங்குள்ள ஒல்லாந்தர் கோட்டையையும் மாநகர சங்கக் கட்டடத்தையும் பார்த்துவிட்டு, கீரிமலையில் நீராடித் திரும்பியதும் யாழ்ப்பாணத்தை தாம் கண்டுவிட்டதாக நினைத்து விடுவதுண்டு. ஆனால் யாழ்ப்பாணத்துக்கு உண்மையில் பெருமையளிப்பது யாழ்ப்பாணத்திலிருந்து 7 மைல் தொலைவில் உள்ள யாழ்ப்பாணக்கல்லூரி நூல்நிலைய மாகும்"(3)

வட இலங்கையில் தமிழர் ஆங்கிலமும் தமிழுங் கற்று அநேக நூல்களை இயற்றித் தமிழகத்தில் பெரும் புகழுடன் விளங்குவதற்குக் காரணகர்த்தராய் இருந்தவர்கள் அமெரிக்க மிஷனரிமார். சாதிக்கட்டுப்பாட்டைத் தகர்த்தெறிந்து கலைமகளின் சந்நிதியில் எல்லாக் குழந்தைகளையும் சரி சமனாக நோக்கத் துணிந்து செயலாற்றிய பெருமையும் யாழ்ப்பாணக்கல்லூரியைச் சார்ந்ததாகும். எனவே அமெரிக்க மிஷனரிமார், வட இலங்கை மக்கள் ஆங்கிலமும் தமிழும் நன்கு கற்ற அறிஞர்களாகத் தேர்ச்சி பெறப் பெரிதும் உதவினார். அவர்களும் தமிழை நன்கு கற்றனர். மேனாட்டு வைத்திய நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்ட பெருமை அமெரிக்க மிஷனைச் சார்ந்த அமெரிக்க அகத்தியர் என்றழைக்கப்பெற்ற டாக்டர். எவ்.எச்.கீறின் அவர்களுக்கே உரியது. அமெரிக்க மிஷனரிமார் சைவ சித்தாந்த நூல்களையும் கற்றனர்.

சிவஞான சித்தியாரை ஹெய்சிங்டன் பாதிரியார் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார். செமினரியில் கற்ற நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை, கரல் விசுவநாதபிள்ளை, ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை, வைமன் கதிரவேற்பிள்ளை முதலியோர் அநேக தமிழ் நூல்களை வெளியிட்டனர். இத்தகைய அரிய நூல்கள் உண்மையில் வெளிவந்தன என்பது புனைந்துரையன்று, உண்மைதான் என்பதை இன்றைக்கும் எடுத்துக்காட்டலாம்.

செமினரியில் ஏறக்குறைய 2000 நூல்கள் இருந்தன. இந்தச் செமினரி மூடப்பட்டதும் இந்த நூல்கள் புதிதாக ஆரம்பிக்கப்பெற்ற யாழ்ப்பாணக்கல்லூரிக்கு வழங்கப்பட்டன. அமெரிக்க மிஷன் அச்சிட்ட நூல்களுட் சில மறைந்துவிட்டன. எனினும் பெரும்பாலான நூல்களை இப்பொழுதுள்ள யாழ்ப்பாணக்கல்லூரி நூல்நிலையத்திற் காணலாம். இப்பொழுது ஏறக்குறைய 30,000 நூல்களைக் கொண்டுள்ளது இந்தக் கல்லூரி நூல் நிலையம் புதிய டானியல் புவர் (Daniel Poor Library) அவர்களின் ஞாபகார்த்தக் கட்டிடமாக இப்பொழுது விளங்குகின்றது. ஆரம்பத்தில் இந்த நூல்கள் ஒரு சிறு அறையில் வைக்கப்பட்டிருந்தன. பின்னர் கேணல் ஒவ்கொற் ஞாபகார்த்தக் கட்டடம் முழுவதையும் தனக்குச் சொந்தமாகச் சுவீகரித்துக் கொண்டு, இப்பொழுது டேனியல் பவர் நூல்நிலைய ஞாபகார்த்தக் கட்டடம் புதிதாக அமையப்பெற்று நன்கு விரிவடைந்துள்ளது.

யாழ்ப்பாணக்கல்லூரியில் ஜோன் பிக்னல் பாதிரியார் தலைவராக இருந்த காலம் இக்கல்லூரியின் பொற்காலமாக மதிக்கப்பட்டு வருகின்றது. 25 ஆண்டு வரை கல்லூரி அதிபராக இருந்த யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னேற்றத்துக்காக உழைத்து யாழ்ப்பாண மண்ணிலேயே உயிர் நீத்த பெரியார் இந்த பிக்னல் பாதிரியார்.இவர் கல்லூரியின் வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாயிருந்தது போலவே நூல்நிலைய வளர்ச்சியிலும் கரிசனை கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணக் கல்லூரி நூல்நிலையம் வேறிடங்களிற் கிடைத்தற்கரிய நூல்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதற்கு உண்மையில் அல்லும் பகலும் அரும்பாடுபட்டு உழைத்து வந்தவர் நூல்நிலைய அதிகாரி திரு.கே.செல்லையா அவர்கள் கல்லூரி அதிபருக்குட்பட்டே நூல்நிலையம் இயங்கியது. இவையாவற்றிற்கும் தலைவராக வண.எல்.பங்கர் அவர்கள் கடமையாற்றியிருக்கின்றார்.

திரு.கே.செல்லையா அவர்கள் இங்கிலாந்து, இந்தியா முதலிய இடங்களுக்கெல்லாம் சென்று நூல்நிலையத்துறையில்

பயிற்சி பெற்ற படியால் யாழ்ப்பாணக்கல்லூரி நூல்நிலையம் சிறப்புற்று விளங்கியிருக்கிறது. அவருடைய காலப்பகுதியில் நூல்நிலையம் எவ்விதமாக அமைந்திருந்தது என்பதை பட்டதாரிப் பிரிவில் கல்வி பயின்ற பல பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் சிறப்பாகக் குறிப்பிடுகின்றார்கள். நூல் நிலையத்துள் வயது வந்த மாணவர்களும் மாணவிகளும் வந்து இருந்த போதிலும் ஒரு கதை நொடி இல்லாமல் தங்கள் தங்கள் நூல்களைப் படித்து குறிப்பெழுதுவதுடன் குண்டூசி விழுந்தாலும் கேட்கக் கூடிய அளவுக்கு அமைதி நூல் நிலையத்தில் நிலவுமாம். திரு.கே.செல்லையா அவர்கள் உருவத்திற் சிறியவராயிருந்தாலும் ஒழுக்கத்தை நிலைநாட்டுவதில் கைதேர்ந்தவராக இருந்தவர். பட்டதாரி பழைய மாணவர் அவரைப்பற்றிக் குறிப்பிட்டது

> "நாங்கள் நூல் நிலையத்துக்குள் சத்தம் இட்டால் செல்லையா அண்ணையிடம் தப்பிக்கொள்ள முடியாது. கல்லூரி ஆசிரியர்களே சத்தமின்றி அமைதியாக இருக்கும்பொழுது நாங்கள் குழப்படி செய்ய முடியுமா? புத்தகங்களைப் படியாமல் திருப்பிக் கொடுத்தாலுங் கூட எங்களுடைய கள்ளத்தைக் கண்டுபிடித்து விடுவார்."(4)

ஆம், அதுதான் உண்மை. நூல்நிலையம் என்பது பல்வகை நூல்களும் காணப்படும் இடம் மாத்திரமன்று. அந்நூல்கள் யாவும் தந்தமைக்குரிய இடத்தில் வைக்கப்பட்டிருக்கும் இடமாகவும் இருக்க வேண்டும். இந்த விதியை பட்டதாரி மாணவர்களெனற்றாலும் சரி, ஆசிரியர்களென்றாலும் சரி, யாழ்ப்பாணக்கல்லூரி நூல்நிலையத்தில் பூரணமாகக் கடைப்பிடித்தொழுகி இருக்கின்றார்கள்.

பால்டில்ஸ் பாதிரியார், பிஷப் கோடினார், பார்சவல், தெனந்து, வண.எஸ்.ஜி.பெரேரா முதலயோர் எழுதிய நூல்கள், றோயல் ஆசியச் சங்கச் சஞ்சிகைகள், ஒவ்வொரு புலவர் எழுதிய நூல்கள், உதயதாரகைப் பத்திரிகையின் முதலாவது பிரதி தொடக்கம் அனைத்துப் பிரதிகளும் பாதுகாத்து வைக்கப்பட்டன. மற்றும் கிடைத்தற்கரிய அச்சில் இல்லாத நூல்கள் சேகரித்து

வைக்கப்பட்டன. கரல் விசுவநாதப்பிள்ளை, கு.கதிரைவேற்பிள்ளை, உவில்லியம் நெவின்சு அல்லது அமெரிக்க அகத்தியர் ஆகியோரைப்பற்றிய நூல்களும் சேகரித்து வைக்கப்பட்டன.

> "யாழ்ப்பாணக்கல்லூரி நூல்நிலையம் ஒரு தேசிய நூல்நிலையமாகவே கருத வேண்டும். பேராதனையிலுள்ள இலங்கைச் சர்வகலாசாலை விரிவுரையாளர்களும், மாணவர்களும் ஆராய்ச்சி செய்யும் பொருட்டு, யாழ்ப்பாணக்கல்லூரி நூல்நிலை யத்திற்கு யாத்திரை செய்வார் களானால் அதன் சிறப்பை யான் எவ்வாறு எடுத்துக் கூற முடியும்? கொழும்பிலிருந்து கூட ஆராய்ச்சியாளர் பலர் அங்கு சென்று ஆராய்ச்சி செய்வதைக் கண்டேன்.தென்னிலங்கையிலிருந்து வரும் மக்களை அன்புடன் வரவேற்று உபசரித்து அவர்களுக்கு வேண்டிய நூல்களைப் பார்ப்பதற்குக் கொடுத்து உதவிசெய்து வருகிறார் திரு.செல்லையா அவர்கள். கொழும்பிலே பப்ளிக் லைபரரி, நூதனசாலை நூல்நிலையம் ஆற்றி வரும் அரும் தொண்டினையே வட இலங்கையிலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரி நூல்நிலையமும் ஆற்றி வருகின்றது. கொழும்பிலே கிடைக்கப்பெறாத தமிழ் நூல்கள் பலவற்றை யாழ்ப்பாணக்கல்லூரி நூல்நிலையத்திற் காணக் கூடியதாக இருக்கிறது."(5)

யாழ்ப்பாணக்கல்லூரி நூல்நிலையத்தைப் பிரமுகர் பலர் காலத்துக்கு காலம் தரிசித்துப் தம் கருத்துக்களை ஒரு குறிப்புப் புத்தகத்தில் எழுதியுள்ளார். "நான் இதுவரை கண்ட நூல்நிலையங்களுள் தலைசிறந்தது" என்று போஸ்ற் மாஸ்ரர் ஜெனரலாகவிருந்த ஏ.ஜ.பெரேரா குறிப்பிட்டுள்ளார். கல்வி மந்திரி காரியாலயத்திலிருந்து திரு.எவ்.ஜி.பீயர்ஸ் அவர்கள் "இது ஓர் அற்புதமான இடம். கல்விமயமாகக் காட்சியளிக்கின்றது" என்று

குறிப்பிட்டுள்ளார்.(6)

இவ்வாறு பட்டதாரிப் பிரிவு உருவான பின்னர் சிறந்த நூல் நிலையத்தை ஏற்படுத்தி யாழ்ப்பாண மக்களுக்குத் தேவையான ஆவணங்களை திரட்டி சிறந்த நூல்நிலைய சேவை ஆற்றியிருக்கிறது.

## இருமொழித்திறமை

யாழ்ப்பாணக்கல்லூரிப் பட்டதாரிப் பிரிவின் கல்வி பயின்ற மாணவர்கள் ஆங்கில மொழியிலே படித்தார்கள். ஆங்கில மொழியிலேயே பரீட்சையும் எழுதினார்கள். விஞ்ஞானப் பட்டதாரிகள் ஆங்கிலத்தில் படித்து பல விஞ்ஞான ஆய்வு கட்டுரைகளை, நூல்களை எழுதியிருக்கிறார்கள். இங்கு கல்வி பயின்ற மாணவர்கள் தமிழிலுள்ளதை ஆங்கிலத்திலும், ஆங்கிலத்திலுள்ளதை தமிழிலும் மொழிபெயர்க்க வேண்டும். தமிழ் மொழியைப் படித்தவர்கள் ஆங்கில மொழியிலேயே தமிழ் பரீட்சையை எழும வேண்டும் என்ற நிலை இருந்தது. இலக்கிய விமர்சனத்தையும் இலக்கணத்தையும் ஆங்கில மொழியிலே மாணவர்கள் பயின்றனர். போப் அடிகளார் ஆங்கில தமிழ் இலக்கணம் (English Tamil Grammar) என்ற நூலை எழுதியிருக்கிறார். பார் குமாரகுலசிங்க என்பவர் தமிழ் இலக்கணத்தை ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார். ஒருவர் ஆங்கில இலக்கணத்தை தெரிந்திருந்தால் தான் தமிழ் இலக்கணத்தையும் செய்ய முடியும். எனவே பட்டதாரிப் பிரிவில் கல்வி பயின்ற மாணவர்கள் தமிழிலக்கணத்தையும் ஆங்கில இலக்கணத்தையும் பயிலும் வாய்ப்பு ஏற்பட்டது.

மேலும் இங்கு கல்வி மாணவர்கள் நாலடியார், திருக்குறள் போன்ற நூல்களை ஆங்கில மொழியிலேயே பயின்றார்கள். மேலும் பட்டதாரிப் பிரிவில் கல்விபயின்ற பல மாணவர்கள் ஆங்கிலத்தில் வந்த பல நூல்களைப் படித்து தமிழில் மொழிபெயர்த்து இருக்கிறார்கள்.

இவ்வாறு பட்டதாரிப் பிரிவில் ஆங்கில மொழியில் கல்வி

பயின்றமையால், தமிழ் மொழியும், ஆங்கில மொழியும் நல்ல உயர்தராதரத்தை அடைந்தது. இங்கு கல்வி பயின்ற மாணவர்கள் இரு மொழியாற்றலும், இரு மொழித்திறனும் பெற்று விளங்கினார்கள். மேலும் பட்டதாரிப் பிரிவில் ஆங்கில மொழிமூலம் தமிழ் மொழியை பயின்ற பலர் உயர் பதவியில் சேவையாற்றியிருக்கிறார்கள்.

## பல பட்டதாரிகளை உருவாக்கியமை

யாழ்ப்பாணக்கல்லூரிப் பட்டதாரிப் பிரிவு இயங்கிய 27 ஆண்டு காலத்தில் 250க்கு மேற்பட்ட பட்டதாரிகளை உருவாக்கியது. இவர்களிலே சிலர் விஞ்ஞானப் பட்டதாரிகளாகவும், சிலர் கலைப்பட்டதாரிகளாகவும் விளங்கினார். இப்பட்டதாரிகளில் சிலர் இலங்கை பல்கலைக்கழகக் பட்டதாரிகள். ஏனையோர் இலண்டன் பல்கலைக்கழகப் பட்டதாரிகள்.

இவர்கள் மேற்கொண்டு ஆய்வுகளை அதிகம் நடத்தியதாக தெரியவில்லை. ஆசிரியர்களாக அமர்ந்தவர்கள் மட்டும், பட்டப்பின் பயிற்சி நெறியைப் பின்பற்றியிருக்கிறார்கள். இவர்கள் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் படித்த பட்டதாரிகளைப் போல ஆய்வுகளை மேற்கொள்ளாமைக்கு பல காரணங்கள் இருந்தன.

முதலாவதாக, இவர்கள் பெரும்பாலானவர்கள் பொதுக்கலைத் தேர்வு, பொதுவிஞ்ஞான தேர்வு ஆகியவற்றையே மேற்கொண்டிருந்தனர். வெகுசிலர் மட்டுமே புவியியல் சிறப்புத் தேர்வினை மேற்கொண்டதாகத் தெரிகிறது.

B.Sc.பொருளாதாரம் என்னும் சிறப்புத் தேர்வினையும் (B.Sc.,Econ,London) சிலர் பின்பற்றியதாகத் தெரிகிறது. ஆனால் இவர்கள் எல்லாரும் தமது யாழ்ப்பாணக்கல்லூரிப் படிப்புடன் அமைந்து விட்டனர். இவ்வாறு, இவர்கள் நடத்தாமல் இருந்தமைக்கு பலவிதமான காரணங்கள் இருந்தன. பட்டதாரிப் பிரிவின் ஆசிரியர்கள் முதுமானி கலாநிதி ஆய்வுக்கான ஆய்வுகளுக்கு வழிகாட்டக்கூடிய ஆற்றல் பெற்றிருக்கவில்லை.

மூன்று கலாநிதிகள் மட்டுமே பட்டதாரிப் பிரிவில் கற்பித்ததாக தெரிகிறது. இவர்களில் கலாநிதி லூதர் ஜெயசிங்கம், புவியியற் துறையிலும், கலாநிதி சா.சுந்தரலிங்கம் பொருளியற் துறையிலும், கலாநிதி எஸ்.கிருஸ்ணசாமி பௌதிகத் துறையிலும், கலாநிதி சுசீந்திரராசா தமிழ்த் துறையிலும் கலாநிதிதிப் பட்டம் பெற்றிருந்தாகள். இவர்களைத் தவிர முதுமானிப் பட்டம் பெற்ற சிலரும் இருந்திருக்கின்றனர். இச்சிறிய தொகையினருக்கு எந்தப் பல்கலைக்கழகமாவது முதுமானி அல்லது கலாநிதி ஆய்வுக்கான வழிகாட்டலை நடாத்த அழைப்பு விடுக்கவில்லை.

இலண்டன் பல்கலைக்கழகம் வெளிவாரிப் பரீட்சையாக கலைமானி, விஞ்ஞானமானி பரீட்சைகளையே நடாத்தியது. ஆகவே, இங்கு கற்ற மாணவ, மாணவிகள் கலைமாணி, விஞ்ஞானமானி ஆகிய பட்டங்களைப் பெற்ற பின்னா் தமது படிப்பு முடிந்துவிட்டது எனக் கருதினார்கள். அவர்கள் மேற்கொண்டு படிப்பதற்கு அவகாசமோ தேவையோ இருக்கவில்லை. அதற்கு மேற்கொண்ட படிப்பைப் பற்றி அவர்கள் உள்ளத்திலே ஆர்வம் எழுந்ததாகவும் தெரியவில்லை.

இப்படியாக அவர்கள் கல்வித்துறையில் கலைமானி, விஞ்ஞானமானி பரீட்சைக்குப் பின்னர் ஆர்வம் கொள்ளவில்லையெனினும் பல்வேறு துறைகளிலும் சுடர்விட்டு பிரகாசித்திருக்கின்றனர் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

## பல அதிபர்களை உருவாக்கியமை

முதலாவதாக பாடசாலை ஆசிரியர்களாகவும் அதிபர்களாகவும் அவர்கள் ஆற்றிய சேவை மகத்தானது. பாடசாலை அதிபர்களாக் இன்றும் பல இலண்டன் பட்டதாரிகள் பணியாற்றி வருவதனை நாம் காண்கின்றோம்.

உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் செல்வி சி.வி.செல்லையா,

கைதடி நவிலிட் பாடசாலை முன்னைநாள் அதிபர் திரு.டேவிட் ஜெயசிங்கம், விக்ரோறியா கல்லூரி முன்னாள் அதிபர் திரு.நடராசா, வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் திரு.வேலுப்பிள்ளை, யாழ்ப்பாணக்கல்லூரியின் முன்னைநாள் கனிஷ்ட அதிபர் செல்வி மேரி எலாயஸ், யாழ்ப்பாணக்கல்லூரியின் முன்னைநாள் துணை அதிபர் திரு.டபிள்யு. டி.குலதுங்கம் முதலியோர் யாழ்ப்பாணக் கல்லூரியில் கற்ற பழைய மாணவர்களாவர்.

இவர்களைப் போல பட்டதாரிகளானவர்களில் நூற்றுக்கணக்கானோர் இலங்கையிலும், உலகின் வேறு பாகங்களிலும் ஆசிரியராக அமர்ந்தனர். வேறு சிலர் அரசாங்கத் துறையிலும், தனியார் துறையிலும் உயர்ந்த பதவி வகிக்கின்றனர். இந்த வகையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை பதிவாளர் திரு.சு.யோகநாதன் குறிப்பிடத்தக்கவர். யாழ்ப்பாணத்தின் வருமான வரிக்கந்தோரின் பிரதம ஆணையாளராக விளங்கும் திரு.சிவசுப்பிரமணியம் அவர்கள் யாழ்ப்பாக்கல்லூரியின் பட்டதாரிப் பிரிவில் கற்ற மாணவர்களேயாவர்.

யாழ்ப்பாணக்கல்லூரிப் பட்டதாரிப் பிரிவில் கற்று அரங்கேறியவர்கள் மேற்கொண்டு படிப்பை நடாத்தாவிட்டாலும் அங்கு ஆசிரியர்களாக அமர்ந்தவர்கள் உயர்கல்வியை மேற்கொண்டதாக தெரிகிறது. சிலர் முதுமானிகளாகத் திகழ்ந்தார்கள். சிலர் கலாநிதி நிலவரை உயர்ந்தனர். இவ்வகையில் சிவசாமி, கலாநிதி சீலன் கதிர்காமர், ஆ.சிவநேசசெல்வன், கலாநிதி எல்.சி.டி.குலதுங்கம், கலாநிதி எஸ்.பி.அப்பாசாமி, கலாநிதி கிருஸ்டி ரிச்சாட், கலாநிதி பு.புவனராஜா, கலாநிதி பாலன் செல்லையா ஆகியோரைக் குறிப்பிடலாம். இவர்களுடைய துரித வளர்ச்சிக்கு யாழ்ப்பாணக்கல்லூரியே தளம் அமைத்துக் கொடுத்தது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

சமயத்துறையிலும் யாழ்ப்பாணக்கல்லூரிப் பட்டதாரிகள் பலர் அருஞ்சேவையாற்றியிருக்கின்றனர். தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின் அத்தியட்சகராக வண.டி.ஜே.அம்பலவாணர் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. இவர் யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரிப் பிரிவின் பழைய மாணவராவர்.

வணக்கத்திற்குரிய டேவிட் ஜெயரட்ணம் அம்பலவாணர் அவர்கள் இலண்டன பல்கலைக்கழகத்தின் பட்டதாரிப் பிரிவில் சித்தியெய்தினார். செரம்பூர் இறையியற் கழகத்திலும் இலண்டன் பல்கலைக்கழகத்திலும் இவரின் வேத சாஸ்திர பயிற்சி வளர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் திரு.எஸ்.எஸ்.அருளம்பலம், வண.அருளம்பலம் என்னும் இன்னுமொரு குருவும் தமது படிப்பை இங்கேயே முடித்தாகத் தெரிகிறது.

## பல பண்பாட்டு கலப்பு சூழலை வழங்கியமை

பட்டதாரிப் பிரிவில் அறுபதுகளின் நடுப்பகுதி வரை ஆசிரிய குழுவிலாயினும், மாணவ சமூகத்திலாயினும் எவ்வித பாகுபாடுமின்றி பல இன மத சாதியிலும் இருந்தனர். ஆசிரியர் குழுவில் இந்தியர், அமெரிக்கர், ஜேர்மனியர் இருந்தனர். திரு.எஸ்.ஏ.அப்பாசாமி (ஆங்கில விரிவுரையாளர்) ஒரு இந்தியர், Dr.ஹோம்ஸ் (வரலாற்றுத்துறை விரிவுரையாளர்) ஒரு அமெரிக்கர், Rev.W.R.S.Sussbach (பொருளியல் விரிவுரையாளர்) ஒரு ஜேர்மனியர்.

அதேபோல மாணவரில் சிங்களவர், மலாயர், உகண்டா தேசத்தவர் இருந்தனர். இதுவும் வளாக விடுதி முறைமைகளும் பல பண்பாட்டுக் கலப்புச் சூழலை அங்கு படித்தவருக்கும் வேலை செய்தவர்க்கும் வழங்கியது.

## குறைந்த செலவில் நிறைந்த வாய்ப்புக்களை பெற உதவியமை

எழுபதுகளில் G.C.E. உயர்தரத் தேர்வுக்குத் தோற்றாமலேயே G.A.Q./G.S.Q. தேர்வுகளுக்குத் தோற்றுவதற்கான சலுகைகளை ஆசிரியர் பயிற்சி பெற்றவருக்கு பல்கலைக்கழகம் வழங்கியது. அவர்களுக்கு யாழ்ப்பாணக்கல்லூரி பின்னேர வகுப்புக்களை தொடங்கியது. இதனால் கல்லூரிக்கு அண்மையிலிருந்து கொண்டே குறைந்தளவு செலவில் பட்டதாரிப் படிப்பை மேற்கொள்வதற்குப் பலருக்கு முடிந்தது. ஏனெனில் மூன்றாண்டுகட்கு சம்பளத்துடன் கூடிய ஓய்வு பலருக்கு

பெறமுடியாதிருந்தது. படிப்புக்கான செலவின் முழுத் தொகையில் மூன்றில் இரண்டு பகுதியை அமெரிக்காவில் உள்ள நம்பிக்கையாளர் நிதியாவே வழங்கிச் செலவுச் சுமையைக் குறைத்தது. எனவே தான் குறைந்த செலவில் நிறைந்த வாய்ப்புக்ளுடன் இந்த ஆசிரியர்கள் தமக்குத் தேவையான பட்டப் படிப்பைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

## புதிய வேலைவாய்ப்புக்களை வழங்கும் பாடநெறிகளை வழங்கியமை

பட்டதாரிப் பிரிவில் அறுபதுகளின் பிற்கூறிலும் எழுபதுகளின் முற்பகுதியிலும் இலங்கை உயர்தர தேர்வுகளுக்கும் ICWA/ICMA போன்ற கணக்கியல் பரீட்சைகளுக்குமான பாடநெறிகளைப் பட்டதாரிப் பிரிவு தொடங்கியது. பள்ளிக்கூடங்களிலிருந்து பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகள் இல்லாதவர்க்கே இங்கு உயர்தர வகுப்புக்கள் தொடங்கப்பட்டன. பல்கலைக்கழக அமைதி கிடைப்பது மிக கஷ்டமாக இருந்தும் பெரும்பாலான மாணவர் இரண்டு அல்லது மூன்று முறை முயன்று மதிப்பான துறைகளுக்குள் நுழைந்து கொண்டனர். இதனால் மாணவர் பலருக்குப் புதிய நம்பிக்கையையும் புதிய வாய்ப்புக்களையும் உயர்தர வகுப்புக்கள் கொடுத்தன.

நாட்டில் ஏற்பட்டுவந்த பொருளாதார மாற்றங்களையொட்டி எழுந்த புதிய நிலைமைகளின் விளைவாகவே கணக்கியல்துறை தொடங்கப்பட்டது. அத்துடன் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களும் தூண்டுகோலாயமைந்தது. C,T B,C.W.E. மற்றும் கூட்டுத்தாபனங்கள் தேசிய மயமாக்கப்பட்டதும் அரசின் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டதும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களும் பெருகியதும் பள்ளிகளை விட்டு வெளியேறிய மாணவர் பலர் கணக்கியல்துறைகளை விரும்பக் காரணமாயிற்று. இதனாலேயே இவர்களின் தேவைகளை நிறைவுசெய்ய கணக்கியல் பாடநெறிகள் தொடங்கப்பட்டன. அரசு கல்லூரியைக் கையேற்கும் வரை, இங்கே இத்துறைக்கான ஆசிரியர் பலரும் உயர் தராதரம்

பெற்றவராயிருந்தமையால் மாணவர் தொகை பெருகிக் கொண்டேயிருந்தது. இப்படிப்பிற்கு நல்ல எதிர்காலம் இருந்ததால் முழுநேர ஆசிரியர் பலருக்கு விசேட பயிற்சி அளிப்பதற்கும் புலமைப்பரிசில் கொடுப்பதற்கும் இங்கிலாந்திலுள்ள மிஷன் அமைப்பொன்று முன் வந்தது.

இவ்வாறு பட்டதாரிப் பிரிவு பல்கலைக்கழகத்திலும் பள்ளிக் கூடங்களிலும் இடம் பெற முடியாத மாணவர்களுக்கு கணக்கியல் பாடநெறிகளிலும், வெளிவாரிப் பட்டதாரிப் படிப்புகளிலும் க.பொ.த.உயர்தர படிப்புகளிலும் பட்டதாரிப் பிரிவு இலாப நய நோக்கின்றி சேவை மனப்பான்மையுடன் இயங்கி வந்துள்ளது.

## வறிய மாணவர்களுக்கு வேண்டும் கல்வி வசதிகளை பெற உதவியமை

தொடக்க காலத்திலிருந்து வறிய மாணவர்களுக்கு வேண்டும் கல்வி வசதிகளை, அமெரிக்காவிலுள்ள நம்பிக்கையாளர் சபையின் நிதியத்திலிருந்து யாழ்ப்பாணக்கல்லூரி வழங்கி வருகிறது. கிறிஸ்தவ மிஷனரிகளால் நிறுவப்பட்ட நம்பிக்கையாளர் சபை ஒன்றிலிருந்து யாழ்ப்பாணக்கல்லூரி வருடாந்தம் நன்கொடை பெற்று வருகிறது. பட்டதாரிப் பிரிவு இயங்கிய பொழுது நம்பிக்கையாளர் நிதியம் இரண்டாந்தரக் கல்விக்கு 70% உம் பட்டதாரிப்பிரிவிற்கு 50% நன்கொடை கொடுத்துதவியது. வறிய மாணவர்களின் கல்விக்கு ஆகும் செலவினத்தின் பெரும்பகுதியை நம்பிக்கையாளர் நிதியமே வழங்குகின்றது. பட்டதாரிப் பிரிவில் கல்வி பயின்ற மாணவரில் 75% இனர் இந்துக்களே. பெரும்பாலான மாணவர்கள் வட்டுக்கோட்டையிலிருந்தும் அதன் சுற்றுப்புற கிராமங்களான சித்தங்கேணி, மூளாய், பொன்னாலை, சுளிபுரம், தொல்புரம், சங்கானை, அராலி, துணைவி, பண்டத்தரிப்பு, சண்டிலிப்பாய், சில்லாளை, மானிப்பாய், காரைநகர் போன்றவற்றிலிருந்து வந்தனர்.

இவ்வாறு மேற்படிப்புக்கு நிதி வசதியில்லா மாணவர்களுக்கு வாய்ப்பளித்து வந்ததன் மூலம் கல்வி பரவவும் பரந்த மனப்பான்மை பெருகவும் சேவையாற்றியுள்ளது.

### ஜனநாயக மரபு வளர உதவியமை

சரியான விளக்கத்தை மாணவர் சமூகத்தின் மூலமாக பொதுவாக சமூகத்தின் மத்தியில் பரவச் செய்தது. ஜனநாயக நடைமுறை அதில் அங்கத்தவர் ஒவ்வொருவரினது கடமை, உரிமை ஆகியவற்றை உணர்ந்து மக்கள் நடந்து கொள்ள வேண்டிய விதத்தை அறிமுகம் செய்தது. வாக்கெடுப்புமுறை, பிரதிநிதிகளை தெரிவுசெய்யும்முறை என்பவற்றை மாணவர்கள் உணர்ந்து விளங்கிக் கொள்வதற்கு உதவியது. இத்துறையின் கல்லூரி பட்டதாரிப் பிரிவு மாணவர்கள் சிறந்த சேவை ஆற்றியிருக்கின்றனர். அரசியலில் மாத்திரமல்லாது வேறு துறைகளிலும் சனநாயக முறைகளைக் கையாளத் தேவையான பயிற்சியை அளித்தது. கல்லூரியில் நடந்துவந்த பட்டதாரிப் பிரிவு மாணவ சங்கத்தை இத்துறையில் முன்மாதிரியாக விளங்கியது. சமாதான சுகவாழ்வு முறைதான் சனநாயக பண்புகள் வளர்வதற்கு உறுதுணையானது என்பதை கல்லூரி நாளாந்த வாழ்க்கை மாணவருக்கு குறிப்பாகவும், சமூகத்தவருக்கு பொதுவாகவும் எடுத்துக்காட்டி வருகிறது. தன்னுடைய விருப்பு வெறுப்புக்களை நிறைவேற்றுவதில், தான் வாழும் சமூகத்தின் விருப்பு வெறுப்புக்களை அனுசரித்தே செய்யவேண்டும் என்பதை ஓரளவாயினும் உணர்ந்து கொள்ள கல்லூரி உதவி வருகின்றது.

தேசிய அடிப்படையிலான பரந்த கல்வியை புகட்டியிருக்கிறது. இதன் பழைய மாணவர்களுள் பலர் தேசியத் தலைவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் சிறந்த பாரம் பரியத்தின் வழிநின்று நாட்டுக்கு சேவை ஆற்றி வருகின்றனர். இந்த பாரம்பரியத்தை இந்த வளாகம் தான் இவர்களுக்கு கற்றுக் கொடுத்தது.

## தாழ்த்தப்பட்ட சமூகத்தினரும் பயன்பெற உதவியமை

யாழ்ப்பாணக்கல்லூரி இந்த சமூகத்திற்கு வழங்கியுள்ள தலைமைத்துவம் காலத்திற்கு காலம் அது மேற்கொண்ட தீர்வுகளிலிருந்து காணக்கூடியதாக இருக்கிறது. இக்கல்லூரியில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு திறந்து விட்டமையால், இச்சமூகத்தினர் பெருமளவு பயன் பெற்றனர். பட்டதாரிப் பிரிவிலும் பல தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் கல்விபயின்று பெரும் நன்மையடைந்துள்ளனர்.

## சமய சகிப்புத்தன்மை வளர உதவியமை

பட்டதாரிப் பிரிவில் கல்வி பயின்ற மாணவர்களில் இந்து, முஸ்லீம், பௌத்த, கிறீஸ்தவ சமயங்களைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி பயின்றிருக்கிறார்கள். பட்டதாரி நூலகப் பிரிவில் அனைத்து சமய நூல்களும் வைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு பல சமய நூல்கள் இருந்தமையால் பல சமய நூல்களை வாசித்து பரந்த நோக்குடையவர்களாக திகழ வழி அமைக்கப்பட்டு சமய சகிப்புத்தன்மை வளர்க்க உதவியது. சமய சகிப்புத்தன்மைக்கு முக்கிய காரணம் பல்வேறு சமயத்தவர்களை கொண்டிருந்தமை மாத்திரமல்ல, பல்வேறு சமய நூல்களில் மொழிபெயர்ப்பு நூல்களை தொகுத்து வைத்திருந்ததே இதற்கு காரணமென்று பெருமையுடன் கூறலாம்.

இவ்வாறு யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரிப் பிரிவு பல்வேறு வகைகளில் சிறப்பான சேவையாற்றியிருக்கிறது. யாழ்ப்பாணத்தின் சிந்தனையின் தலைப்பீடமாக விளங்கியதோடு பொது விவகாரங்களைப்பற்றி யாழ்ப்பாணத்தில் ஒரு பொதுப்படையாக அபிப்பிராயம் தோன்றுவதற்கு வழி வகுத்திருக்கிறது. இதுவே பல்கலைக்கழகம் இல்லாத காலகட்டத்தில் யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரிப பிரிவு செய்த பெரும் சேவையாகும். சிறந்த நூல்நிலையத்தை ஏற்படுத்தி, யாழ்ப்பாண மக்களுக்கு தேவையான ஆவணங்களைத் திரட்டிக் கொடுத்து நூல்நிலைய சேவை

ஆற்றியிருக்கிறது. அத்துடன் பத்திரிகைகள், சஞ்சிகைகள் உருவாக்கிக் கொடுத்திருக்கிறது. இவையெல்லாவற்றிற்கும் மேலாக பல்கலைக்கழக அனுமதி பெறத் தவறியவர்களுக்கு உயர்கல்வியை வழங்கியதாகும். யாழ்ப்பாணக்கல்லூரியில் பல்கலைக்கழக அனுமதியின்றி இருந்த பலர் பட்டதாரிகளாகி கல்வியுலகுக்கு அருஞ்சேவையாற்றியிருக்கின்றனர்.

இந்த வகையில் குறைந்த செலவில் நிறைந்த வாய்ப்புக்களை பெற உதவியோடு, வறிய மாணவர்களுக்கு வேண்டும் கல்வி வசதிகளை பெறவும், தாழ்த்தப்பட்ட சமூகத்தினரும் பயன்பெறவும் புதிய வேலைவாய்ப்புக்களை வழங்கும் பாடநெறிகளை வழங்கியும் பட்டதாரிப் பிரிவு பெரும் சேவையாற்றி உள்ளது. அத்துடன் சனநாயக மரபு வளரவும், சமய சகிப்புத்தன்மை வளரவும் உதவியோடு பல பண்பாட்டு கலப்பு சூழலை ஏற்படுத்தியும் கல்வியுலகுக்கு அருஞ்சேவையாற்றியிருக்கின்றது. அத்துடன் சிறந்த விடுதிச்சாலைகள் நடாத்தி மாணவர்களுக்கு நல்லொழுக்கம் உயர்ந்த பயிற்சி ஆகியவற்றை வழங்கி சிறந்த சேவை ஆற்றியிருக்கிறது.

## Notes

(1) Sabapathy Kulandran : History of Jaffna College. Page 138


(2) " He was deeply impressed by everything he saw particularly by the magnificient library. This library was in his opinion the best of libraries attached to a school of this type in the world." Morning Star -Sept. 30, 1949.

(3) அம்பலவாணர். ஸ்ரீலங்கா மார்ச் 1958 - பக்கம் 26.

(4) அம்பலவாணர். ஸ்ரீலங்கா மார்ச் 1958 - பக்கம் 30.

(5) அம்பலவாணர். ஸ்ரீலங்கா மார்ச் 1958 - பக்கம் 31.

(6) அம்பலவாணர். ஸ்ரீலங்கா மார்ச் 1958 - பக்கம் 31.



Staff and Students

# 5. பட்டதாரிப் பிரிவு
# மூடப்படல்

## பட்டதாரிப் பிரிவு மூடப்படல் - அரசாங்கம் கையேற்பு

எழுபதின் முற்கூற்றில் பட்டதாரிப் பிரிவின் மாணவரின் எண்ணிக்கை கூடியதுடன் அவர்களுக்கான பாடங்களின் எண்ணிக்கையும் கூட்டியது. இக்காலப் பகுதியில் ஏறக்குறைய 450 மாணவர்கள் பட்டதாரிப் பிரிவில் கல்வி பயின்றனர். கலை, விஞ்ஞானம், வர்த்தகம், ஆகிய மூன்று துறைகளிலும் பல்வேறு பாடங்கள் போதிக்கப்பட்டன. யாழ்ப்பாணக் கல்லூரியுடன் தொடர்புள்ள ஒரு தொழில் நுட்ப நிறுவனமும் (Jaffna College Technical Institute) தொடங்கப்பட்டது. இதனால் கல்லூரி வழங்கிய மூன்றாவது மட்டக் கல்வி (Teritary Education) வலுப்பெற்றது. ஆகவே பட்டதாரிப் பிரிவு மேலும், மேலும் வளர்ச்சியடையும் என்பது உறுதியாயிற்று. ஆனால் அதன் வீழ்ச்சி 1974ம் ஆண்டில் சடுதியாக எதிர்பாராத விதமாக ஏற்பட்டது. இதன் விளைவாக பட்டதாரிப் பிரிவு மூடப்பட்டது.

பட்டதாரிப் பிரிவினை மூடுவதற்கு காரணமாக இருந்தது. அப்போதைய ஸ்ரீலங்கா கட்சி அரசாங்கத்தின் கல்லூரி கையேற்புக் கொள்கையே.

அரசின் இம்முடிவு நன்கு ஆராயப்படவேண்டிய ஒன்று. சிங்களப் பகுதிகளில் அப்பொழுது நிறுவப்பட்ட வளாகங்கள் அனைத்தும் இலங்கைப் பல்லைக்கழகத்தின் வளாகங்களாகவே கருதப்பட்டது. பல்கலைக்கழக மட்டத்திலான நிறுவனமொன்று பெறுவதற்காக பல்லாண்டுகளாக தமிழ் மக்கள் கோரியிருந்த போதும், அக்கோரிக்கை புறக்கணிக்கப்பட்டது. ஆனால் 1974ல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தினர் கல்லூரி கையேற்பின் மூலம் தமிழ் மக்களின் கோரிக்கையை நிறைவேற்றுவது போன்ற திட்டத்தை நிறைவேற்றினர்.

அரசாங்கம் யாழ்ப்பாணத்திலுள்ள இடைநிலைப் பள்ளிக்கூடம் ஒன்றை எடுப்பதற்கு முடிவு செய்தனர். அதனால் பரமேஸ்வராக் கல்லூரியை எடுத்து அதனை பல்கலைக்கழக மட்டத்திலான

நிறுவனமாக மாற்ற முடிவு செய்தனர். பரமேஸ்வராக் கல்லூரியும் அதனை விரும்பியது. அக்கல்லூரி சேர்.பொன். இராமநாதனால் நிறுவப்பட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள ஏனைய பள்ளிக்கூடங்களுள் போட்டிப் போட்டு முன்னேறமுடியாத அளவுக்கு அதனுடைய தரம் குறைந்து விட்டது. அக்கல்லூரி 1960 இன் முற்பகுதியில் அரசினால் கையேற்கப்பட்டது. கல்லூரியின் நம்பிக்கையாளர் சபைதான். அப்பொழுது அக்கல்லூரியின் உரிமையாளராய் பெயரளவில் இருந்தனர். அவர்கள் கல்லூரியை மூடிவிடுவதனை எதிர்க்கவில்லை. அதனால் கட்டிடங்களும் இடமும் புதிய பல்கலைக்கழக வளாகத்திற்கே பயன்படுத்தக் கூடியதாக இருந்தது. அதனை அபிவிருத்தி செய்வதற்கு பெருந்தொகைப் பணம் தேவைப்பட்டிருக்கும். புதிய கட்டிடங்களை கட்டுவதும், ஏற்கனவே இருந்தவற்றை திருத்துவதும் மேற்கொண்டு கட்டிடங்கள் கட்டுவதற்கான காணிகளை வாங்கி விஞ்ஞான கூடங்களையும், நூல்நிலையங்களையும், விடுதிகளையும் ஏற்படுத்துவதற்கு பெருந்தொகைப் பணம் தேவைப்பட்டது. இதனை தருவதற்கு அரசாங்கம் தயாராக இல்லை. அத்தகைய ஒரு வளாகத்திற்கு இவ்வளவு பணம் செலவிடுவதை அவர்கள் நினைத்தும் பார்க்கவில்லை. ஆகவே அவர்கள் வேறு ஒரு திட்டம் தீட்டினர்.

ஏற்கனவே கட்டிடவசதிகளும், உபகரணங்களும் உள்ள பல்கலைக்கழக மட்டத்திலான நிறுவனமொன்றை கையேற்க எண்ணினர். அப்படியானால், யாழ்ப்பாணக்கல்லூரியே கையேற்க வேண்டும். அங்கே ஏற்கனவே பட்டதாரிப் பிரிவும் விஞ்ஞானகூட, நூல்நிலைய வசதிகளும் உண்டு. பிறிதொரு நன்மை என்னவெனில் யாழ்ப்பாணக்கல்லூரி அமெரிக்க மிஷனரிகளால், அமெரிக்க நிதியுதவியுடன் இயங்கும் கிறிஸ்தவ நிறுவனமாக இருப்பதனால் அதனை கையேற்பதன் மூலம் கிறிஸ்தவ எதிர்புணர்வுள்ள இந்துக்களை திருப்திப் பண்ணலாம் என்றும் எண்ணினார்கள். அப்போதைய வட்டுக்கோட்டை பிரதிநிதியாக இருந்த தியாகராசா அவர்கள் அரசினருக்கு உதவியாக இருந்தார். அவர் இவ்விஷயத்தை

உணர்வு பூர்வமாக செய்தார். தேசிய நலன் கருதி யாழ்ப்பாணக் கல்லூரியையும், அதன் கட்டிடங்களையும், உபகரணங்களையும் பயன்படுத்தி அதனை யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகமாக்க வேண்டுமெனக் கோரினார். ஒரு வகையான இணைப்பு ஒன்றை அவர் எதிர்பார்த்தார். பரமேஸ்வரா வளாகத்தையும், யாழ்ப்பாணக்கல்லூரி வளாகத்தையும் ஒன்றினைப்பதே அவரது நோக்கம். இவ்விரண்டு வளாகங்களுக்கிடையே 7அல்லது 8 மைல்களாக இருந்தும் அது பற்றி திரு.தியாகராஜா அவர்களோ அதிகாரிகளோ கவலைப்படவில்லை. திரு.தியாகராஜா அவர்களுக்கு தனிப்பட்ட குறைகளும் யாழ்ப்பாணக் கல்லூரியைப் பொறுத்தவரை இருந்திருக்க வேண்டும். முந்தைய பொதுத் தேர்தலில் அவர் தெரிவுசெய்யப்பட்டபோது அவருக்கு யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்தவர்கள் ஆதரவு வழங்கவில்லையென எண்ணினார். அயலிலுள்ள இரண்டாந்தர கல்லூரியொன்றில் பல ஆண்டுகளாக அவர் அதிபராக இருந்தார். அக்கல்லூரி நீண்டகாலமாக யாழ்ப்பாணக்கல்லூரியினால் மேலெழும்ப முடியாமல் இருந்தமையால் அவருடைய ஆசைகளை நிறைவேற்ற முடியாமலிருந்தது. ஆகவே திரு.தியாகராஜா கையேற்பு இயக்கத்தில் முழு ஆர்வமுடன் ஈடுபட்டார். யாழ்ப்பாணக்கல்லூரியை ஒழித்துவிட வேண்டும் என்ற எண்ணங்கொண்ட வேறு சிலரையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டார். யாழ்ப்பாணக்கல்லூரியில் படித்து பயனடைந்து கல்விமான்களாகிய இந்துக்களும், பிரபல்யமான இந்துக்களும், கல்விபயிலும் மாணவரின் பெற்றோர்களும் இக்கையேற்பை பலமாக எதிர்த்தனர்.

அப்போதைய தேசிய வீடமைப்பு அமைச்சராக இருந்த திரு.பீட்டர் கெனமன் 29.07.1974ல் யாழ்ப்பாணக் கல்லூரியின் கட்டிடங்களைப் பார்வையிடுவதற்காக கல்லூரிக்கு சமுகமளித்திருந்தார். யாழ்ப்பாணக் கல்லூரியின் தலைவர் டாக்டர் லூதர் ஜெயசிங்கத்தினால் தேனீர் விருந்தொன்று அளிக்கப்பட்டது.

அரசாங்க கொள்கை விளக்கம்

வட்டுக்கோட்டை எம்.பி.திரு.எ.தியாகராசா, கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் பி.உடுகம, கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திரு.ஆர்.பாஸ்கரலிங்கம், யாழ்ப்பாண மேயர் திரு.அல்பிறட் துரையப்பா, யாழ்ப்பாண வளாகத்தின் புதிய தலைவர் டாக்டர்.க.கைலாசபதி ஆகியோரும் இத்தேனீர் விருந்தில் கலந்து கொண்டனர்.

அங்கு உரையாற்றிய அமைச்சர் பின் கண்டவாறு சொன்னார். "யாழ்ப்பாணக்கல்லூரியை எப்படியாவது கையேற்று இங்குள்ள ஒருபகுதி மக்களின் மேல் வஞ்சம் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று அரசு எண்ணவில்லை. கடந்த சில வாரங்களாக இக்கல்லூரியை எடுக்க வேண்டும், எடுக்கக்கூடாது என்றெல்லாம் கேட்டுக் கொள்ளும் பல மனுக்கள் எனக்கு தபாலில் அனுப்பப்பட்டன."

**(1) ஈழமணி - 27.7.1974 -பக்கம் 4.)**

அவைகளைக் கொண்டு நாம் ஒரு தீர்மானத்திற்கு வரப்போவதில்லை. ஆனால் பல்கலைக்கழகத்திற்கு வளாகம் ஒன்றை, அதுவும் பூரணத்துவம் வாய்ந்த வளாகம் ஒன்றை எப்படியாவது இந்த ஒக்டோபர் மாதத்திற்கு முன்னர் அமைத்தவிட வேண்டுமென்றே அரசு தீர்மானித்துள்ளது.

ஆகவே முழுமையானதொரு வளாகம் அமைய வேண்டுமேயாகில் இங்குள்ள பலரது ஒத்துழைப்பு எமக்குத் தேவை. புதிய கட்டிடங்களைக் கட்டி வளாகத்தை திறப்பதென அரசாங்கம் தீர்மானித்தால் வளாகத் திறப்பு விழா அடுத்த 10அல்லது 15 வருடங்களுக்குள் நடைபெறாது போய்விடும் என்பதே எனது கருத்து. இவையெல்லாவற்றையும் மனதிற் கொண்டு தான் அரசாங்கம் சில முடிவுகளை எடுக்க முன்வந்துள்ளது."

## கையேற்பு தொடர்பாக சிலரின் கருத்துக்கள்

கல்வி பயிலும் மாணவரின் பெற்றோரின் பிரதிநிதிகள் சிலர் கருத்துத் தெரிவிக்கையில் பின் கண்டவாறு கூறினார்கள்.

2) "யாழ்ப்பாணக் கல்லூரியை அரசாங்கம் சுவீகரித்தால் கல்லூரி மாணவர்கள் பல கஷ்டங்களை அனுபவிக்க வேண்டி நேரிடும். மாணவரின் மொத்த தொகையில் 100க்கு அதிகமானோர் வட்டுக்கோட்டைக் கிராமத்திலிருந்தே பாடசாலைக்கு செல்கிறார்கள். கல்லூரியை அரசாங்கம் சுவீகரித்தால் இவர்கள் கல்வி கற்க அக்கிராமத்தில் வேறு பாடசாலைகள் கிடையாது. யாழ்ப்பாண பரமேஸ்வராக் கல்லூரியின் விடயத்தில் இப்பிரச்சனை எழவில்லை. காரணம் யாழ்ப்பாண நகரில் அக்கல்லூரி மாணவர்களை அனுமதிக்க பல 'ஏ' கிறேட் பாடசாலைகள் இருக்கின்றன. ஆனால் வட்டுக்கோட்டையில் ஒரு 'ஏ' கிறேட் பாடசாலையும் கிடையாது. ஆகவே இந்த மாணவர்கள் முக்கியமாக மேல் வகுப்பு மாணவர்கள் கல்வி கற்க வசதியற்று தெருவில் விடப்படும் நிலை ஏற்படும்" இவ்வாறு அவர்கள் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள்.

**(2) தினகரன் 14.7.1974)**

## ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவை விடுத்த அறிக்கை

யாழ்ப்பாணத்தில் அரசினால் ஆரம்பிக்கப்படவிருப்பதாகக் கூறப்பட்ட பல்கலைக்கழக வளாகத்தைப் பற்றி ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவை விடுத்திருந்த அறிக்கை பின்வருமாறு:-

3) "தமிழர்களது கல்வி, கலை பண்பாட்டை பேணிக்காத்து வளர்க்க தன் நிறைவும் பூரணத்துவமுள்ள ஒரு தமிழ் பல்கலைக்கழகம் வேண்டுமென்ற தமிழ் மக்களது நீண்ட நாள்

கோரிக்கை புறக்கணிக்கப்பட்டு, வளாகம் என்ற பெயரில் ஒரு புதுமாதிரியான அமைப்பை ஏற்படுத்துவது தமிழ் மக்களின் கண்ணில் மண்ணைத் தூவி அவர்களை ஏமாற்றும் ஒரு முயற்சி என ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவை கருத்துத் தெரிவிக்கிறது. தமிழ் பேசும் மக்களுக்கென தனித்தமிழ் பல்கலைக்கழகத்தை யாரேனும் எப்பொழுதாகிலும் கொடுத்துவிடக் கூடாதென்று நச்செண்ணத்தால் இப்போதுள்ள பல்கலைக்கழகத்தை விட இன்னொரு பல்கலைக்கழகம் உருவாக்க முடியாதவண்ணம் அரசு சட்டம் இயற்றியுள்ளதை இச்சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

**(3) சுதந்திரன் 28.7.1974)**

இந்த வளாகத்திற்கு யாழ்ப்பாணத்திலுள்ள இரண்டு பழைய சிறப்பான கல்லூரிகளை மூடிவிட்டு அதன் கட்டிடங்களை சுவீகரிப்பது, வழித்தேங்காயை எடுத்து தெருப் பிள்ளையாருக்கு அடித்த கதையாக இருக்கிறது. தென்னிலங்கையில் வித்தியோதயலங்கார வளாகங்களுக்கு பலகோடி பணம் செலவழித்து செலவழிக்கின்ற அரசு சில இலட்சங்களை செலவழித்து புதிய கட்டிடங்கள் எழுப்ப மனமில்லாது இருப்பது அரசின் உளப்பாங்கைத் தெளிவாகக் காட்டுகிறது.

எனவே தமிழ் இனத்தின் மொழி, கலை, பண்பாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு தன் நிறைவும், பூரணத்துவமும் நிறைந்த பல கலையும் பயிலுவிக்கும் கல்விக்கோவிலே தமிழ் மக்களது இறுதி இலட்சியமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.”

## கொழும்பு தமிழ் வாழ் மக்களின் கோரிக்கை

கொழும்பு தமிழ் வாழ் மக்கள் அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் ஒரு முழுமையான பல்கலைக்கழக வளாகத்தை அமைக்க அரசாங்கம் எடுத்த முயற்சியைப் பாராட்டினார். அதேவேளையில்,

யாழ்ப்பாணக்கல்லூரியை இந்நோக்கத்திற்காக பயன்படுத்த வேண்டாமென அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுத்தனர்.

(4) Colombo Tamils Welcome Jaffna Campus
more Cut Oppose Jaffna College site

A meeting of members of the Tamil Community in Colombo of different walks of life unanimously resolved to express its appreciation of the Governments' decision to establish a full fledged campus in Jaffna.

It however, decided to appeal to the Government not to make use of Jaffna College for this purpose.

The Ceylon Daily News, Wednesday July 31,1974.

அரசு தனக்கு எவ்வித செலவுமின்றி பல்கலைக்கழக வளாகத்தை நிறுவி தமிழ் மக்களுக்கு ஒரு நன்மை செய்வது போல் இயங்கியதால் திரு. ஆ.தியாகராஜா தேர்தல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் சேர்ந்து அரசுக்கு ஆதரவு கொடுத்தார். அப்போதைய அமைச்சரவை யாழ்ப்பாணக் கல்லூரி கையேற்பதை முழுமையாக ஆதரிக்கவில்லை என்பதை கருத்திற் கொள்ளல் வேண்டும். இப்பிரச்சினை மீது அமைச்சரவையின் உள்ளேயே பிளவு இருந்தது. மேலும் பிரபல்யமான சிங்களத் தலைவர்மார் இதனை ஆதரிக்கவில்லை. ஏனெனில் இந்நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு இக்கல்லூரி பெரும் பங்களிப்பை செய்ததை அவர்கள் நன்றியுணர்வுடன் பார்த்தார்கள்.

1) சமுதாய நலன் விரும்பிகளும், பல தலைமை பொறுப்பை (Leading Citizens) வகிப்பவர்களும் அரசாங்கத்திற்கு அனுப்பிய மறுபரிசீலனை செய்யுமாறு கோரும் விண்ணப்பத்தின் நகலும்,

2) கல்லூரி கையேற்பு விடயமாக யாழ்ப்பாணக்கல்லூரி ஆளுகை

குழுவினர்(Board of Directors) அனுப்பிய மறு பரிசீலனை செய்யுமாறு கோரும் விண்ணப்பத்தின் நகலும், பிண்ணிணைப்பாக சேர்க்கப்பட்டுள்ளன,

இறுதியில், பல விவாதங்கள், கலந்துரையாடல்களின் பின், அரசு பட்டதாரிப் பிரிவை ஏற்பதாக முடிவு செய்தது. பட்டதாரிப் பிரிவு பயன்படுத்திய கட்டிடங்கள், காணிகள், உபகரணங்கள் போன்றவற்றையே அரசாங்கம் கருத்திற் கொண்டிருந்தது. ஏனையவர்களின் பொறாமைக்கு காரணமான முக்கியமான பிரிவுகள் அவையே எனவிளக்கம் கொடுக்கப்பட்டது. உதாரணமாக நூலகத்தை எடுத்துக் கொள்ளலாம். அந்நூலகம் கிழக்கில் மிகவும் சிறந்த கலையகமாக மேற்கத்தையவரால் மதிக்கப்பட்டது. பட்டதாரிப் பிரிவினால் அது பயன்படுத்தப்பட்டதெனக் காரணங்காட்டியே அதனை முழுமையாக கையேற்றனர்.

அரசின் இந்நடவடிக்கையின் விளைவாக, பட்டதாரிப் பிரிவு மூடவேண்டியேற்பட்டது. அதனால் யாழ்ப்பாணக் கல்லூரி ஒரு இரண்டாந்தர பாடசாலை நிலைக்குத் தள்ளப்பட்டது. அதாவது.நூலகமோ, விஞ்ஞான உபகரணமோ, கட்டிடமோ இல்லாத ஒரு இரண்டாந்தர பாடசாலை மட்டத்திற்கு அது தள்ளப்பட்டது.

## யாழ்ப்பாணக்கல்லூரி நிர்வாகத்தினரின் முழு எதிர்ப்பு

யாழ்ப்பாணக்கல்லூரி நிர்வாகத்தினர் முழு ஆற்றலுடன் இக்கையேற்பை எதிர்த்தனர். கல்லூரி தலைவர்சார்பாக திரு.ஜேம்ஸ் டி.ரட்ணம் என்பவர் கல்லூரி கையேற்பு சம்பந்தமாக மறுபரிசீலனை செய்யுமாறு, திரு.பீட்டர் கெனமன் அவர்களுக்கு தந்தி (Telegram) ஒன்றை அனுப்பியிருந்தார்.

(5) **COPY OF TELEGRAM.**

PIETER KEUNEMAN
C/O PRESIDENT,
JAFFNA COLLEGE,
VADDUKODDAI.

WHILE WELCOMING YOUR OWN SIGNAL AND DECISIVE CONTRIBUTION TOWARDS ESTABLISHMENT JAFFNA CAMPUS REGUEST YOU AND GOVERNMENT KINDLY TO AVOID TAKING OVER JAFFNA COLLEGE BECAUSE OF VERY IMPORTANT REASONS ALREADY SUBMITTED INVOLVING SERIOUS EDUCATIONAL DISRUPTION IN JAFFNA AND INTRODUCING EXTREMELY BITTER FEELINGS OF FRUSTRATION AND APPRENT VICTIMISATION AND INDEED MAKING ALL FEEL AS IF ONE BOON WAS GIVEN WITH RIGHT HAND AND ANOTHER TAKEN WITH LEFT HAND STOP THIS IS CONSIDERED VIEW OF LIFELONG AND PERHAPS OLDEST SURVIVING SUPPORTER OF PROGRESSIVE CAUSES IN SRI LANKA.

JAMES T.RUTNAM.

Colombo 26th July, 1974
35, Guildford Crescent,
Colombo 07.

இவ்வாறு பலர் முழு ஆற்றலுடன் இக்கையேற்பை பலர் எதிர்த்த போதும் அது தோல்வியிலேயே முடிந்தது.

யாழ்ப்பாணக் கல்லூரியை அரசாங்கம் இலங்கை பல்கலைக்கழக வளாகத்தின் ஓர் பகுதியாக்கினால் யாழ்ப்பாண மக்களுக்கு நேரிடும் குறைகளை விளக்கும் நோக்கமாக 5.8.1974 திங்கட்கிழமை மாலை 5.30 மணியளவில் யாழ்ப்பாணம் டிரிம் மண்டபத்தில் ஓர் பகிரங்கக் கூட்டம் நடைபெற்றது. அதேவேளை, கொழும்பு, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ஓர் பகிரங்க கூட்டம் 5.8.1974 திங்கட்கிழமை மாலை 6.00 மணியளவில் நடைபெற்றது.

வட்டுக்கோட்டை யாழ் மக்கள், பல பொதுஸ்தாபனங்கள், கல்லூரி பழைய மாணவ சங்கம், கொழும்பு வாழ் தமிழ் மக்கள் ஆகிய பலரும் எதிர்த்து, அரசாங்கத்தை இக்கையேற்பு விடயமாக மறுபரிசீலனை செய்யுமாறு கோரிக்கை விடுத்தபோதும் அவையாவும் தோல்வியிலேயே முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இருந்தபோதும், பரமேஸ்வரா யாழ்ப்பாணக் கல்லூரிகளை இணைத்து ஒரு பல்கலைக்கழக வளாகத்தை ஏற்படுத்துவது என்ற எண்ணம் நிறைவேறவில்லை. தொடர்ந்து வந்த காலங்களில் பரமேஸ்வராவளாகத்திற்கு ஒரு சில கட்டடங்களை சேர்த்து வளாகமாக அமைத்தனர்.

அது இன்று, யாழ்ப்பாண பல்கலைக்கழகம் என அழைக்கப்படுகின்றது.

இப்பொழுது, யாழ்ப்பாணக் கல்லூரியில் பட்டதாரிப் பிரிவை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்த பட்டதாரிப் பிரிவை மீண்டும் இவர்களால் ஏற்படுத்த மேற்கொண்ட திட்டம் பெரும்பாலும் நிறைவேற்றப்பட்டதை காண்கிறோம்.

யாழ்ப்பாணக்கல்லூரி ஆளுகைக் குழுவினர் (Board of Directors) பட்டதாரிப் பிரிவை ஏற்படுத்த ஒப்புதல் அளித்துள்ளனர். இதனால் இலங்கைப் பல்கலைக் கழகப்பரீட்சைகளுக்கு போதனை அளிக்கும் பட்டதாரிப் பிரிவு மீண்டும் யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆரம்பமாகியது. இத்திட்டம் வெற்றிகரமாக நிறைவேறுவதற்கு போதியளவு நிதி வசதிகளையும் மேலும் உதவிகளையும் கொடுத்து அரசு இக்கல்லூரிக்கு ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# பட்டதாரிப் பிரிவு
# 1990க்குப் பின்

## யாழ்ப்பாணக்கல்லூரி
## பட்டதாரிப் பிரிவு 1990க்குப் பின்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு விதமான உயர்கல்வி நிலையங்கள் அமைந்திருந்தன. 1823ம் ஆண்டு முதல் 1974ம் ஆண்டு வரை ஏதோ ஒரு வகையிலான உயர்கல்வி நிலையங்கள் யாழ்ப்பாணக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்று வந்தன. இதிலே இறுதியாக இயங்கிய உயர்கல்விப் பீடந்தான் பட்டதாரிப் பிரிவாகும். இது 1947-1974ம் ஆண்டு வரை இயங்கி வந்தமை முதல் நான்கு இயல்களில் ஆராயப்பட்டன. 1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக வளாகம் அமைக்கப்பட்ட பொழுது யாழ்ப்பாணக் கல்லூரி அரசினால் சுவீகரிக்கப்பட்டு வளாகத்தின் ஒரு பகுதியாக்கப்பட்டது. 1978ம் ஆண்டு இந்த வளாகம் திரும்பவும் யாழ்ப்பாணக் கல்லூரி நிர்வாகிகளிடம் அரசினால் கையளிக்கப்பட்டது. அப்போது பதவிக்கு வந்த ஐ.தே.கட்சியின் பிரதமர் மூலமாக யாழ்ப்பாணக் கல்லூரி ஆளுகைக் குழுவினர் **(Board of Directors)** கல்லூரியை மீளப் பெறுவதில் பெரும் முயற்சியை மேற்கொண்டிருந்தார்கள்.

யாழ்ப்பாணக் கல்லூரி வளாகம் கல்லூரி நிர்வாகிகளிடம் மீளக் கையளிக்கப்பட்டதும் கல்லூரியை மறுசீரமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கல்லூரிகளுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு போதியளவு நிதி வசதிகளையும் மேலும் உதவிகளையும் கொடுக்கத் தவறிய போதும் யாழ்ப்பாணக் கல்லூரி நிர்வாகத்தினர் ஏற்பட்ட இழப்புக்களை ஈடுசெய்வதிலும் கல்லூரியை பழைய நிலைமைக்கு கொண்டு வருவதிலும் பெரும் முயற்சிகளை மேற்கொண்டனர். தமிழ் மக்களுடைய உயர் கல்விப்பிரச்சினையை உணர்ந்தவர்கள் நாம் மீண்டும் பட்டதாரி பிரிவினை ஆரம்பிக்க வேண்டும் என்று கோரிக்கை வீடுத்தார்கள் 1989ம் ஆண்டு 20ம் நூற்றாண்டிற்கான கல்வி என்னும் பொருளில் ஒரு கலந்துரையாடல் வட்டுக்கோட்டை ஒட்லி மண்டபத்தில் நடைபெற்றது. பேராசிரியர் அ.துரைராசா துணைவேந்தர்

யாழ் .பல்கலைக்கழக பேராசிரியர் என்.பாலகிருஸ்ணன் கலைப்பீடாதிபதி முதலியோர் உட்பட பல/அறிஞர்கள் இக்கருத்தரங்கில் பேசினார்கள். யாழ் கல்லூரி பட்டதாரிப்பிரிவு ஆரம்பித்து வைக்கப்படல் வேண்டும். என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. அதி வண.கலாநிதி.எஸ்.ஜெபநேசன் இக்கருத்தரங்கை ஒழுங்கு செய்து தலைமை தாங்கினார்.யாழ்ப்பாணக்கல்லூரியின் பட்டதாரிப்பிரிவு யாழ் நகரில் இயங்கினாற்றான் அதிக பயன் விளையும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. இதற்காக 1993 இல் யாழ்ப்பாண போதனா வைத்திய சாலைக்கு முன்பாக வீடும், காணியும் வழங்கப்பட்டது

யாழ்ப்பாணக் கல்லூரி ஆளுகைக் குழுவினர் பட்டதாரிப் பிரிவை ஏற்படுத்த ஒப்புதல் அளித்தனர். இதனால் யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவில் **G.A.Q, G.S.Q** வகுப்புக்கள் ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பல தனியார் நிறுவனங்கள் பலர் இத்துறையில் ஆர்வம் செலுத்தத் தொடங்கின. 1990ம் ஆண்டுகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் டீனாக இருந்த பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அப்போது அதிபராக இருந்த வண.கலாநிதி.எஸ்.ஜெபநேசன் அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். அவர் **G.A.Q** வகுப்புக்களை தொடங்குவது தொடர்பாக அதிபருக்கு பூரண ஆதரவை வழங்கியிருந்தார். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் வெளிவாரி **(External)** மாணவர்களை பதிவு செய்யும் நடைமுறை வந்தமையால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்திற்கு **G.A.Q** மாணவர்களை ஆயத்தம் செய்யும் வகுப்புக்கள் யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டதாரிப் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டது. 1993ம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தில் **G.A.Q** பிரிவில் 16 மாணவர்கள் தோற்றி 13 மாணவர்கள் சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## யாழ்ப்பாணத்தில் பட்டதாரிப் பிரிவு

யாழ்ப்பாண நகரின் மையத்தில் அமைந்துள்ள போதனா வைத்தியசாலைக்கு முன்னால் கட்டிடத்தோடு அமைந்த ஒரு நிலப் பகுதியை யாழ்ப்பாணக் கல்லூரி கொள்வனவு செய்தது. வட்டுக்கோட்டையில் இயங்கி வந்த பட்டதாரிப் பிரிவு யாழ்ப்பாண நகருக்கு மாற்றப்பட்டது ஒரு புதிய முன் முயற்சியாகும். யாழ்ப்பாண மக்கள் வாழ்விலே முக்கிய பங்காற்ற வேண்டுமெனில் அதன் நடவடிக்கைகள் யாழ்ப்பாண நகரில் இடம்பெற வேண்டும். இந்த வகையில் யாழ்ப்பாண கல்லூரி நிர்வாகத்தினர் யாழ்ப்பாண நகரிலே அதன் சேவையை விரிவுபடுத்தினர். யாழ்ப்பாண நகரில் அமைந்துள்ள பட்டதாரிப் பிரிவு உயர்கல்வி **(Post Secondary Education)** வழங்கும் தளமாக விளங்கி வருகிறது.

## பேராயர் குலேந்திரன் ஞாபகார்த்த மண்டபம்

யாழ்ப்பாணக் கல்லூரி வளர்சிக்கு பெரும் பங்காற்றிய பேராயர் குலேந்திரன் ஞாபகார்த்தமாக ஒரு நிரந்தர கட்டிடம் அமைக்கப்பட்டது. இம் மண்டபம் பட்டதாரிப் பிரிவு கட்டிடப் பகுதியின் அருகாமையில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தை பேராயர் எஸ்.ஜெபநேசன் அவர்கள் வைபவ ரீதியாக திறந்து வைத்தார். இம் மண்டபத்திலே பட்டதாரிப் பிரிவு வகுப்புக்கள் நடைபெற்று வருகின்ற போதிலும் யாழ்ப்பாணக் கல்லூரியின் கலை நிகழ்ச்சிகள், பாரதி விழா, பட்டிமன்றம் போன்ற நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. கிறிஸ்தவ சமூக, சமுதாய மன்றத்தினால் (CISRS) ஒழுங்கு செய்யப்படும். கருத்தரங்குகள் (Seminars) வங்கியியல் கருத்தரங்குகள் போன்றவை இங்கு நடைபெறுகின்றன.

## பட்டதாரிப் பிரிவின் இணைப்பாளர்(Director)

யாழ்ப்பாணக் கல்லூரி நிர்வாகத்தினர் திரு.எஸ்.பாலச்சந்திரன் அவர்களை பட்டதாரிப் பிரிவின் இயக்குநராக நியமித்தனர். இவர் யாழ்ப்பாணக் கல்லூரியில் 25 வருடங்களுக்கு மேல் ஆசிரியராகப் பணியாற்றியவர். பட்டதாரிப் பிரிவு இவரின் தலைமையின் கீழ் நன்கு வளர்ச்சியடைந்து

வந்தமை குறிப்பிடத்தக்கது.

1994ம் ஆண்டில் **G.A.Q, G.S.Q, B.A Part I, Part II** ஆகிய வகுப்புகளுக்கு பேரதெனியா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பரீட்சைகளுக்கு மாணவர்களை ஆயத்தம் செய்து வந்தது. இவ்வாண்டில் இவ் பட்டதாரிப் பிரிவில் கல்விப் பொதுத் தராதர (உயர்தர) மாணவர்களுக்கு இரண்டாவது தடவையாக பரீட்சை எடுப்பவர்களுக்கு வகுப்புக்கள் தொடங்கப்பட்டன. இவை வார இறுதி நாட்களில் நடைபெற்று வந்தன. இவ்வகுப்புக்கள் யாவும் பேராயர் குலேந்திரன் மண்டபத்திலேயே நடத்தப்படடன.

1995ம் ஆண்டில் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வு பட்டதாரிப் பிரிவுக்கோ, யாழ்ப்பாணக் கல்லூரிக்கோ பாரிய சேதங்களை ஏற்படுத்தவில்லை. எனினும் வகுப்புக்கள் இக்காலப்பகுதியில் நடத்துவது இடைநிறுத்தப்பட்டது.

1997ம் ஆண்டு பட்டதாரிப் பிரிவு பேரதனியா பல்கலைக்கழகத்திற்கு **G.S.Q** பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்தியது. இப்பிரிவல் 22 மாணவர்கள் பதிவு செய்தார்கள். இவ்மாணவர்களுக்கான தாவரவியல், உயிரியல், இரசாயனவியல் போன்ற பாடங்களுக்கான வகுப்புக்கள் நடைபெற்றன. செயன்முறை வகுப்புக்கள் யாவும் யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டையில் நடாத்தப்பட்டன. இங்கு விரிவுரையாற்றிய விரிவுரையாளர்கள் யாவரும் பகுதி நேர விரிவுரையாளராகவே இருந்துள்ளனர்.

1998ம் ஆண்டு **G.S.Q** வகுப்புக்கள் தொடர்ந்து நடைபெற்ற போதிலும் பேராதெனிய பல்கலைக்கழத்திற்கு பதிவு செய்வதில் இடர்பாடுகள் காரணமாக மிகக் குறைந்த தொகையான மாணவர்களே வகுப்புக்களை பின்பற்றினர்.

1999ம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்பக் கல்லூரியை இலங்கை இராணுவத்தினர் ஆக்கிரமித்து இருந்தனர். இதனால் சில தொழில்நுட்ப வகுப்புக்களே குறைந்தளவில்

**(Automotie Engineering)**
**(Electrical Wiring)**
**(Welding)**
போன்ற வகுப்புக்கள் நடைபெற்றன. தொழில்நுட்ப கல்லூரி கணணி **(Computers Clases)** வகுப்புக்கள் யாவும் பட்டதாரிப் பிரிவிலேயே நடாத்தப்பட்டன. ஒரு வருட டிப்ளோமா கணணி வகுப்புக்கள்

**Australian Computer Society and Programmes like M.S.Phice Excel and Language** போன்ற வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

பட்டதாரிப் பிரிவு 2002ம் ஆண்டில் ஒரு புதிய அத்தியாயத்தை தொடங்கியது. ஸ்ரீலங்கா வங்கிகள் நிறுவனத்தினால் **(Institute & Bankers Srilanka)** யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவை அதன் முறைப்படி ஒப்புக் கொள்ளப்பட்ட கல்லூரியாக ஏப்பிரல் 20ம் திகதி 2002 இல் சான்றளித்து இதனால் 250 மாணவர்கள் வங்கிச் சான்றிதழ் கல்விக்கும் **(Certificate in Banking Education)** உயர்தர வங்கிச் சான்றிதழ் கல்விக்கும் மாணவர் **(Inrolled)** இவ்வகுப்புக்கள் ஆங்கிலத்திலம், தமிழிலும் பின் நேரங்களிலும் வார இறுதி நாட்களிலும் நடைபெற்று வருகின்றன.

வங்கியிலிலும், நிதியிலிலும் ஒரு சர்வதேச அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழை வங்கியியல் நிறுவனம் வழங்கி வருகின்றது.

## பட்டதாரிப் பிரிவின் இரண்டாவது இணைப்பாளர்

பட்டதாரிப் பிரிவின் இரண்டாவது இணைப்பாளராக திரு.A.குமாரவேல் அவர்கள் 2002ம் ஆண்டில் திரு.S.பாலச்சந்திரனின் மறைவுக்குப் பின் நியமிக்கப்பட்டார். திரு.குமாரவேல் ஆசிரியர் யாழ்ப்பாணக் கல்லூரியில் பொருளியல் ஆசிரியராக பணியாற்றியவர். தற்போது பட்டதாரிப் பிரிவில் பொருளியல், அரசியல், விஞ்ஞானம்

போன்ற பாடங்களுக்கு விரிவுரையாளராகவும் பணியாற்றி வருகின்றார்.

## பட்டதாரிப் பிரிவில் CIMA வகுப்புக்கள்

பட்டதாரிப் பிரிவின் மற்றுமொரு அத்தியாயம் **CIMA** வகுப்புக்களை தொடங்கியமையாகும். இவ்வகுப்புக்கள் இவ்வாண்டு தொடக்கம் நடைபெற்று வருகின்றன. 1965ம் ஆண்டில் இலங்கையில் **CIMA** அமைக்கப்பட்டது. 1973ம் ஆண்டில் ஐக்கிய இராச்சிய **CIMA** அமைப்பின் ஒரு கிளையாக்கப்பட்டது. 1988ம் ஆண்டில் அயர்லாந்து, தென்ஆபிரிக்கா பின்னர் மலேசியா, ஹொங்ஹொங் உடன் ஒரு பிரிவு என்ற அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டது. **CIMA** ஐப் பற்றிய தகவல்களைப் பெறும் இடங்களில் யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவு, 464, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரியும் CIMAவின் **(Propectus)** இடம்பெற்றுள்ளது. பட்டதாரி பிரிவை விட தகவல் பெறும் இடங்களாக கண்டி, காலி, இரத்தினபுரி, குருநாகல், மாத்தறை என்பனவும் குறிக்கப்பட்டுள்ளன.

**CIMA** மாணவராக பதிவு செய்வதற்கு க.பொ.த (சாதாரண/ G.C.E O/L) கணிதம் ஆங்கிலம் உட்பட 3 திறமைச் சித்திகளும் (Credit Pass), க.பொ.த (உயர்தர/G.C.E A/L) 2 திறமைச் சித்திகள் அல்லது ஒரு திறமைச் சித்தியுடன் பொது அறிவுப் பரீட்சையில் 40 சதவீதத்திற்கு மேற்பட்ட புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

பின்வரும் பல்கலைக்கழக பட்டங்களுக்கு **CIMA** மாணவர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | **B.Com** | - அடித்தள நிலை |
| | **B.B.A** | - அடித்தள நிலை |
| மட்டக்களப்பு | **B.B.A** | - அடித்தள நிலை |
| | **B.Com** | - அடித்தள நிலை |

**CIMA** வகுப்பில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு நிதி முகாமைத்துவத்திலிருந்து சந்தைப்படுத்தல், தொழில்நுட்பத் தொடர்பாடல் கூட்டுச் சட்டம் முதலிய பல்வேறு திறமைகளுக்கு வாய்ப்புக்களை வழங்கும்.

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவில் 2003ம் ஆண்டில் முதலாவது பிரிவில் 06 மாணவர்களும் இரண்டாவது பிரிவில் 14 மாணவர்களும் பதிவு செய்துள்ளார்கள்.

## விரிவுரையாளர்கள்

பட்டதாரிப் பிரிவில் இன்று 19பேர் விரிவுரையாளராக பணியாற்றி வருகின்றனர். இவர்களில் பலர் பகுதி நேர விரிவுரையாளராக பணியாற்றி வருகின்றனர்.

## G.A.Q

திரு.குமாரவேல் - பொருளியல், அரசியல், விஞ்ஞானம்
திரு.சிவாஜி - ஆங்கில இலக்கியம்
திரு.P.அருந்தவநாதன் - தமிழ்
திரு.V.யுகபாலசிங்கம் - மெய்யியல்
திரு.S.கருணதாஸ் - வர்த்தகம், கணக்கியல்
திரு.P.சந்திரவேல் - இந்துநாகரிகம்
திரு.P.தேவராஜா - கிறிஸ்தவம்
திரு.S.C.உலகநாதன்- புவியியல்
செல்வி.J.கவிதா - மொழியியல்
திரு.A.பிரிட்டோ - ஆங்கிலம்
திரு.N.P.கனேசராஜா - நாடகம்
திரு.J.தயாபரன் - பொருளியல்

## B.Sc.Banking

திரு.N.A.விமலேந்திரன் - தகவல் தொழிநுட்பம்
திரு.A.குமாரவேல் - பொருளியல்
திரு.S.S.கருணதாஸ் - கணக்கியல்
திரு.V.செந்தில்ராஜ் - முகாமைத்துவம்



Upali Ratnayake and Noel Vimalendran exchanging the Mou. Divisional Manager, CIMA Sri Lanka Division, Aruna Alwis and Coordinator. Jaffna College Undergraduate Section, A. Kumaravel are also in the picture.

| | |
|---|---|
| திரு.M.L.A.ஜமார் | - முகாமைத்துவம் |
| திரு.K.ஜெயரட்ணம் | - உயர் முகாமைத்துவம் |
| திரு.C.இராஜரட்ணம் | - சட்டம் |
| செல்வி.S.சிவானி | - சந்தைப்படுத்தல் |

**CIMA**

| | |
|---|---|
| திரு.N.A.விமலேந்திரன் | - வணிகவியல் கணிதம் |
| திரு.A.இராஜரட்ணம் | - சட்டம் |
| திரு.S.S.கருணதாஸ் | - நிதி கணக்கியல் |
| திரு.C.A.பு.ராஜன் | - முகாமைத்துவ கணக்கியல் |
| பதிவாளர் | - திரு.V.மகிந்தன் |

## பட்டதாரிப்பிரிவின் இன்றைய சேவை

20 வருடகாலம் போர் மேகங்களால் சூழப்பட்டிருந்த யாழ்ப்பாணம் 22-02-02 மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் யுத்தமற்ற அமைதியை கொண்டுள்ளது. இது வரைகாலமும் யாழ்ப்பாண இளைஞர்கள் தமது பல்வேறு கல்வித் தேவைகளுக்கு கொழும்பையே மையமாகக் கொண்டிருந்தனர். அக்கால எல்லையில் கொழும்பு சென்ற மாணவர்கள் பெரும்பாலும் உயர் மத்திய வகுப்பையும் முதல் வர்க்கத்தையும் சார்ந்த இளைஞர்களாக இருந்தனர். யுத்த அரக்கனின் கொடூரப்பிடியில் சிக்கித்தவித்த மாணவர்கள் பெரும்பாலும் கீழ் மத்திய வகுப்பையும் வறிய குடும்பங்களையும் சார்ந்தவர்களாகவே இருந்தனர். இவர்கள் கொழும்பு சென்று விரும்பிய கல்வித் துறையைத் தெரிவு செய்து படிப்பதென்பது நினைத்துக்கூடப் பார்க்க முடியாத நிலையாகும். யாழ்ப்பாணச் சமூகம் கல்வி சார்ந்த ஒரு சமூகம் ஆகும். இலங்கையில் உள்ள ஏனைய மாவட்டங்களை விட கல்வியின் மீது அதிக நம்பிக்கை வைத்து அதுவே தமது உண்மையான சொத்து எனக்கருதி வாழ்த்த சமூகம் யாழ்ப்பாணச் சமூகம்.இன்றைய யாழ்ப்பாணச் சமூகம் பல்கலைக் கழகத்திற்கு தமது பிள்ளைகள் தெரிவு செய்யப்படுவதையே முதன்மை நோக்காக் கொண்டுள்ளது. மிகச் சிறிய பின்னமே பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகின்றது. எஞ்சிய பெருந்தொகையான மாணவர்களின்எதிர்கால நிலைபற்றி

அதிகம் அக்கறை கொள்ளாமல் இருப்பது ஒரு பாரிய குறைபாடே. 21ம் நூற்றாண்டுக்குள் உலகம் நுழைந்து விட்டது. கல்வித்துறையில் மிகப் பெரிய மாற்றங்கள் நடைபெற்று வருகின்றன. இந்த நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ளவும் சர்வதேச நீரோட்டத்தோடு இணைந்து கொள்ளத்தக்கவகையிலும் நாம் எம்மை மாற்றிக் கொள்வது மிக அவசியமாகும். யாழ்ப்பாணத்தில் உள்ள அரச கல்வி நிலையங்கள் வரையறுக்கப்பட்ட வளங்களையும், தென்னிலங்கையை கையேந்தி நிற்கின்ற நிலையும், இனரீதியான இலங்கை வங்கியாளர் நிலையத்தின் அனுசரனையுடன் அதன் செயலாளர் நாயகமாகிய திரு.எல்லப்பொல என்பவரின் சிபார்சின் ஊடாக பிரிட்டன் மாண்கஸ்ரர் பல்கலைக் கழகத்தின் வங்கிக் கற்கை நெறிகளுக்கானஅங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாக யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டதாரிப் பிரிவு அமைகின்றது. 2001ம் ஆண்டு ஜுலை மாதம் மான்சென்சர் பல்கலைக்கழக பிரதிநிதி திரு. டேவிட் றெவுஸ் நேரடியாகப் பட்டப்பிரிவுக்கு வருகை தந்து, அதன் தகுதித் தன்மை பற்றி ஆராய்ந்து அங்கீகாரம் வழங்கியமை ஈண்டு குறிப்பிடத்தக்கது. இந்த இரண்டு வருடகாலப் பகுதியில் 272 மாணவர்கள் வங்கிக் கற்கை நெறிக்கான பரீட்சையில் தோற்றி சிறப்பான சித்திகளைப் பெற்றுள்ளனர். சில மாணவர்கள் சில பாடங்களில் இலங்கையிலேயே முதன்மையாக சித்தி பெற்று கொழும்பில் நடைபெற்ற வைபவத்தில் கௌரவ வர்த்தக அமைச்சர் கரு ஜெயசூரியா அவர்களிடம் இருந்து பரிசில்களையும் பெற்றுக் கொண்டனர். தொடர்ந்து இந்தக் கற்கை நெறியை மாணவர்கள் ஆர்வமாக பயில்வதோடு தொடர்ந்து இக்கற்கை நெறிகளுக்கான ஒவ்வொரு கட்டமும் **(CBF,ACBF,DBF,BSC BANKING)** முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

யாழ்ப்பாணக் கல்லூரிப்பட்டதாரிப் பிரிவில் 2003ம் ஆண்டு இலங்கையில் பிரபல்யமடைந்துவரும் இன்னொரு கற்கைநெறியான AAT ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கணக்கியல் நுட்பவியலாளர்களை தயார் செய்யும் இக்கற்கை நெறியை 100 மாணவர்கள் கற்கின்றனர். ஆங்கிலமொழி மூலமும் தமிழ் மொழி மூலமும் இக்கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக் கற்கைநெறி பாடசாலை மட்டத்தில் இருந்தே ஆரம்பிக்கக் கூடிய ஒரு கற்கை நெறியாகும். கல்விப்

பொதுத்தராதரப்பத்திர வகுப்பு முடிவடைந்து G.C.E A/L வகுப்பை ஆரம்பிக்கும் போது, முதல் வருடம் இக்கற்கைநெறியை கற்கும் வாய்ப்புள்ளது. அவ்வாறு கற்கும் மாணவர்கள் A/L பரீட்சையில் வெற்றிகரமாக சித்தியடையாத நிலை தோன்றினால் பொருத்தமான வேறு கற்கை நெறிகளைத் தொடரவும் தமது வாழ்க்கைத் தொழிலைப் பிரகாசமாகத் தெரிவு செய்து கொள்வதற்கும் இக்கற்கைநெறி உதவுகின்றது. இக்கற்கை நெறியை யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டதாரிப் பிரிவு மிகக் குறைந்த் கட்டணத்தை அறவிட்டு மாணவர்களைத் தூண்டுவிப்பதோடு குறைந்த வருமானமட்டக் குடும்பங்களில் உள்ள மாணவர்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக் கொடுக்கின்றது.

எமது பிரதேசத்தில் பல்வேறு வகையான கற்கைத் தெரிவுகள் தொடர்பாகவோ அல்லது தமது வாழ்க்கைய்யை வளமாக அமைத்துக் கொள்வதற்கான தொழில் வாய்ப்புக் கற்கைகள் தொடர்பாகவோ போதிய அறிவும் தகவல் பரிமாற்றமும் மாணவர்களிடமும் பெற்றோரிடமும் மிகக் குறைவாகவே இருப்பது கவலையளிக்கக் கூடிய ஒன்றாகும். யுத்தத்தினால் ஏற்பட்ட தாக்கங்களும் இதுவும் ஒன்று. கல்வித் தெரிவுகள் தொடர்பாகப் போதிய தகவல் பரிமாற்றம் அவசியம். அப்போதுதான் எதிர்காலம் பற்றிய சரியானதும் பொருத்தமானதுமான தெரிவினை மேற்கொள்ள முடியும். யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டதாரிப்பிரிவு இப்போது பல்வேறு வகையான கற்கைகள், உயர் கல்வி வாய்ப்புக்கள் தொடர்பான ஒரு தகவல் நிலையமாகவும் செயற்படுகின்றது. இது காலத்தின் கட்டாய தேவையாகும்.

## பட்டதாரிப்பிரிவின் எதிர்காலம்

யாழ்ப்பாண மக்கள் கல்வி முயற்சிகளிலே முக்கிய பங்காற்ற வேண்டுமென்ற நோக்கில் யாழ் நகரிலேயே பட்டதாரி பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணக் கல்லூரி உயர்கல்வியைக் கொடுக்க மறுபடியும் முயற்சிகளை எடுத்துக் கொள்ளுகின்றது. யாழ்ப்பாணக்கல்லூரி தன்னுடைய நீண்ட காலப் பணியில் முன்னோக்கிச் செல்லும் பொழுது உயர்கல்வியின் நிறைவான

பணியைச் செய்ய முற்பட்டுள்ளது. சமுதாயத்திற்கு ஒளிவீசும் மத்திய இடமாகக் காணப்படும் யாழ்ப்பாணக்கல்லூரிக்கு முன்னர் இருந்து போலவே சமுதாயத்திற்கு கல்வி அடிப்படையில் சேவை செய்ய சிறந்த வாய்ப்பிருக்கிறது.

## புதிய கட்டிடத்தொகுதி

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரிப்பிரிவில் புதிய கட்டிடத்தொகுதியை அமைப்பதற்கு ஆளுகைக்குழுவினர் முழு ஆதரவையும் கொடுத்து வருகின்றது. புதிய கட்டிடத்தொகுதிக்கு பேராயர் அதி.வண கலாநிதி.எஸ். ஜெபநேசன் தலைமையில் அடிக்கல் நாட்டு வைபவம் செப்டம்பர் மாதம் 5ம் திகதி மாலை 6.30 மணியளவில் நடைபெற்றது. பேராயர் இறைவேண்டல் செய்து அடிக்கல்லை நட்டார். அதனைத் தொடர்ந்து வண. கலாநிதி D.S.தியாகராஜா (யாழ்ப்பாணக்கல்லூரி ஆளுநர் குழு அங்கத்தவர்) வேதம் வாசித்தார். யாழ்ப்பாணக்கல்லூரி ஆளுநர் குழு தலைவர் திரு.A.ஞானதாசன் பட்டதாரிப்பிரிவு இயக்குனர் திரு.A.குமாரவேல் யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் திரு.N.A. விமலேந்திரன் ஆகியோரும் அடிக்கல் நாட்டினர். யாழ்ப்பாணக்கல்லூரி ஆளுநர் குழு (Board of Directors) பின்வரும் உருப்பினர்கள் இவ்வைபவத்தில் பங்கு பற்றி தங்கள் முழு ஆதரவை வழங்கினர்.

அதிவண. கலாநிதி எஸ்.ஜெபநேசன் (பேராயர்)
வண.கலாநிதி D.S. தியாகராஜா
திரு.A. ஞானதாஸ் (தலைவர்)
திரு.T.A .ஏர்னஸ்ட் (செயலாளர்)
திரு.G. இராஜநாயகம் (முகாமையாளர், பொருளாளர்)
திரு.C.D.சின்னக்கோன்
திரு.A. இராஜசிங்கம்
திரு.G. நியூட்டன்

இவ்புதிய கட்டிடத்தொகுதி அமைக்கப்பட்டதும் விரிவுரைகள் நடாத்துவதற்கான இடவசதி பற்றாக்குறை நீங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# நிறைவுரை

1823ம் ஆண்டு வட்டுக்கோட்டையிலே தோன்றிய உயர் கலாபீடம் வெவ்வேறு விதமான அமைப்புகளை கொண்டு விளங்கியது. 1823ம் ஆண்டு தொடக்கம் 1855ம் ஆண்டு வரை ஒரு பூரணத்துவம் வாய்ந்த பல்கலைக்கழகக் கல்லூரியாக இயங்கி வந்தது. தானே பரீட்சைகளை நடாத்தி பட்டங்களை வழங்கி வந்தது. வட்டுக்கோட்டை செமினரி 32ஆண்டுகாலமாக இயங்கி வந்தது. வட்டுக்கோட்டை செமினரியில் ஏறத்தாழ 700 மாணவர்கள் கற்றுத் தேறினார்கள். இவர்களுக்கு செமினரி பட்டதாரிகள் (Seminary Graduate) என்ற பட்டம் வழங்கப்பட்டது.

1872ம் ஆண்டு வட்டுக்கோட்டை செமினரி அமைந்திருந்த இடத்தில் யாழ்ப்பாணக்கல்லூரி உதயமாகிறது. இது பூரணத்துவம் வாய்ந்த கல்லூரியாக அமையமுடியவில்லை, ஆங்கிலத்திலே சில உயர் வகுப்புக்களை நட்த்தினார்கள். கல்கத்தா பல்கலைக்கழகப் பரீட்சைகளுக்கும் மாணவர்களைத் தயார் செய்தனர். ஆனால் பின்னர் கல்லூரிகள் தமது அமைவிடங்களுக்கு அருகிலுள்ள பல்கலைக்கழகப் பரீட்சைகளுக்கே மாணவர்களுக்கு போதனை அளிக்க வேண்டுமென்ற நிபந்தனை வந்தது. எனவே 1911ம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரி சென்னை பல்கலைக்கழகப் பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தயார் செய்தது. சென்னைப் பல்கலைக்கழகப் பரீட்சைகள் கல்கத்தா பல்கலைக்கழகப் பரீட்சைகளிலும் பார்க்க தரத்தில் உயர்ந்திருந்தமையால் யாழ்ப்பாணக்கல்லூரி மாணவர்கள் இப்பரீட்சையில் சித்தியடைய முடியவில்லை. எனவே, பல்கலைக்கழகப் பட்டதாரிகள் பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தயார் செய்யும்முறை நிறுத்தப்பட்டது.

1947ம் ஆண்டு மீண்டும் உயர்கல்வி முயற்சிகள் வட்டுக்கோட்டையில் ஆரம்பமாயின. அவ்வருடத்தில் தான் பட்டதாரிப் பிரிவு யாழ்ப்பாணக் கல்லூரியிலே ஆரம்பமாயிற்று. இப்பட்டதாரிப் பிரிவு இலண்டன பல்கலைக்கழகத்து Inter Arts, Inter Science, B.A., B.Sc., B.Sc(Econ) ஆகிய பரீட்சைகளுக்கு மாணவர்களைத்

தயார் செய்தது. Inter Arts, Inter Science பின்னர் இலண்டன் பல்கலைக்கழகத்தினால் (G.C.E.A/L) கல்விப் பொதுதராதர பரீட்சை (உயர்தரம்) என்று மாற்றம் செய்யப்பட்டது. 1961ம் ஆண்டு இலண்டன் பல்கலைக்கழகப் பரீட்சைகள் இலங்கையில் நிறுவப்படவே, இலங்கைப் பல்கலைக்கழகப் பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தயார் செய்தது.பட்டதாரிப் பிரிவு இயங்கிய காலத்திலே ஏறத்தாழ 250 பட்டதாரிகள் வட்டுக்கோட்டையிலிருந்து வெளியேறினார்கள். இப்பட்டதாரிப் பிரிவு இயங்கிய காலத்திலே இதுவே வடமாகாணத்தின் முக்கியமான உயர்கல்வி நிறுவனமாக விளங்கியது. பல சஞ்சிகைகளும், ஆய்வுநூல்களும் வெளியிடப்பட்டன. ஒரு சிறந்த நூல்நிலையம் இயங்கி வந்தது.

ஆனால் 1974ம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை அமைக்குமுகமாக அரசாங்கம் யாழ்ப்பாணக்கல்லூரியின் பட்டதாரிப் பிரிவை சுவீகரித்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தோற்றத்தைப் பற்றி பேராசிரியர் கா.சிவத்தம்பி கூறியவை ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

> இந்த யாழ்ப்பாணத்திற்குரிய இலக்கண இவக்கியச் செம்பாட்டு ஊற்றுக்களுடன் அமெரிக்காவில் தொடங்கி, வட்டுக்கோட்டையிற் கொப்பளித்துப் பாய்ந்த, சுதேச மயமாக்கப் போதனையில் ஓடிய, இலங்கை முழுவதற்கும் பொதுவான ஒரு தேசிய ஆராய்ச்சிப் பாரம் பரியமும் இணைந்தபொழுது தான் யாழ்ப் பாணமே பல்கலைக்கழகம் ஆயிற்று. யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழகந் தோன்றிற்று.

எனவே இச்சிறந்த பாரம்பரியம் நிறைந்த இக்கல்லூரி, பல்கலைக்கழகம் அமைக்கப்படுவதற்காக மூடப்பட்டது. யாழ்ப்பாணத்து உயர்கல்வி முயற்சி வட்டுக்கோட்டைபாரம்பரியத்தை இணைத்து செல்லவேண்டும் என்பதற்காகவே யாழ்ப்பாணக்கல்லூரியும் பல்கலைக்கழக வளாகத்தின் ஓர் அங்கமாக மாறியது.

எனினும், யாழ்ப்பாணக் கல்லூரியை 1978ம் ஆண்டு அரசாங்கம் மீண்டும் நிர்வாகிகளிடம் கையளித்தது. யாழ்ப்பாணக்கல்லூரி ஒரு சாதாரண பாடசாலையாக அமையாது. யாழ்ப்பாணக்கல்லூரியை உயர்கல்வியில் நாட்டம் கொண்டதாகவே இருந்து வருகின்றது. எனவே யாழ்ப்பாணக்கல்லூரி ஒரு சாதாரண சிரேஷ்ட பாடசாலையாக இருந்தாலும் இங்கு மீண்டும் உயர்கல்வி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. என்பதில் சந்தேகமில்லை. 1990ம் ஆண்டு மீண்டும் G.A.Q. வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. இது தொடர்ந்து வளர்ச்சியுற்று மீண்டும் ஒரு பட்டதாரிப் பிரிவாக விளங்குமென கருதப்படுகிறது. யாழ்ப்பாணக்கல்லூரியின் உயர்கல்வி பாரம்பரியமும், பணவசதியும் சுதந்திரச் சூழலுமே இம் முயற்சிகளுக்கு காரணமாக அமைகின்றன. இந்த வகையில் யாழ்ப்பாணக் கல்லூரியின் உயர்கல்வி முயற்சிகளில் 1947ம் ஆண்டிற்கும் 1974ம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இயங்கிவந்த பட்டதாரிப் பிரிவு முக்கியமான ஒருமைல்கல்லாகவே விளங்குகின்றது. 1990ம் ஆண்டுக்குப்பின் உயர் கல்வி நாட்டம் கொண்டு யாழ்ப்பாண நகரில் மையப்பகுதியிலேயே பட்டதாரிப்பிரிவு கட்டிடத்தொகுதி அமையப்பெற்று வளர்ச்சி பெற்று வருகிறது.

# பின்னிணைப்பு

Memorandum by leading citizens:

We learn that proposals have been made to the government that it should take over the premises of Jaffna College for the use of the Jaffna Campus of the University. We are fully acquainted with the history and work of the College and feel that it is making a significant and creative contribution as a private institution. We hope a way can be found to site the campus elsewhere than at Vaddukoddai so that the College can continue in its present form. We feel that Jaffna needs both a University Campus and Jaffna College.

We wish to commend to the sympathetic consideration of the Government the memorandum submitted by the Directors of the College, especially their request for an opportunity to explain more fully, through a representative deputation,the points mentioned in the memorandum.

Signed:-

The Rt. Rev. C.L.Abeynaike — Bishop in Colombo.

The Hon. Justice V. Sivasupramaniam — Member, Constitutional Court.Former Judge of the Court of Appeal of Ceylon: President, All Ceylon Hindu Congress.

# பின்னிணைப்பு

யாழ்ப்பாணக்கல்லூரிப் பட்டதாரிப் பிரிவில் பின்வரும் பாடங்கள் கற்பிக்கப்பட்டன.(1948-1974 காலப்பகுதி)

க.பொ.த. உயர்தரவகுப்புகளுக்கு.
For the G.C.E. Advanced Level

**கலை (Arts)**

சமஸ்கிருதம் (Sanskrit)
தமிழ் (Tamil)
ஆங்கில இலக்கியம் (English Literature)
வரலாறு (ஐரோப்பா & பிரித்தானியா) (History(Eur.& Brit.)
புவியியல் (Geography)

**விஞ்ஞானம் (Science)**

தூய கணிதம் (Pure Mathematics)
பிரயோக கணிதம் (Applied Mathematics)
இரசாயனம் (Chemistry)
பௌதிகவியல் (Physics)
தாவரவியல் (Botany)
விலங்கியல் (Zoology)
புவியியல் (Geography)

**பொருளியல் (Economics)**

பொருளியல் (Economics)
பொருளியல் வரலாறு (Economic History)
பிரித்தானிய யாப்பு (British Constitution)
வரலாறு (History (Eur.&Brit.)
தூயகணிதம் (Pure Mathematics)
புவியியல் (Geography)

நேர அட்டவணையைக் கருத்திற் கொண்டு (Time Table) பாடங்களை தெரிவுசெய்வது விடயமாக மாணவர்கள் பின்வரும் ஏதாவதொரு குழுவிழுள்ள பாடங்களை மட்டுமே தெரிவு செய்யாமல் என விதிக்கப்பட்டிருந்தது.

## கலை (Arts)

1

| | |
|---|---|
| சமஸ்கிருதம் | (Sanskit) |
| வரலாறு (ஐரோப்.பிரி.) | (History(Europe&Brit.) |
| ஆங்கிலம் இலக்கியம் | (English Literature) |
| தமிழ் | (Tamil) |

2

| | |
|---|---|
| சமஸ்கிருதம் | (Sanskrit) |
| வரலாறு (ஐரோப்.&பிரி.) | (History(Europe&Brit) |
| புவியியல் | (Geography) |
| தமிழ் | (Tamil) |

## விஞ்ஞானம் (Science)

1

| | |
|---|---|
| தூயகணிதம் | (Pure Mathematics) |
| பிரயோக கணிதம் | (Applied Mathematics) |
| பௌதிகவியல் | (Physics) |
| இரசயானவியல் | (Chemistry) |

2

| | |
|---|---|
| விலங்கியல் | (Zoology) |
| தாவரவியல் | (Botany) |
| புவியியல் | (Geography) |
| இரசாயனவியல் | (Chemistry) |

## பொருளியல் (Economics)

1

| | |
|---|---|
| பொருளியல் | (Economics) |
| பொருளியல் வரலாறு | (Economics History) |
| பிரித்தானிய யாப்பு | (British Constitution) |
| தூயகணிதம் | (Pure Mathematics) |

2

| | |
|---|---|
| பொருளியல் | (Economics) |
| பொருளியல் வரலாறு | (Economics History) |
| வரலாறு (ஐரோ.& பிரித்.) | (History Europe &Brit.) |
| பிரித்தானிய யாப்பு | (British Constitution) |

3

| | |
|---|---|
| பொருளியல் | (Economics) |
| பொருளியல் வரலாறு | (Economics History) |
| வரலாறு (ஐரோப். பிரித்.) | (History Eur.&Brit.) |
| புவியியல் | (Geography) |

இலண்டன் B.A., B.Sc., B.Sc.(Econ) வகுப்புகளுக்கு பின்வரும் பாடங்கள் கற்பிக்கப்பட்டது.

## கலை (Arts)

| | |
|---|---|
| சமஸ்கிருதம் | (Sanskrit) |
| தமிழ் | (Tamil) |
| வரலாறு | (History) |
| அறிவியல் | (Ethics) |
| புவியியல் | (Geography) |

## விஞ்ஞானம் (Science)

| | |
|---|---|
| தூயகணிதம் | (Pure Mathematics) |
| பிரயோக கணிதம் | (Applied Mathematics) |
| இரசாயனம் | (Chemistry) |
| பௌதிகவியல் | (Physics) |
| தாவரவியல் | (Botany) |
| புவியியல் | (Geography) |

## பொருளியல் (Economics)

கட்டாயமானது (Compulsories)

| | |
|---|---|
| பொருளியல் விதிகள் | (Principles of Economics) |
| பொருளியல் வரலாறு | (Economic History) |

## உசாத்துணை நூல்கள்


1. வட்டுக்கோட்டையில் வளர்ந்த தமிழ் : எஸ்.ஜெபநேசன்
   Jaffna College Alumni Association Centinary Sovenior 1879 - 1979

2. American Ceylon Mission : Dr.S.Jebanesan

3. Jaffna College Calander 1989

4. Jaffna College Undergraduate Department Prospectus 1961

5. Jaffna College Miscellany

6. Morning Star

7. A History of Jaffna College -By Sabapathy Kulenduan

8. Rev.J.Kelock " Christian Contribution to Education".
   Jaffna College Misellany 1947

9. The Northern Undergrade - Jaffna College

10. The Campus Report

11. Young Idea இளஞாயிறு

12. ஸ்ரீலங்கா - அம்பலவாணர்

1) A History of Jaffna College
by
Rt.Rev.S.Kulendran.

2) கையேற்பு காலத்தில் யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களகத்தில் பணிபுரிந்த கல்வித் திணைக்களக அதிகாரிகளுடன் மேற்கொண்ட கலந்துரையாடல்கள், அவர்களுக்கு கையேற்பு பற்றிய இரகசியங்கள் நன்கு தெரியும். குறிப்பாக, என்.ஆர். பாலசிங்கத்தை குறிப்பிடுகிறேன். அவர் கையேற்பு காலத்தில் கல்வி அதிகாரியாக யாழ்ப்பாணத்திலிருந்தவர்.கையேற்பின் பின்னணியில் நடந்தவையாவும் அவருக்கு நன்கு தெரியும்.

3) **திரு.ஆர்.பாலசுப்பிரமணிய ஐயர்-கலந்துரையாடல்.**

4) **பத்திரிகைகள்.**

1) ஈழமணி - 27.7.1974.
2) தினகரன் - 14.7.1974.
3) சுதந்திரன் - 28.7.1974.

## Schedule of events with dates re take - over of Jaffna College.

**10-7-74** Letter of adressd to Director, Jafna College, asking to ap pear for a meeting with the Minister of Education.

**16-7-74** First Conference with some members of the Board of Directors.

**20-7-74** Board of Derectors meet to consider the sitution. Special Committee appointed. Precident thanked for steps taken to prevent-take - over.

**26-7-74** Visit of the minister of Housing and Construction in his Capacity as chairman of Sub-Sectoral Committee on Education, social Overheads etc.

**31-7-74** Letter askink for a Second Conference to the Board .

**6-8-7-74** Second Conferens to the Members of the Bord .

**7-8-74** Acguistion Notices Posted in the College Premises.

**9-8-74** Letter to the Chairman, Board of Derectors about Govt decision.

**12-8-74** Gazitre Notification.

**13-8-74** Take-over with armed guard.
Conmference on inventorisation procedure.


14-8-74 Conference on matters inculding absorption. President of Jaffna Collage requested to send names of students and employees seeking absorption.

17-8-74 Board of Directors meet and declare Undergraduate Department closed.

23-8-74 Jafna Campus Precident's Letter to say that Vice Chancel lor is visiting the Vaddukoddai Premises on Ist and 2nd of september. V.C.regucsts meeting with students and employees of Undergraduate Deparment on 2-9-74.

28-8-74 Letters of discontinuance issures them of fair deal.

4-9-74 Minor Employees report for work at Tinnevely at reguest of V.C., and others interviewed non -acadamic staff and asked as many as Possible to report for work at Tinnevely either on the 8th or 9th of September.



Undergraduate Department - 2004



## நூலாசிரியர் பற்றி

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராக கடமையாற்றும் வண. G. நடராஜா அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தில் கலைமானி [B.A.(Economics)] பட்டத்தையும், டெல்கி பல்கலைக்கழகத்தில் வர்த்தமானி [B.Com] பட்டத்தையும், யாழ் பல்கலைக் கழகத்தில் பட்டப்பின்படிப்பு கல்வியியல், டிப்ளோமா [P.G.D.E.] பட்டத்தையும் செரம்பூர் இறையியல் கல்லூரியில் [B.D.] இறையியல் பட்டத்தையும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்து பொது நிர்வாக முதுகலைமாணி [M.A in Public Administration] பட்டத்தையும் பெற்றுள்ளார். British Business College இல் Dip.in.English சான்றிதழையும் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி பயின்ற வண. G. நடராஜா அவர்கள் 1980 ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியராக நியமனம் பெற்று இன்று விசேட தரம் ஒன்று ஆசிரிய பதவி [Grade I Special Post Holder] வகிக்கின்றார். மேலும் தென்னிந்திய திருச்சபை மதகுருவாகவும், யாழ்ப்பாணக் கல்லூரி குருவாகவும் [Chaplain] கடமையாற்றுவதோடு, க.பொ.த. உயதர வர்த்தகக் கல்வி பாடம், க.பொ.த. சாதாரண தர கிறிஸ்தவம், சமூகக்கல்வி ஆகிய பாடங்களில் கற்பித்தல் அனுபவம் உள்ளவர்.

அமைதியாக இருந்து பல களங்களில் செயற்பட்டு வரும் இந்நூலாசிரியர், துறைத்தலைவர், Sub Warden of Bunker Hall, Warden of Bunker Hall, Sub-Warden of Chelliah Hostel, உள்ளக விளையாட்டுப் பொறுப்பாசிரியர் [Master in Charge of Indoor Games] இல்ல ஆசிரியர் Hitch cock house, Secretary for Staff, Tennis Club, மாணவர் கிறிஸ்தவ அமைப்பின் காப்பாளர் [Patron of SCM], லீயோ கழக உதவிக் காப்பாளர் [Vice - Patron of Leo Club], தலைவர், செயலாளர் - யாழ்ப்பாணக் கல்லூரி YMCA, தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் - யாழ்ப்பாணக் கல்லூரி வட்டமேசை (Round Table - ஆசிரியர் கழகம்) Director - C.I.S.R.S., Jaffna Diocesan Secretary போன்ற பல்வேறு பதவிகளை அலங்கரித்து, கல்லூரி மீது பற்றுறுதியுடன் இந்நூலாக்கத்தில் ஈடுபட்ட செயற்திறன் போற்றுதற்குரியது.

25-01-2004 - வெற்றிவேல் சக்திவேல் B.A, B.S.M.S.
தெல்லிப்பளை.